
Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 16/50

දිනමුරසු වාරමලර් ஒக். 28 - நவ. 03, 2004

# வாரமலர் தினமுரசு

TH ... IONAL TAMIL WEEKLY முரசு 586



## வீரப்பன் வேட்டையாடப்பட்டது எப்படி?

## பிரபாவுக்கு சங்கரி எழுதிய மடல்

## கிழக்கு மக்கள் என்ன பாவம் செய்தார்கள்?



## கவனிப்பாரற்று கிடக்கிறோம்

## தோட்டத் தொழிலாளர்கள்



முரசு வாசகர்களுக்கு பணப் பரிசு

## கர்மத்தைப் போக்க தர்மம் செய்வோம்

கர்மத்தைப் போக்க தர்மம் ஒன்றே உகந்த வழி. ஆதலால் இயன்றளவு - முடியுமான வரை மனிதன் தர்மம் செய்து வாழப் பழகிக்கொள்ள வேண்டும். தர்மம் தலை காக்கும்; தக்க சமயத்தில் உயிர் காக்கும் என்ற பாடலும் நமக்கு இதை உணர்த்துகின்றது.


பஞ்சமா பாதகங்களைச் செய்துவிட்டு அதனைப் பாவ மன்னிப்பு மூலம் போக்கிக்கொள்ள முடியுமா? 14, 15, 16 ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் பாவமன்னிப்புப் பெறுவதற்காக பாவமன்னிப்புப் பத்திரங்களைப் பெற்று நொந்தவர்கள் கதை மறுக்க முடியாதவை.

தாம் செய்த வினைகளைத் தாமே அநுபவித்தாக வேண்டும். இதையேதான் இந்து சமயம் உறுதியாகக் கூறுகின்றது. வினை விதைத்தவன் தினையை அறுக்க முடியாது.

இவைகளில் இருந்து விடுபட நன்மையான காரியங்களை நாடுங்கள். தான, தர்மம் செய்வதில் தாமதியாதீர்கள். தக்க சமயத்தில் வந்து தலைகாக்கும் தர்ம காரியங்களைச் செய்வோம் என்றிராமல் அதை இன்றே அதுவும் நன்றே செய்து நலம் பெறுவோமாக!

**-சிவஸ்ரீ அ.அரசரெத்தினம், சேனையூர் - 06.**

# ஆன்மீகம்



## விடுவித்துக்கொள்ளுவோம்

உங்களைத் தொடுகிறவன் அவருடைய கண்மணியைத் தொடுகிறான்.

சகரியா 2 : 8.

சகோதரனே! சகோதரியே! நீங்கள்அவருடைய கண்மணிகள். இது சத்திய வேதம் கூறுகின்ற வார்த்தை. ஆனாலும் பிரச்சினைகள் இருக்கிறதே, தொல்லைகள் தாங்க முடியவில்லையே என்று நாம் அங்கலாய்க்கின்றோம். இந்த வாக்குத்தத்தத்தைக் தந்த தேவன் அதற்கு முன்னால் ஒரு கட்டளையும் கொடுத்திருக்கிறார். பாபிலோன் குமாரத்தியினிடத்தில் குடியிருக்கிற சீயோனே, உன்னை விடுவித்துக்கொள்., சகரியா 2 : 7

பாபிலோன் என்றால் குழப்பம் அல்லது தாறுமாறு என்று பொருள். அதிலே தற்பெருமை, மாம்ச செயற்பாடுகள், விக்கிரக ஆராதனை, மந்திரங்கள், சூனியங்கள், குறிகேட்டல், சோதிடம் இன்னும் எத்தனையோ காரியங்கள் அடங்கியிருக்கும். இந்த பாபிலோன் மாளிகையை விட்டு வெளியேறும்போது தேவனுடைய கண்மணியாக இருக்கும் உரிமை கிடைக்கிறது. ஒரு கிறிஸ்தவன். (ள்) தேவனை மட்டுமே விசுவாசிக்க வேண்டும். உன் மீட்பரும், தாயின் கர்ப்பத்தில் உன்னை உருவாக்கினவருமான கர்த்தர் சொல்லுகிறதாவது: நானே எல்லாவற்றையும் செய்கிற கர்த்தர்; நான் ஒருவராய் வானங்களை விரித்து, நானே பூமியைப் பரப்பினவர். நான் கட்டுக்கதைக்காரரின் குறிகளை அபத்தமாக்கி, குறி சொல்லுகிறவர்களை நிர்மூடராக்கி, ஞானிகளை வெட்கப்படுத்தி, அவர்கள் அறிவைப் பைத்தியமாகப் பண்ணுகிறவர். (ஏசாயா - 44:24-25;

தேவனிடத்தில் சேரத் தடைசெய்யும் அனைத்துக் காரியங்களையும் அகற்றிவிட்டு கிறிஸ்துவின் வழியில் நடப்போமாக. ஆமென்.

**-சகோ. போல் ஜோன், தெல்தெனிய.**

## மாண்புமிகு நோன்பு

மனித வாழ்வின் அனைத்துத் துறைகளுக்கும் நேர்வழி காட்ட வந்த அருள் மறையாம் அல்குர்ஆன் அருளப் பெற்ற புனித மாதத்தை நாம் அடைந்துள்ளோம். நோன்பு நோற்பது கட்டாயக் கடமையாகும். இது ஒரு வணக்கமாகும்.

விசுவாசிகளே! உங்களுக்குமுன் இருந்தவர் மீது நோன்பு விதிக்கப்பட்டிருந்தது போல நீங்கள் பயபக்தி அடையும் பொருட்டு உங்கள் மீது விதியாக்கப்பட்டுள்ளது. 2:183.

நோன்பு ஒரு கேடயம். அக் கேடயத்தின் மூலம் ஓர் அடியான் தன்னை நரகத்திலிருந்து பாதுகாத்துக்கொள்வான்.

-இப்னுமாஜா

நோன்பு வைப்பதற்கு ஸகர் செய்வது நபி வழியாகும். நீங்கள் ஸகர் செய்யுங்கள். நிச்சயமாக ஸகர் செய்வதில் பரக்கத் இருக்கின்றது.

-புகாரி

மேலும் நோன்பானது பருவமடைந்த, புத்தி சுவாதீனமுள்ள, நோன்பு நோற்கச் சக்தியுள்ள பிரயாணம் செய்யாத ஆண், பெண் மீது கட்டாயக் கடமையாகும்.

**-ரஸீன் ரஸ்மின், ரஹ்மத்புரம்.**

## கவிதைப் போட்டி இல.583



### பரிசுக்குரிய கவிதை

### பரிதாப நிலை!

மக்களுக்கு
வாக்களித்த - நீ
வாக்கு மாறாமல்
உண்மையுள்ளவனாய்
இருந்திருந்தால் - ஏன்?
இந்த முகக் கவசம்?
தேவைதானா....??

-பிரோஸ்கான், கிண்ணியா - 03.

## கவிதைப் போட்டி இல.586



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 03.11.2004

கவிதைப் போட்டி இல.586
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

**இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்**

### உன்னை....

சமூகத்துக்கு - நீ
முகத்திரையால்
மூடி மறைத்தாலும்
உனக்கு
உன்னைத் தெரியும் தானே....

*-எஸ்.எம்.றிஸ்வான், கிண்ணியா - 03.*

### இனந் தெரியாதவர்கள்

உலகின் மூலை முடுக்கெல்லாம்
ஊடுருவியிருக்கும்
பயங்கரவாதத்துக்கும் இங்கு கிழக்கு
முதல்
தலைநகர் வரை கொலைகள் செய்து
திரியும்
பயங்கரவாதத்துக்கும் உருவம்
இருக்கிறது.
ஆனாலும் அவர்கள்
இனந்தெரியாதவர்கள்.

*-வ.சந்திரபிரசாத், மாமாங்கம்.*

### பழி எடுப்பு

எட்டப்பனும்
கட்டப்பொம்பனும்
விட்டுப்போன
பழி எடுப்பு,
கட்டை உருவத்தில்
கண் தெரிய
முகம் மறைத்து
கச்சிதமாய்
தொடர்கிறதோ...?

*-நா.ஜெயபாலன், பிபிலை.*

### என்ன செய்ய....?

இன ஒழிப்பில்
இறங்கியுள்ள
ஏகாதிபத்திய
வாதியை
எதிர்க்கப்
புறப்படுபவனே...
இங்கு
தம்மினத்தையே
அழித்துக்
கொண்டிருப்பவர்களை
என்ன செய்வது....?

*-சங்கம ஹிஷாம், திருகோணமலை.*

### ஆடைக் கவசம்

அணு உற்பத்தி
அகிலமெங்கும்
வியாபிக்கும்
காலம்
அண்மித்துவிட்டதால்
அத்தகைய
தாக்கத்திலிருந்து
தப்பிப் பிழைக்க
புதிதாகத்
தயாரிக்கப்பட்ட
ஆடைக் கவசமோ
இது!

*-க.கமால்தீன், ஏறாவூர் -03.*

### பயிற்சியோ?

வாக்களிக்கத் தேவையாம்
இனிமேல் அடையாள அட்டை.
அதனால் வேறு விதமாகப்
பயிற்சி நடக்கிறதோ
கள்ள வாக்குப்
போடுவதற்கு!

*-த.நந்தலேஸ்வரன், மட்டக்களப்பு.*

### வேகம்!

இப்படித்தான்
வேகமாய்ப்
போகின்றன
நம் நாட்டில்
விலைவாசி
ஏற்றமும்
சகோதரப்
படுகொலையும்!
யாரும் நிறுத்த
முடியாத
வேகத்தில்!

*-சசிதா நாகேந்திரன், ஆரையம்பதி - 03.*

### வீண் வேலை!

போர் வீரன் போலும் உடை.
பை நிறைய வெடி பொருட்கள்.
எவரை இலக்கு வைத்தாய்;
ஏன் இந்த வீண் வேலை?

*-எம்.ஐ.அப்றோஸ், மருதமுனை.*

### முடிவு காண்பதெப்போ?

மூடிமறைக்கும்
முகத்திரைகளை
கிழிப்பதெப்போ?
முடிவில்லா மர்மங்களுக்கு
முடிவுதான் காண்பதெப்போ?

*-எஸ்.பி.பி.கணேஷ், தாண்டியடி.*

### 'அவமானம்'

பேரழிவு ஆயுதங்கள்
இருப்பதாகப்
பேய்க்காட்டியோர்
உயிர்காப்புக்
கவசத்துக்குள்
தலைமறைத்துத்
திரிகின்றாரோ....

*-ஞானசிங்கம், மகிமா குடும்பம், சுவீஸ்.*



## உங்கள் பக்கம்

### ஹட்டன் வெலிஓயா பாதைக்கு சீரான இ.போ.ச. பஸ்கள் தேவை

ஹட்டன், வெலிஓயா பிரதேசத்தில் கடந்த வருடங்களில் இரண்டு பஸ் வண்டிகள் சீராகச் சேவை செய்து அதிகப்படியான வருமானத்தையும் பெற்று வந்தன. அந்த நிலை மாறி ஒரு பஸ் மாத்திரம் சேவை செய்தது. கடந்த ஒரு சில மாதங்களாக ஒரு பஸ் தானும் முறையாக வேலை செய்வதில்லை.

இதனால் இப் பிரதேச மக்கள் மிகவும் சிரமப்படுகின்றார்கள். அதிலும் இப் பாதையில் முன் சேவை செய்த ஒரு சிறிய பஸ், தற்போது ஹட்டனுக்கும், கினிகத்தேனைக்கும் சேவை செய்கிறது. அப்பாதையில் ஏராளமான பஸ் வண்டிகள் சேவையில் இருந்தபோதும் இந்த மாற்றம் ஏனோ தெரியவில்லை. பொதுமக்கள் ஹட்டன் இ.போ.ச. கிளையில் கேட்டால் 'போதியளவு பஸ் இல்லை' என்ற பதிலே வருகிறது.

இதேவேளை பஸ் கட்டணங்களும் தூரத்திற்கேற்ப அறவிடுவதை விட சற்று அதிகமாகவே அறவிடப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது. இவற்றை சம்பந்தப்பட்டவர்கள் பரிசீலனை செய்ய வேண்டும். இப் பிரதேசத்தில் உள்ள பாடசாலை மாணவ, மாணவிகளும், ஆசிரியர், வர்த்தகர்கள் - ஏனைய காரியாலய உத்தியோகஸ்தர்கள், பொதுமக்கள் ஆகியோரும் இச் சிரமம் காரணமாக சொல்லொணாத் துயர்களுக்கும் வேதனைகளுக்கும் முகங் கொடுக்க வேண்டியுள்ளது.

ஆகவே, இதற்குப் பொறுப்பான போக்குவரத்துச் சபை அதிகாரிகளும், போக்குவரத்து அமைச்சரும் உடனடியாக ஹட்டன் பஸ் டிப்போவுடன் தொடர்புகொண்டு எங்கள் பிரதேச மக்களின் போக்குவரத்துச் சிரமங்களைத் தீர்த்து வைக்க ஏற்பாடுகளை செய்யுமாறு இப் பிரதேச பொதுமக்கள் சார்பில் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**-என்.ஜே.ஜேசுதாஸ், வெலிஓயா மே.பி., ஹட்டன்.**


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk


## வாசக[ர்] சாலை

### புகழுடன் வாழ்க!

முரசே உனை
முத்தமிட்டுக்
கொண்டேன் இன்று.
முன்பக்க அழகிய படமும்
அமைப்புகளும்
கிழக்கு நிலை,
பாப்பாமுரசு
கதையுடனே
கவிதைகள், கட்டுரைகள்
கண்டேன் - வாழ்க!
சீதனத்தின் சிறு கதையும்
சூப்பர் சூப்பர்.
சொல்லில் அடங்காப்
புகழ்
பெற்றுயர்ந்து வாழ்க!

*-எம்.ஐ.அப்றோஸ், மருதமுனை.*

### முரசே நீ வாழ்க!

ஒவ்வொரு வாரமும் வந்து
எம் மனதை மகிழ
வைக்கும் - என்
அன்பு முரசே - உன்
முயற்சிகள் என்றும்
சமூகத்தின் விடியலுக்காக
என்பது தெரிகின்றது.
எல்லோரும் மகிழும்
வண்ணம் இனிமையான
தகவல்களைத் தரும் முரசே!
உன் புகழ் எங்கும்
பரவட்டும் - பல விடயங்களை
அள்ளித் தரும் முரசே! - நீ
அன்பகலா ஆசான் நீ.
அனைவரின் அரவணைப்போடு
திகழும் நீ என்றும் வாழ்க;
வளர்க உன் சேவை - முரசே
உன் சேவை எமக்குத் தேவை.

*-ரஸீன் ரஸ்மின், ரஹ்மத்புரம்.*

தினமுரசு வாரமலர் ஆசிரியர் அவர்களுக்கு,
தங்களது வார இதழ் 579இல் சுபகீதா ஐயாத்துரை என்பவரால் எழுதப்பட்ட சிறுகதை தொடர்பாக விடயங்களைத் தெளிவு படுத்த விரும்புகிறேன்.
1994ஆம் ஆண்டு சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் கல்லூரிச் சஞ்சிகையான தாமோதரனில் எனது சிறுகதையான இரத்தப்பூமாலை வெளியாகியிருந்தது.
அதே சிறுகதையில் சிறிதும் மாற்றமின்றி கண்ணீர்ப்பூக்கள் என்று தலைப்பை மாற்றி, கதையின் பாத்திரங்கள் சிலவற்றையும் பெயரையும் மாற்றி செல்வி சுபகீதா தன்னுடைய பெயரில் அச் சிறுகதையை தங்களுக்கு அனுப்பி வைத்துள்ளார் அச்சிறுகதையைப் பிரசுரித்துள்ளீர்கள்.
ஏறத்தாழ பத்து வருடங்களின் முன் அந்தச் சிறுகதையை எழுதியவர் தற்போது இல்லை என்று சுபகீதா எண்ணியிருக்கிறாரோ....? அல்லது இத்தகு கதையைத் திருடி தன் கதையாக வெளியிடுவதன் மூலம் தன்னையும் ஒரு எழுத்தாளராகப் பிரபலப்படுத்த விரும்புகிறாரோ...?
இனிமேலும் இவ்வாறான தவறுகளுக்கு இடம் கொடுக்கமாட்டீர்கள் என்று நம்புகிறேன்.

*இவ்வண்ணம் ச. பிரேமினி.*

இலங்கையின்
இனிய தமிழ் முரசே!
உனது
இன்சுவை அம்சம்
அத்தனையும்
இனிமையிலும் இனிமை
இனியவர்களை
ஈர்த்துக் கொண்டவை.
அறிவு பூர்வம், "ஆன்மீகம்"
கற்பனைக்கு "கவிதை
போட்டி" சிரித்துச் சிந்திக்க
"சிந்தியா பதில்"
அறிவு கூர்மையை அளக்க
"குறுக்கெழுத்துப் போட்டி"
என,
அத்தனையும் அற்புதமே...!
நீண்டு நிலைத்து வாழ
வாழ்த்துக்கள்.

*-மு.மு.சுஸானா, கல்முனை.*

# இலங்கை வட பகுதி - தமிழக மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண முத்தரப்பு பேச்சுவார்த்தை வேண்டும்

## -இலங்கை கடற்றொழில் அமைச்சு அதிகாரி விளக்கம்

தமிழக மீனவர்கள் மூன்று வாரங்களுக்கு மேலாகக் கடலுக்குச் செல்லாமல் நடத்தி வரும் பணிநிறுத்தப் போராட்டத்துக்குச் சுமுகத் தீர்வு காணப்பட வேண்டுமென்று இலங்கை கடற்றொழிற்றுறை அமைச்சு அதிகாரியான என்.நாகேந்திரா தெரிவித்தார். இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்தார்களென்ற குற்றச்சாட்டின் பேரில் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை விடுவிக்கக் கோரியும் கைப்பற்றப்பட்ட மீன்பிடிப் படகுகளை உரியவர்களிடம் கையளிக்கக் கோரியும் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் நடத்தப்பட்டு வரும் பணி நிறுத்தப் போராட்டத்துக்குச் சுமுகத் தீர்வு காணப்பட வேண்டுமென்று அவர் வலியுறுத்தினார். இராமேஸ்வரம், நாகபட்டினம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், இராமநாதபுரம் ஆகிய கடலோரப் பகுதிகளைச் சேர்ந்த இலட்சக்கணக்கான மீனவர்கள் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டுள்ளனரென்று இராமேஸ்வரம் மீனவர் சங்கத் தலைவர் அருளானந்தம் தெரிவித்தார். இலங்கையின் கட்டுப்பாட்டிலுள்ள கச்சதீவுக் கடற்பரப்பில் தொழிலில் ஈடுபடத் தமிழக மீனவர்கள் அனுமதிக்கப்பட வேண்டுமென்பதும் அவர்களின் கோரிக்கைகளில் ஒன்றாகும்.

தீக்குளித்துத் தற்கொலை செய்யப் போவதாகவும் இலங்கைக் கடற்பரப்புக்குள் வெள்ளைக் கொடி தாங்கிய படகுகள் மூலம் இலங்கையின் வடபகுதிக்குள் நுழைந்து அகதி அந்தஸ்துக் கோரப்போவதாகவும் தமிழக மீனவர்கள் எச்சரிக்கை விடுத்திருப்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப் படுவதற்கான இறுதி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இத் தருணத்தில் இதில் அக்கறைகொண்ட இரு நாட்டு சக்திகளும் இப் பிரச்சினைக்குப் பின்னணியில் இருந்து செயற்படுவதாகப் பலத்த சந்தேகம் எழுந்துள்ளது. இப் பிரச்சினை குறித்து இந்திய மத்திய அரசு அதிகாரிகளுடனும் தமிழக மாநில அரசு அதிகாரிகளுடனும் இலங்கை அதிகாரிகள் பல தடவைகள் பேச்சு நடத்தியுள்ளனர். நவம்பர் மாதத்திலும் பேச்சுவார்த்தை நடைபெற 'ஏற்பாடாகியுள்ளது. இரு நாடுகளின் கடற்படை மற்றும் கடலோரக் காவற்படை அதிகாரிகள், இரு தரப்பு மீனவர் சங்கப் பிரதிநிதிகள், கடற்றொழில் அமைச்சு அதிகாரிகளை உள்ளடக்கி, பேச்சுவார்த்தையொன்றினை நடத்தி இப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்கிறார் நாகேந்திரா.

உண்மையில் பாரிய இழுவைப் படகுகள் மூலம் மீன், இறால் போன்றவற்றைப் பிடிப்பதற்கென எமது நாட்டின் வடபகுதிக் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழையும் தமிழக மீனவர்களால் எமது மீனவர்களே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். அவர்களின் வலைகளை பாரிய இழுவைப் படகுகள் சேதமாக்குகின்றன. மன்னார், பேசாலை, பருத்தித்துறை, குருநகர், பாசையூர் உள்ளிட்ட எமது வடபகுதி மீனவர்கள் தமது கடற்பரப்பிலுள்ள மீன் வளம் அபகரிக்கப்படுவதாகவும் தாம் தொழிலின்றி அவதிப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர். உண்மையிலேயே எமது கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழையும் எந்தப் படகையும் மீனவர்களையும் கைது செய்யும் அதிகாரம் எமது கடற்படைக்கு உண்டு. இருந்தபோதிலும் எமது அயல் நாடான இந்தியாவுடனும் தமிழகத்துடனும் எமது வட பகுதித் தமிழ் மக்களுக்கு இருக்கும் நெருங்கிய உறவுகளைக் கவனத்தில் கொண்டு நட்பு ரீதியில் சுமுகமாக இப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் அவர் சொன்னார்.

இதற்கிடையில் இந்திய கடலோரக் காவற்படையினரும் இந்திய கடற்படையினரும் கண்காணிப்பு மற்றும் ரோந்து நடவடிக்கைகளை அதிகரித்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

## "யாருக்கும் எதிரல்ல"

"உத்தேச இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் எந்த அமைப்புக்கும் எதிரானதல்ல. இரு நாடுகளின் நலன்களை மையமாக வைத்தே இவ்வொப்பந்தம் செய்துகொள்ளப்படவிருக்கிறது. குறிப்பாக இலங்கையின் ஐக்கியம், ஆட்புல ஒருமைப்பாடு, இறைமை ஆகியவற்றைக் கவனத்திலெடுத்தே இது மேற்கொள்ளப்படுகிறது" என்று இந்திய பாதுகாப்பமைச்சின் மேலதிகச் செயலாளர் ரஞ்ஜித் கிசார் தெரிவித்தார். இவரின் தலைமையில் ஐந்து அங்கத்தவர்கள் குழுவொன்று கொழும்பு வந்து பேச்சுவார்த்தை நடத்தியமை குறிப்பிடத் தக்கது. இதற்கிடையில் இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் என்.சி.விஜ இன்னும் சில தினங்களில் இலங்கை வரவுள்ளார்.

## மீண்டும் கற்பகம்

கொழும்பு, பம்பலப்பிட்டியில் நீண்டகாலமாக இயங்கி வந்து, முன்னைய நிர்வாகத்தின் சீர்கேடுகள் காரணமாக மூடப்பட்டிருந்த கற்பகம் உணவகம், கடந்த இருபதாம் திகதி காலை திறந்துவைக்கப்பட்டது. பனை அபிவிருத்திச் சபையின் தலைவரும் முன்னாள் எம்.பி.யுமான எஸ்.சிவதாசன் இந்த உணவகத்தைத் திறந்துவைத்தார். வடக்கு, கிழக்கு மக்களின் பாரம்பரிய உணவு வகைகளை விற்பனை செய்துவரும் இந்த உணவகம், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனையின் பேரில் நவீன மயப்படுத்தப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

## அவசர சிகிச்சையின் பின் சூசை நாடு திரும்பினார்

கடந்த 19ஆம் திகதி சிங்கப்பூர் சென்றிருந்த கடற்புலிகளின் பொறுப்பாளர் சூசையும் அவரோடு சென்றிருந்த ஏனையோரும் ஆறு நாட்களின் பின்னர் கடந்த 25ஆம் திகதி கொழும்பு திரும்பி வன்னி சென்றுள்ளனர். அவசர சிகிச்சைக்காக அவர் சிங்கப்பூர் சென்றதாகப் புலிகள் அறிவித்திருந்தபோதும் சிகிச்சையேதும் மேற்கொள்ளப்படாத நிலையில் அவர் நாடு திரும்பியுள்ளார். பதினான்கு வருடங்களுக்கு முன்னர் அவரது உடலுக்குள் புகுந்த துப்பாக்கி ரவையொன்றினை அகற்றுவதற்காகவே அவர் சிங்கப்பூர் பயணமானாரெனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், அமெரிக்காவிலிருந்து புலிகளின் சட்டத்துறை ஆலோசகர் வி.ருத்ரகுமாரும் லண்டனிலிருந்து சிங்கப்பூர் சென்றிருந்த புலிகளின் மற்றொரு ஆலோசகரான ஜோய் மகேஸ்வரனும் சூசையுடனும் அவருடன் சென்றிருந்த ஏனையோருடனும் தொடர்ச்சியாக மூன்று தினங்கள் மந்திராலோசனை நடத்தினரென்று அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. சூசையின் சொந்தச் சகோதரியை மணம் முடித்திருந்த மட்டு-அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஷ் விவகாரம் தொடர்பாகப் புலித் தலைமையுடன் ஏற்பட்ட சர்ச்சையையடுத்தே சூசை சிங்கப்பூருக்குப் பேச்சுவார்த்தைக்கென அழைக்கப்பட்டதாகச் சூசையோடு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன. புலி இயக்கத்துக்குள் கருணா விவகாரத்துக்குப் பின்னர் சூசை விவகாரத்தால் எழுந்த உட்பூசல் குறித்துத் தீர்வு காணும் முகமாகவே இப் பேச்சுகள் நடத்தப்பட்டதாகவும் தெரிய வருகிறது. ருத்ரகுமாரும் ஜோய் மகேஸ்வரனும் லண்டனில் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேசிய பின்னரே சிங்கப்பூர் சென்றிருந்தனரென்றும் குறிப்பிடப்படுகிறது. சூசைக்கும் பிரபாகரனுக்குமிடையில் எவ்வித பூசல்களும் கிடையாதென்று தமிழ்ச்செல்வன் பி.பி.சி. தமிழ் சேவைக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டிருந்தார். இருந்தும் அப்பலோ போன்ற நவீன வசதிகள் கொண்ட சர்வதேச தரம் வாய்ந்த தனியார் வைத்தியசாலைகள் கொழும்பில் இருக்கையில் பழைய காயத்துக்கு மருந்து தேட அவசர அவசரமாகச் சிங்கப்பூர் செல்ல வேண்டிய தேவையேன் ஏற்பட்டதென்பது தமிழ்ச்செல்வனுக்கு மட்டுமே புரிந்த விடயமென்கின்றார், அரசியல் ஆய்வாளர் மதிவண்ணன். என்றாலும் சிகிச்சை தேவையில்லையென்ற புத்திமதி, தற்காலிக ஒடுப்போடும் முயற்சியே என்றும் கூறினார் அவர்.

## கெரிக்கு வெற்றி வாய்ப்பு

அடுத்த வாரம் நடைபெறவிருக்கும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோன் கெரி வெற்றி பெறுவாரென்று நியூயோர்க் பத்திரிகைகள் ஆரூடம் தெரிவித்துள்ளன. முன்னாள் ஜனாதிபதி பில் கிளிண்டன், கெரிக்கு ஆதரவாகப் பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. இன்று வரை ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்படாத நிலையில் ஈராக் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதலை புஷ் நிர்வாகம் நியாயப்படுத்தியிருப்பது, அமெரிக்க மக்களிடையே பெரும் அதிருப்தியைத் தோற்றுவித்துள்ளது. அத்துடன் கடந்த தேர்தலில் கள்ள வாக்குகளால் புஷ் வெற்றி பெற்றாரென்று எழுந்த குற்றச்சாட்டும் மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

## ஜனநாயக வழிக்குத் திரும்பினாலும் வேட்டு

கருணா ஈ.என்.டி.எல்.எப்.புடன் கூட்டுச் சேர்ந்து ஜனநாயக ரீதியாக தமிழ் அரசியலை முன்னெடுப்பதற்குப் புதிய கட்சியொன்றினை ஆரம்பித்திருப்பதாக அறிவித்த கையோடு கருணாவின் அரசியல் பணிக்கு நெருங்கிய ஆதரவு வழங்குபவரெனக் கருதப்பட்ட கிங்ஸ்லி இராஜநாயகம் கடந்த 19ஆம் திகதி மாலை சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். மட்டக்களப்பு இருதயபுரத்தில் இக் கொலை நிகழ்ந்துள்ளது. முப்பது வருடங்களுக்கு மேலாகப் புலி இயக்கத்தின் செயற்பாடுகளிலும் அன்னையர் அவையிலும், பிரஜைகள் குழு போன்ற புலிகளின் வெகுஜன அமைப்புகளிலும் இணைந்து பணியாற்றியவர் அவர். கருணா புலி இயக்கத்துக்கெதிராகக் கிளர்ச்சி செய்து பிரிந்த பின்னர் மட்டக்களப்பு, அம்பாறையில் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட ஜோசப் பரராஜசிங்கத்தைத் தவிர அனைத்து வேட்பாளர்களுமே கருணாவுக்கு விசுவாசம் தெரிந்திருக்கிறார்கள். கிங்ஸ்லி இராஜநாயகத்தோடு அரியநேத்திரன், ஜெயானந்தமூர்த்தி, தங்கேஸ்வரி கதிர்காமன் ஆகியோரும் கருணாவின் விசுவாசிகளாகவே செயற்பட்டனர். தேர்தலின் பின்னர் ஒரு கிழமைக்கு கருணா கிழக்கிலிருந்து வெளியேறப்பட்ட பின்னர் கிங்ஸ்லியைத் தவிர ஏனைய அனைவருமே இரவோடு இரவாகப் பிரபா அணிக்கு விசுவாசம் தெரிவித்தனர். இதனையடுத்து பிரபா அணிப் புலிகளால் கைது செய்யப்பட்ட இவர், ஆயித்தியமலையில் தடுத்து வைக்கப்பட்டு, எம்.பி. பதவியை இராஜினாமாச் செய்யுமாறு வற்புறுத்தப்பட்டார். அவர் இராஜினாமாச் செய்த பின்னரே விடுவிக்கப்பட்டார். 38,633 விருப்புரிமை வாக்குகளைப் பெற்று எம்.பி.யாகத் தெரிவுசெய்யப்பட்ட கிங்ஸ்லி, எம்.பி.யாகச் சத்தியப் பிரமாணம் செய்யாமலேயே இராஜினாமாச் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டார். இவரைப் போன்றே தமிழ்த் தேசிய அரசியலில் நீண்டகாலமாக அக்கறையோடு செயற்பட்டுவந்த இவரது சகலனான மாலா இராமச்சந்திரன் என்பவர் மட்டக்களப்பில் நாகப்படையினால் சுட்டுக் கொல்லப்பட்டமை குறிப்பிடத் தக்கது. மட்டக்களப்பில் ஐ.தே.க. வேட்பாளர் ராஜன் சத்தியமூர்த்தி சுட்டுக் கொல்லப்பட்ட பின்னர் சுட்டுக் கொல்லப்பட்ட பாராளுமன்ற அரசியல்வாதி இவராவார்.

## ஆந்திர யுத்தக் குழுவுக்கு இலங்கையிலிருந்து நவீன ஆயுதங்கள்

ஆந்திர பிரதேசத்தில் இயங்கிவரும் "மக்கள் போராட்டக் குழு" என்கிற தீவிர இடதுசாரிப் போராட்டக் குழுவுக்கு புலிகள் இயக்கம் இலங்கையிலிருந்து நவீன ரக ஆயுதங்களைக் கடத்திச் சென்று கையளித்து வந்துள்ளது என்று கூறுகிறார் இந்திய இராணுவத்தின் முன்னாள் தளபதியான சங்கர் றோய் சௌத்ரி. 'சப்ரா இந்தியா' என்ற சஞ்சிகையில் இவர் எழுதிய கட்டுரையொன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இந்தியாவின் பந்தோபஸ்து மற்றும் அரசியல் நெருக்கடிகள் குறித்து ஆய்வுகளை நடத்தும் சுயாதீன நிபுணர்கள் அமைப்பொன்றினால் வெளியிடப்படுவது இந்தச் சஞ்சிகை. இந்தியக் கரையோரக் காவல் படைக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவல்களின்படி, 'புலிகளின் மீன்பிடிப் படகுகள்' மூலம் வங்காள விரிகுடா ஊடாகக் கடத்திவரப்பட்ட இந்த ஆயுதங்கள் மக்கள் யுத்தக் குழுக் கெரில்லாக்களிடம் கையளிக்கப்பட்டன என்றும் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் முதல் டிசம்பர் வரை ஆயுதங்கள் ஒழுங்கான முறையில் கையளிக்கப்பட்டன என்றும் ஓய்வுபெற்ற இராணுவத் தளபதி சௌத்ரி எழுதுகிறார். ஆந்திராவின் பால்நாடு கரையோரப் பகுதிக்கு இந்த ஆயுதங்கள் கடத்தி வரப்பட்டன என்றும் நவீன ரக ஆயுதப் பாவனைபற்றி மக்கள் யுத்தக் குழு கெரில்லாக்களுக்குப் புலிகள் பயிற்சியளித்தனரென்றும் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நக்சல்பாரி இயக்கத்தின் ஓர் அங்கமாக 'மக்கள் யுத்தக் குழு' செயற்படுகிறது. நக்சல்பாரிகள் தற்போது ஆந்திர மாநில அரசோடு சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருப்பதும் குறிப்பிடத் தக்கது.

## நோர்வேயிடம் கேள்வி

நோர்வே பிரதமருக்கு தமிழீழ ஐக்கிய விடுதலை முன்னணி கடந்த வாரம் அனுப்பிவைத்த கடிதமொன்றில், "புலிகள் இயக்கம் பல நாடுகளில் பயங்கரவாத அமைப்பெனத் தடைசெய்யப்பட்டிருக்கும் நிலையில் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக அந்த இயக்கத்தை நோர்வே அங்கீகரித்திருப்பது ஏன்? இவ்வாறான இயக்கமொன்று நோர்வேயிலிருந்தால் அதனை உங்கள் நாடு அங்கீகரிக்குமா?" என்று கேள்வி எழுப்பியுள்ளது. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் புலிகளும் ஆயுதப்படையினரும் மட்டுமே சமாதானத்தை அநுபவிக்கின்றனர். படுகொலைகளில் புலிகள் இயக்கம் ஈடுபடுவதை நன்கு தெரிந்திருந்தும் இதனைத் தடுத்து நிறுத்த நோர்வே ஏன் முன்வரவில்லை? ஆகக் குறைந்தது இதனைக் கண்டிக்கத் தயங்குவதேன்? என்றும் அக் கடிதத்தில் கேள்வி எழுப்பியுள்ளது.

## தொண்டமானுக்கு அழுத்தம்

சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்கு பண்டாரவுக்கு எதிராக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கொண்டுவரவிருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு இ.தொ.கா. ஆதரவளிக்க வேண்டுமென்ற கோரிக்கை கட்சிக்குள் வலுவாக எழுந்துள்ளது. சிரேஷ்ட உறுப்பினரொருவரின் தலைமையிலான உயர்மட்டக் குழுவொன்று இதற்கான அழுத்தத்தை இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமான் மீது செலுத்தி வருவதாக நம்பமாகத் தெரியவருகிறது. இ.தொ.கா. தலைவருக்குத் தேசிய மட்டத்தில் பங்களிக்கக் கூடிய அமைச்சுப் பதவி கிடைப்பதால் அவரால் மேலும் இந்திய வம்சாவளியினருக்குச் சேவையாற்றக் கூடிய சந்தர்ப்பம் கிட்டியுள்ளதெனத் தெரிவித்துள்ளதாக இவர்கள் தெரிவித்திருக்கின்றனர். தேசிய இனப் பிரச்சினைத் தீர்வுக்கு ஆதரவளிக்கப் போவதாகக் கூறிக்கொண்டே ஆளும் கட்சிக்கு ஆதரவளித்த இ.தொ.கா. ஸ்திரமான அரசொன்று அமைய உதவ வேண்டுமென்றும் அவர்கள் கூறுகின்றனர்.

## சமாதான முயற்சியைப் பாதிக்குமா?

"ஐரோப்பிய ஒன்றியத்தின் பயங்கரவாதப் பட்டியலில் புலிகள் இயக்கத்தைச் சேர்த்துக்கொள்ள எடுக்கப்படும் முயற்சி இலங்கையில் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளுக்கு இடையூறாக அமையும்" என்று 'டென்மார்க் தமிழர் ஒருங்கிணைப்பு ஒன்றியத்தின்' தலைவர் பஞ்சராஜா தம்பிப்பிள்ளை கூறினார். "அமெரிக்கா, கனடா, பிரிட்டன், அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாதப் பட்டியலில் இணைத்திருக்கும் பொழுது, டென்மார்க் இணைக்காதிருப்பது என்னை வியப்பில் ஆழ்த்துகிறது" என்று டென்மார்க் வெளிவிவகார அமைச்சர் பேர் ஸ்ரிக் மெல்லர் நான்கு வாரங்களுக்கு முன்னர் அந்நாட்டுப் பாராளுமன்றத்தில் பேசும்போது குறிப்பிட்டார். "அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் ஒரே மாதிரியான பயங்கரவாதப் பட்டியலைக் கொண்டிருக்க வேண்டுமென்று டென்மார்க் பாராளுமன்றத்தில் 117 தடவைகள் வலியுறுத்தப்பட்டுள்ளது. இருந்தும் இங்கு சில 'பாராளுமன்ற உறுப்பினர்கள் தூங்கிக்கொண்டிருக்கிறார்கள்" என்று அவர் காரசாரமாகக் குறிப்பிட்டார். டெனிஸ் மக்கள் கட்சி, கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி ஆகியவை புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாதப் பட்டியலில் சேர்க்க வேண்டுமெனக் கோரிக்கை விடுத்து வருவது குறிப்பிடத் தக்கது.

## நீதியரசர் விக்னேஸ்வரனின் மகனுக்கும் வாசுதேவவின் மகளுக்கும் திருமணம்!

நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனின் மகனுக்கும் தீவிர, புரட்சிகர இடதுசாரியென வர்ணிக்கப்படும் வாசுதேவ நாணயக்காரவின் புதல்விக்கும் அண்மையில் திருமணம் நடைபெற்றது. நீதியரசர் விக்னேஸ்வரன் தமிழ் புராண இதிகாசங்களில் ஆழ்ந்த புலமை உள்ளவர் மட்டுமல்ல, அவர் அவ்வப்போது தெரிவிக்கும் துணிகரமான கருத்துக்கள் அரசியல், சமூக, நீதித்துறை வட்டாரங்களில் பெரும் சர்ச்சையைக் கிளப்பியிருப்பதும் குறிப்பிடத் தக்கது. இலங்கையின் இனப் பிரச்சினையை விளக்கும் வகையில் அவர் சில வருடங்களுக்கு முன்னர் சொன்ன 'மாபிள் போளை'க் கதை பிரசித்தமானது. "நாங்கள் சிறுவயது மாணவர்களாக இருந்த காலத்தில் நாம் மாபிள் போளையடித்து விளையாடும் போது வரும் பெரிய வகுப்பு மாணவர்கள் எமது போளைகள் அனைத்தையும் பலாத்காரமாகப் பறித்துச் சென்று விடுவார்கள். நாம் அவற்றைத் திருப்பித் தருமாறு அடம்பிடிப்போம். பதினைந்து போளைகளை எடுத்துச் சென்றால், ஆறு போளைகளை மட்டுமே திருப்பித் தந்துவிட்டுப் போவார்கள் என்று இனப் பிரச்சினை குறித்து சூசகமாகத் தெரிவித்திருந்த கருத்து ஜனரஞ்சகமானது. புரட்சிகரத் தீவிர அரசியல் பேசினாலும் தனது பிள்ளைகளுக்கு அமெரிக்காவில் கல்வி கற்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த வாசுதேவ நாணயக்கார, தமிழர் பிரச்சினை குறித்துத் துணிகரமாக நியாயமான கருத்துக்களை முன்வைத்து வருபவரென்பது குறிப்பிடத் தக்கது.

# முரசம்

## கடமையைச் செய்யுங்கள்

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

**ஓய்வு பெற்றிருப்பதாகக் கருதப்படும் யுத்தத்தின் சுமைகளை நாடு முழுவதுமே சுமந்துகொண்டிருக்கிறது. இதற்கிடையில் விலைவாசி உயர்வால் பொருளாதார நெருக்கடி நாட்டு மக்களின் கழுத்தை நெரிக்கிறது. மறுபுறம் சமாதானப் பேச்சுக்கள் தொடரும் என்ற நம்பிக்கையும் இழந்து வருகின்றது. இந் நிலையில் எதிர்க்கட்சியிலும், ஆளும் கட்சியிலும் இருப்பவர்களில் சிலர் தெரிவித்துவரும் கருத்துக்களில் சுய அரசியல் இலாப நெடி அதிகமாகவே வீசுகிறது. தமது அரசு இருந்திருந்தால் நாட்டு நிலைவரம் இப்படிக் கவலைக்கிடமாகி இருக்காது என்று தற்போதைய எதிர்க் கட்சி மார்தட்டுகிறது. இவர்கள் அரசமைத்திருந்தபோது ஆக்கபூர்வமாக எதையும் செய்ததாகக் கருத முடியவில்லை. பல விடயங்களில் அவசரப்பட்டுக் கொண்டதாகவே புரிந்துகொள்ளப்படுகிறது. ஜனாதிபதி தலைமையிலான புதிய அரசைப் பொறுத்தவரை அரசாங்கத்தின் திறமையின்மை என்று கூறுவதை விடவும், சரியான அனுகுமுறையில் இல்லையென்ற சில கருத்துக்கள் இல்லாமல் இல்லை. தேசிய இனப் பிரச்சினையானது சிறு பொறியாய்த் தோன்றி பெருந் தீயாய் மாறும் வரை கண்டுகொள்ளாமல் இருந்தவர்கள் என்று பட்டியல் இட்டால் எந்த ஆட்சியாளர்களும் விதிவிலக்கல்ல. கடந்த காலத்தை விடுங்கள். நிகழ்காலத்தில் நாடு எதிர்நோக்கும் நெருக்கடிகளுக்குச் சாத்தியமான வழியில் தீர்வு காணப்பட வேண்டும். அவசரப்பட்டுக்கொள்வதோ, அனுகுமுறையில் பிழை விடுவதோ கசப்பான விளைவுகளுக்கே இட்டுச் செல்லும். பொருளாதார நெருக்கடி, சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடருவதில் காட்டப்படும் தாமதம், பரவலாக நடைபெறும் படுகொலைகள் போன்றவற்றுக்குத் தீர்வு காண்பது ஒவ்வொருவரினதும் கடமை சார்ந்த விடயமாகும். இதில் ஆளும் அரசு, எதிர்க்கட்சிகள், புலிகள் என எவரும் இக் கடமையில் இருந்து விலகிவிட முடியாது. சர்வதேச அவதானிப்பு நம்மை நோக்கித் திரும்பியிருக்கும் காலகட்டத்தில் ஒவ்வொரு தரப்பும் தனிப்பட்ட அரசியல் இலாபத்தைக் கருதாமல் நாடு எதிர்நோக்கும் நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதில் தமது பொறுப்பை உணர்ந்து செயலாற்றுவதே அவசியம்.**

■■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

நரன்

# அரசின் புதிய ஆலோசனைகளும் சர்வதேச சமூகத்தின் புதிய அணுகுமுறையும்

இலங்கை அரசாங்கத்துக்கும் புலிகளுக்கு மிடையில் யுத்த நிறுத்தம் நிலவுகின்ற போதிலும் பேச்சுவார்த்தைகள் முடக்கப்பட்ட நிலையிலேயே இருந்து வருகின்றன. புலிகள் இடைக்கால சுயாட்சி அதிகார சபை என்ற பெயரில் ஒரு இடைக்கால ஆட்சிக்கான வரைபை முன்வைத்து அதன் மீது மட்டுமே பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென வலியுறுத்தி வருகிறார்கள்.

ஆனால், அவ் வரைபானது, இலங்கையின் தற்போதைய அரசியல் யாப்புக்கு அப்பாற்பட்டிருப்பதாலும், அவ் வரைபின் சில அம்சங்கள் இலங்கையின் இறைமையை மீறுவதாகவும், இந்தியாவிற்குக் கூட அச்சுறுத்தலானதாகவும் அமைந்திருப்பதால், அதனைப் பேச்சுவார்த்தைக்கான அடிப்படையாக ஏற்றுக்கொள்வதில் பலத்த சிக்கல் எழுந்திருந்தது.

இலங்கை அரசாங்கத்தின் பிரதான பங்காளியான ஜே.வி.பி. புலிகளின் இவ் வரைபை நிராகரித்துள்ளது. அதனை அடிப்படையாகக் கொண்டு பேச்சுவார்த்தை நடத்துவது, நாட்டைப் பிரிப்பதற்கான பேச்சுவார்த்தையை நடத்துவதற்குச் சமனானதென அது கூறுகின்றது. ஜே.வி.பி.யின் அனுசரணையின்றி இந்த அரசாங்கத்தால் ஆட்சி நடத்த முடியாதென்பது வெளிப்படையான உண்மை.

இதேவேளை ஹெல உறுமயவும் புலிகளின் இவ் வரைபை நிராகரித்துள்ளது. மேலும் முஸ்லிம் காங்கிரஸ், நுவா மற்றும் பர்ராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் இதர முஸ்லிம் கட்சிகளும் இவ் வரைபில் முஸ்லிம்களின் அபிலாஷைகள் ஈட்டப்படவில்லையென்று தெரிவிக்கிறார்கள். மேலும் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் தரப்பினர் தனித் தரப்பாகப் பங்குபற்ற வேண்டுமென்று இவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். ஆனால், புலிகளும் புலிகளின் பாராளுமன்றப் பிரதிநிதிகளான தமிழர் கூட்டமைப்பினரும் இதனை ஏற்க மறுத்து வருகிறார்கள்.

இந் நிலையில்தான் ஜனாதிபதி பேச்சுவார்த்தையில் சகல தரப்பினரதும் கருத்துக்களை உள்வாங்கக் களமமைத்துக் கொடுக்குமுகமாக அரசியல் ஆலோசனைச் சபையொன்றை ஏற்படுத்தியிருந்தார். இதன் முதலாவது கூட்டமும் அண்மையில் நிகழ்ந்தேறியிருந்தது. அக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் சர்வதேச அக்கறையை வென்றெடுத்திருந்தன. குறிப்பாக, ஈ.பி.டி.பி. கட்சித் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் உரை சர்வதேச சமூகத்தின் மத்தியிலும் உள்நாட்டு அரசியல் வட்டாரங்கள் மத்தியிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருந்தது.

எனினும் சில கட்சிகள் இவ் அரங்கில் பங்கு பெறத் தயக்கம் காட்டி வருகின்றன. அரசியல் வேறுபாடுகள் இதற்குப் பிரதானமான காரணமாக அமைந்திருந்தன. தமிழர் கூட்டமைப்பினர் இவ் அரங்கை நிராகரித்தது மட்டுமன்றி, இது பேச்சுவார்த்தையைத் திசைதிருப்பும் முயற்சியெனவும் அறிக்கை விடுத்திருந்தனர்.

எடுத்த எடுப்பில் இவ்வாறு எவற்றையுமே நிராகரித்து விடுகின்ற இப் போக்குக் குறித்து பலத்த விமர்சனம் அரசியல் வட்டாரங்களில் எழுந்திருந்தது. சர்வதேச சமூகமும் இதனை ஒரு ஆரோக்கியமான வழிமுறையாக நோக்கவில்லை. என்ன பேசப்படுகிறது என்பதைக் கூடக் கிரகிக்காமல், இவ் அரங்கத்தில் ஏனையோரின் அபிலாசைகளுக்கு மதிப்பளிக்காமல், தமது கருத்துக்களைத் தெரிவிக்க வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தையும் பயன்படுத்தாமல் தாமே சகலதையும் தீர்மானிப்பவர்களாக முனைந்து நின்று மற்றைய எதையும் நிராகரிக்கும் இப் போக்கு, பேச்சுவார்த்தை என்ற கோட்பாட்டின் கருத்தியலுக்கே முரணானது என்று சர்வதேச மற்றும் உள்ளூர் அரசியல் வட்டாரங்கள் நோக்கின.

இது இவ்வாறிருக்க, அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை மீளத் தொடங்குவதற்கான புதிய பிரயத்தனங்களை மேற்கொண்டது. இம் முட்டுக்கட்டை நிலையைத் தாண்டிப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென்பதால் அதற்கான மாற்று வழிகளைத் தேட வேண்டிய அவசியம் அரசாங்கத்திற்கு இருந்தது. எனவே, அது தற்போது பேச்சுவார்த்தைக்கான புதிய ஆலோசனைகளைத் தயாரித்து முன்வைத்துள்ளது.

இந்தப் புதிய யோசனைகளை முன்னிட்டுப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க அது அழைப்பு விடுத்துள்ளது. இதற்காகப் புலிகளை இட்டு வரும்படி அது நடுவர்களான நோர்வே அரசாங்கத்தையும், சர்வதேச சமூகத்தையும் கோரியுள்ளது.

அரசாங்கத்தின் இப் புதிய அணுகுமுறைக்குச் சாதகமான பிரதிபலிப்புகள் சர்வதேச வட்டாரங்களில் ஏற்பட்டுள்ளன. இப் பேச்சுவார்த்தைகள் குறித்துப் புலிகளை முன்தள்ள ஜப்பானிய விசேட தூதுவராக யசூசி அகாஷி இவ் வாரம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். அவர் அரசாங்கத் தரப்பையும் புலிகள் தரப்பையும் சந்தித்து இது குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். அத்துடன் பேச்சுவார்த்தைக்கான நோர்வே அரசின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் இம் மாதம் மீண்டும் இலங்கை வந்து அரசாங்கத் தரப்பையும் புலிகளையும் சந்தித்து இப் புதிய ஆலோசனைகளையிட்டுப் பேச்சுவார்த்தை நடத்த வலியுறுத்வுள்ளார். இதை விட அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் ரிச்சேர்ட் ஆமிடேஜ் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலையடுத்து இலங்கை விஜயமொன்றை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார்.

இவை யாவும் சர்வதேச சமூகத்திடம் தோன்றியி ருக்கும் அதிகரித்த அக்கறையை வெளிப்படுத்து வனவாகவுள்ளன. அத்துடன் சர்வதேச சமூகத்தின் அணுகுமுறையிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அவையும் இங்கே பிரதிபலிக்கவுள்ளன.

சர்வதேச சமூகத்தின் ஆரம்பகால அணுகுமுறை மிருதுவானதாகவே இருந்தது. அதன் அணுகுமுறையில் இருந்த கோட்பாடானது, தீவிரவாதிகளை எவ்வாறாயினும் பேச்சுவார்த்தை மார்க்கத்தை ஏற்கப்பண்ணுவதிலேயே அக்கறை கொண்டிருந்தது. தீவிரவாதிகளின் தவறுகளைப் பெரிதுபடுத்தாமல் அவர்களிடமிருந்து வெளிவரக்கூடிய ஏதாவது நல்ல அறிகுறிகளுக்காக அவர்களை உற்சாகப்படுத்துவதிலேயே கரிசனை கொண்டிருந்தது. இதன்போது தீவிரவாதிகளுக்கு சர்வதேச சமூகம் கொடுக்கும் வரவேற்பானது, சர்வதேச சமூகமே தீவிரவாதிகளின் பக்கம் சார்ந்துள்ளதென்ற மயக்கத்தை ஏற்படுத்திவிடும்.

இத்தகைய மயக்கத்துக்கு தீவிரவாதிகளின் ஒரு சில கடுங்கோட்பாட்டாளர்களைத் தவிர நெகிழ்வுப் போக்கைக் கொண்ட ஏனைய அரசியல் பகுதியினர் இலகுவாகவே உள்ளாகிவிடுவர்.

> **இங்கே சிந்திக்கப்பட வேண்டிய விடயம் என்னவென்றால், அத்தனை தூரம் பாலசிங்கத்துக்கு சர்வதேச நிர்ப்பந்தம் செலுத்தப்பட்டிருந்தது என்பதைத்தான். அது, புலிகளின் கருத்தை சர்வதேச சமூகத்திடம் வலியுறுத்தும் நிலையிலிருந்து மாறி, சர்வதேச சமூகத்தின் கருத்தைப் புலிகளிடம் வலியுறுத்தும் நிலைக்கு அவரைத் திருப்பியிருந்தது.**

அவர்கள் தமது கற்பிதங்களை அமைப்புக்குள்ளும் புகுத்திவிடுவர். இதனால் அவ் அமைப்பு உள்ளக நெருக்கடிகளுக்குத் தள்ளப்பட்டுப் பேச்சுவார்த்தை வழிமுறையில் கால் வைக்கும்.

இத்தகைய நம்பிக்கைகளுடன்தான் புலிகளின் பேச்சுவார்த்தை வரவுகளும் அமைந்திருந்தன. அவர்கள் ஆரம்பத்தில் சர்வதேச சமூகம் தம் பக்கமே என்று மக்களுக்குக் காட்டுவதற்கான பாரிய எத்தனங்களைச் செய்தனர். இதுவே சர்வதேச சமூகத்துக்கு மேலும் வசதியாக அமைந்தது. அவர்கள் புலிகளை நேரிடையாகச் சந்திக்கக்கூடிய வசதிகள் பிறந்தன.

ஆனாலும், புலிகளின் சர்வதேச நோக்கங்கள் எவற்றையும் நிறைவேற்றிக்கொள்ள சர்வதேச சமூகம் சாமர்த்தியமாக வழி விடவில்லை. புலிகள் எதிர்பார்த்தது போல் புலிகளைத் தடைசெய்திருந்த எந்த ஒரு நாடும் இதுவரை அத் தடையை நீக்கவில்லை. மாறாக அமெரிக்கா போன்ற பிரதான நாடுகள் புலிகளை சர்வதேச சமூகத்தின் முன் வன்முறையையும் பிரிவினையையும் கைவிட்டு விட்டதாக அறிவிக்கும்படியும், ஜனநாயக மார்க்கத்தில் ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி தீர்வொன்றைக் காண முன்வரும்படியும் வற்புறுத்தின.

அப்போது புலிகள் தரப்பில் இந் நெருக்கடிக்கு முகங்கொடுத்த புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இந் நிர்ப்பந்தத்துக்கு அடிபணிந்து அதற்கேற்ற வகையில் தமது கருத்துக்களை மாற்றித் தெரிவிக்கவும் முற்பட்டிருந்தார். அவர் தாம் பிரிவினையைக் கைவிட்டுவிட்டதாகவும் அதற்குப் பதிலாக சமஷ்டி முறையை முன்வைத்துள்ளதாகவும் திரிபுபடுத்திக் கருத்துத் தெரிவிக்க நேர்ந்தது இதனால்தான்.

புலிகளின் உண்மையான நிலைப்பாடு அப்படியிருக்கவில்லை. அவர்கள் தமக்கு ஏற்புடைய சமஷ்டி ஆட்சிமுறையொன்றை அரசாங்கம் முன்வைக்குமானால் அதன் பின்னர் பிரிவினையைக் கைவிடுவதையிட்டுப் பரிசீலிக்கத் தயார் என்றே தெரிவித்திருந்தார்கள். பாலசிங்கம் கூறியது போல் பிரிவினையைக் கைவிட்டுவிட்டு சமஷ்டியை ஏற்றுக் கொள்வதற்கும், புலிகளின் நிலைப்பாடான சமஷ்டியை வழங்கியபின் பிரிவினையைக் கைவிடுவதற்கும் மலைக்கும் மடுவுக்கும் இடையிலான வித்தியாசம் உள்ளது.

ஆனால், பாலசிங்கம் இத்துடன் நில்லாமல் மேலும் ஒரு படி சென்று தாம் தமிழீழம் என்று கூறுவதும் அத்தகைய ஐக்கிய இலங்கைக்குள் அமைந்த சமஷ்டி ஆட்சிப் பரப்பையே என்று கூறுமளவுக்குச் சென்றார். ஆனால், புலிகளாக்ச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட ஒவ்வொருவருக்கும் தமிழீழம் என்றால் தனிநாடு என்பதே மனதில் பதிந்துள்ள பிம்பமாகும். புலிகளில் போராடி மடிந்த சுமார் 17 ஆயிரம் போராளிகளும் தாம் தனிநாடொன்றுக்காக உயிரை அர்ப்பணிப்பதாக எண்ணியே மடிந்தனர். ஆனால், இவற்றை மறைத்து பாலசிங்கம் தமது சுலோகத்துக்கே மறு வியாக்கியானம் கொடுக்க முற்பட்டார்.

இங்கே சிந்திக்கப்பட வேண்டிய விடயம் என்னவென்றால், அத்தனை தூரம் பாலசிங்கத்துக்கு சர்வதேச நிர்ப்பந்தம் செலுத்தப்பட்டிருந்தது என்பதைத்தான். அது, புலிகளின் கருத்தை சர்வதேச சமூகத்திடம் வலியுறுத்தும் நிலையிலிருந்து மாறி, சர்வதேச சமூகத்தின் கருத்தைப் புலிகளிடம் வலியுறுத்தும் நிலைக்கு அவரைத் திருப்பியிருந்தது.

இதனால்தான் பாலசிங்கத்தின் வகிபாகம் மாற்றப்பட்டு சகலதும் வன்னியில் தீர்மானிக்கப்படும் வண்ணம் புலிகளின் ஏற்பாடுகள் மாற்றப்பட்டன. இதன்பின் தமிழ்ச்செல்வனுக்கே பிரதான இடம் வழங்கப்பட்டது. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட புலிகளின் உயர்மட்டக் குழுவொன்றின் வெளிநாட்டுச் சுற்றுப்பயணத்திலும் பாலசிங்கம் தமிழ்ச்செல்வனின் தலைமைக்குக் கீழேயே பணியாற்ற வேண்டிவராக மாற்றப்பட்டார். முன்னைய பேச்சுவார்த்தைகளில் பாலசிங்கத்தின் கீழ் தமிழ்ச்செல்வன் பணியாற்றியிருந்தார். இந்த மாற்றத்தின் உளத் தாக்கத்தால் பாலசிங்கம் சுகயீனக் காரணங்களுடன் இச் சுற்றுப்பயணப் பேச்சுக்களின் இடைநடுவில் லண்டன் திரும்பிவிட்டார்.

இந்த வகையில் சர்வதேச நிர்ப்பந்தங்கள் புலிகளுக்குள்ளேயே மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தன. அவை தற்போது மிகவும் அதிகரித்த நிலைக்குச் சென்றுள்ளன. இதுவரை புலிகள் கூறும் காரணங்களைச் செவிமடுத்து வந்த நிலையிலிருந்து மாறி, தற்போது புலிளுக்கு அவை தமது அதிருப்திகளையும் துணிபுகளையும் நெறிப்படுத்தல்களையும் வழங்க முனைந்துள்ளன. அத்துடன் நில்லாது அச்சுறுத்தல் களையும் கூட அவை பயன்படுத்த விளைந்துள்ளன. புலிகளின் படுகொலைகள், சிறுவர் ஆட்திரட்டல் என்பவற்றைக் கைவிட்டுவிட்டதாகத் தமக்கு நிரூபித்துக் காட்ட வேண்டுமென சர்வதேச சமூகம் வெளிநாடுகளுக்குச் சுற்றுப்பயணம் சென்ற புலிகளின் உயர்மட்டக் குழுவிடம் நேரடியாகத் தெரிவித்துள்ளன. இத்தகைய கண்டனத்தை நடுவரான நோர்வே நாடு கூட விடுத்திருந்தது இங்கு எடுத்து நோக்கப்பட வேண்டிய ஒன்று. மேலும், டென்மார்க் புலிகளைத் தடைசெய்யப் போவதாக அச்சுறுத்தியுள்ளதுடன், ஐரோப்பிய யூனியனும் புலிகளைத் தடைசெய்ய வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளது.

இப்போது சர்வதேச சமூகத்தின் அணுகுமுறை கணிசமான அளவில் மாற்றம் கண்டுவிட்டது. இந் நிலையில் அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுக்கான ஆலோசனைகளையிட்டுப் பேச்சுவார்த்தை நடத்த முன்வருமாறு புலிகளிடம் சர்வதேச சமூகம் வலியுறுத்த விழைந்துள்ளது. புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால சுயாட்சி அதிகார சபை யோசனைகள் மீது மட்டுமே பேச்சுவார்த்தை நடத்த முடியும் என்ற புலிகளின் பிடிவாதத்தைத் தளர்த்தும் முயற்சியாக இது அமைந்துள்ளது. அரசாங்கத்தின் யோசனைகளைப் புலிகள் பரிசீலிக்காமலே நிராகரித்துள்ளார்கள். இருந்தபோதிலும் சர்வதேச சமூகம் விடுவதாய் இல்லை

இம் முயற்சி பலிக்குமா? பலிக்காவிட்டால் அதன் அடுத்த அணுகுமுறை என்ன? இதுவே இங்குள்ள கேள்விகளாகும்.

# கவனிப்பாரற்ற தோட்டத் தொழிலாளர்கள்

மலையகத் தமிழர்களின் வாழ்க்கை முறையும், அவர்கள் அநுபவிக்கும் இடர்களும், விவரிக்க முடியாதவை. வெறுமனே தொழிலாளர்களாக மட்டுமே பார்க்கின்ற எவராலும் அவர்களின் இன்ப துன்பங்களை உணர்ந்து தெரிந்துகொள்ள முடியாது. ஆண், பெண் என குடும்பத்தில் அனைவருமே தொழில் வாய்ப்புகளைத் தேடித் தோட்டங் களுக்குள்ளேயே வாழ்நாளை முடித்துக்கொள்கிறார்கள். பிள்ளைகள் கல்வி, போசாக்கு, சமூக, கலாசாரம் போன்ற விடயங்களில் பின்தள்ளப்பட்டிருப்பதால் காலாகாலத்துக்கும் இச் சுழற்சி முறையே வாழ்க்கையாகிப் போய்விட்டது. 1823ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்தியாவின் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், திருநெல்வேலி, தென்னாற்காடு, வடஆற்காடு, புதுக்கோட்டை, இராமநாதபுரம் ஆகிய பகுதிகளில் இருந்து தேயிலைத் தோட்டங்களைப் பராமரிப்பதற்காக மன்னார் வழியாக அழைத்துவரப்பட்டனர் என வரலாற்றுப் பதிவுகள் கூறுகின்றன. அன்று தொடக்கம் இன்று வரைக்கும் வியர்வையைச் சிந்தி, உழைத்துக் கொண்டேயிருக்கிறார்கள் வாழ்க்கையும் மேம்பட்டதாக இல்லை. இவர்களின் மேய்ப்பர்களாக தொழிற்சங்கங்களும், கம்பனிகளும் காலாகாலமாக உழைப்பைச் சுரண்டி வருகின்றனர். மாற்று வேலைவாய்ப்புகள் எதுவுமே ஏற்படுத்தப்படாததால் தோட்டங்களிலேயே வேலை செய்ய வேண்டிய கட்டாயம் இவர்களுக்கு. அதனால் தோட்டத் தொழிலாளர்களானார்கள். சம காலத்தில் அரசியல் தலைமீடுகள் அதிகரித்துள்ளமையும், நகரப் பகுதிகளில் தொடர்புகள் அதிகரித்தமையும் இம் மக்களைச் சிந்திக்கத் தூண்டியுள்ளது. அந்த வகையில் அவர்களோடு பேசுகின்ற சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொண்டபோது, பல விடயங்களைத் தெரிந்துகொள்ள முடிந்தது. நாவலப்பிட்டியில் உள்ள வெஸ்ட்டோல் தோட்டத் தொழிலாளர்களுடன் பகிர்ந்துகொண்ட சில மணித்துளிகள் மிக முக்கியமானவை.

சம்பள உயர்வு தொடர்பில் கம்பெனிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் இடையில் எந்த முன்னேற்றமான முடிவுகளும் எட்டப்படாத நிலையில் தொடர்ந்தும் வழமையான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்குமாறு தெரிவிக்கும் அவர்கள், காலை எட்டு மணிக்கு வேலைக்குச் சென்றால் மாலை 5.00 மணி வரை வேலை செய்ய வேண்டிய கட்டாயம் இருப்பதாகவும், ஒரு நாளைக்கு 147 ரூபா சம்பளமே தமக்குக் கிடைப்பதாகவும் தெரிவித்தனர். இத் தொகை கூட 18 நாட்களுக்குக் குறையாமல் வேலைக்குச் சென்றால் மாத்திரமே கிடைக்கும் என்று கூறுகின்றனர். இல்லாவிட்டால், 121 ரூபா மட்டுமே சம்பளமாகக் கிடைக்குமாம். சம்பள உணர்வுகள் தொடர்பில் எந்த நன்மையையும் இதுவரையில் தாம் அநுபவித்ததே இல்லையென மனம் நொந்து தெரிவித்தார்கள். அரசியல் தலைமீடுகளுக்கும், கம்பனிகளுடனான ஒப்பந்தங்களுக்கும் தமக்கும் எவ்வித தொடர்புகளும் இல்லையெனத் தெரிவிக்கும் அவர்கள் உண்மையாகவும் நேர்மையாகவும் தமது பிரச்சினைகளை அணுகி நியாயம் கிடைக்கச் செய்ய எவரும் முன் வரவில்லையெனக் கூறும் அதேவேளை, தொழிற் சங்கங்கள் வெறும் பெயரளவிலேயே தங்களின் பெயரால் அரசியல் நடத்துகின்றனர் எனவும் தெரிவித்தனர். அவர்களைக் கடந்து சற்றுத் தொலைவில் சென்று விசாரித்தபோது, அந்தப் பகுதியில் இ.தொ.கா.வே தமது தொழிற்சங்கத்தை நிறுவியிருப்பதாக அறியமுடிந்தது. இதில் அரசியல் பேதங்களை மறந்து, வாழ்கின்ற காலத்தில் பாதிக்கப்படும் மக்களுக்கு உதவுகின்ற மக்கள் பணி என்ற வகையில், அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டுமென அம் மக்கள் சார்பில் இவ் வேண்டுகோள் விடுக்கப்படுகிறது.

# கிழக்கு மக்கள் என்ன பாவம் செய்தார்கள்?

அலசுவது

**- மதியூகி -**

இரண்டரை வருடங்களுக்கும் மேலாகிவிட்ட போர் நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்த காலகட்டத்தில் நடைபெற்ற - நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற நிகழ்ச்சிகளில் அதிக முக்கியத்துவம் கொடுப்படுவது எது என்று ஒரு பட்டிமன்றமே நடத்த முடியும். அதன் தலைப்புகளாக சமாதானத்துக்கான முன்முயற்சியா அல்லது படுகொலைகளும் படுகொலைகளுக்கான முயற்சிகளுமா என்றளவுக்கு நாட்டு நிலைமையாகிவிட்டது.

இலங்கை விவகாரங்களை மிக ஆழமாக இல்லாவிட்டாலும் மிகச் சாதரணமாக அவதானித்துக்கொண்டு வரும் எவருக்கும் இந்த இரண்டு விடயங்களில் எதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வந்துள்ளது என்பது மிக எளிதில் புரிந்துவிடும். சமாதான முயற்சிகளைப் பின்னுக்குத் தள்ளியதே முழுமூச்சில் முன்னெடுக்கப்பட்ட படுகொலைகள்தான் என்பதை நாட்டு மக்கள் நன்கறிவர். அதிலும் புலிகள் இயக்கத்திலிருந்து கருணா பிரிந்து சென்ற பிறகு அவரது சகாக்களைத் தேடியழிக்கும் சம்பவங்கள் குறிப்பாகக் கிழக்கு மக்கள் மத்தியில் பெரும் பதற்றத்தைத் தோற்றுவித்துள்ளது.

''கருணாவைத் தனிமனிதன் என்றும் ஏனைய உறுப்பினர்கள் அனைவரும் வன்னித் தலைமைக்கு விசுவாசமானவர்களாகவே இருக்கிறார்கள் என்றும் கூறிவந்த வன்னித் தலைமை, இப்போது எங்களையே தேடி அழிப்பதை நாங்கள் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. வன்னித் தலைமை இப்படிச் சகோதரப் படுகொலைகளைச் செய்யும் என்று நினைத்திருந்தால், அன்று ஜெயந்தன் படையணி அனுப்பப்பட்டபோது எதிர்த்துச் சண்டை பிடித்திருப்போம் தலைமைகளுக்குள் ஏற்பட்ட சண்டை சாதாரண உறுப்பினர்களைப் பலியெடுக்கும் அளவுக்கு வந்துவிடாது என நம்பியதால் இன்று நிராயுதபாணிகளாக நிற்கிறோம்.

"எல்லாப் போராளிகளும் எத்தனை நாளைக்குத்தான் பொறுமையாக இருப்பார்கள். இது எதில் போய் முடியப்போகிறது'' என்கிறார் கருணாவின் பிரிவோடு துப்பாக்கியைத் தூக்கி எறிந்துவிட்டு வீட்டுக்கு வந்து நிற்கும் ஒரு முன்னாள் போராளி.

இப்படிச் சொல்லிக்கொண்டிருந்த போதே அவரது தாயார் ஓடி வந்து அழுகிறார்.

''தம்பி! இவனைப் பிடித்துக்கொண்டுதான் போனவை. நாங்களும் திரும்பித் தாங்கோ, அவன் நல்லாப் படிக்கிற புள்ள எண்டு கேட்டுக் கூத்தாடிப் பார்த்தும் விடயில்லை. சரி அவன்ர படிப்பும் வீணாப் போச்சு. எங்கட புள்ள உயிரோட கிடைச்சாலே போதுமெண்டு மண்டாடினனாங்கள்.

"இந்தப் பிரச்சினைகளுக்குள்ள எங்க மகன் எங்களிட்ட வந்து சேர்ந்திட்டான். ஆனா அப்பு! இவனை வீட்டில வச்சிருக்கப் பயமாக் கிடக்கு, எந்தச் சாமத்தில அவங்கள் வந்து சுடுவாங்களோ எண்டு. இது என்ன அநியாயம்? எங்கட புள்ளயும் உங்களோட நிண்டு போராடினவன்தானே....இப்ப உங்களுக்குள் பிரச்சினை எண்டதும் துரோகியெண்டிறியளே! இது அந்தக் கடவுளுக்கே பொறுக்காது..... நாசமாப் போவியள்'' என்று அந்தத் தாய் மண்ணை வாரி வீசி அழுத காட்சி இந்த விடுதலைப் போராட்டத்தையே வெறுக்கும் அளவுக்கு யோசிக்க வைத்துவிட்டது.

''இந்தக் கொலைகளை ஒருத்தரும் எதிர்த்ததாகத் தெரியவில்லையே'' என்று இச் சம்பவத்தை விடுப்புப் பார்க்க வந்திருந்த ஒருவரிடம் கேட்டபோது,

பாவம் அவர், தன் கண்ணுக்கு எட்டிய தூரத்துக்குச் சுற்றிப் பார்த்துவிட்டு,

''தம்பி! இப்ப ஊர் இருக்கிற நிலைமை உங்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறன். மாமன், மச்சான், அக்கா, தங்கச்சி, ஏன் என்ர புள்ளையளோடையே நம்பிக் கதைக்கேலாத நிலமை. இதில சனம் எப்பிடித் தம்பி வாயைத் திறக்கிறது? எங்கட ஒவ்வொருவருடைய வீட்டுக்கும் அரசாங்கம் தனித்தனி பாதுகாப்புத் தருமா? இல்லையே! அரசாங்கத்தின்ர பாதுகாப்பு இருக்கிற கோர்ட்டுக்குள்ளையும், ஜெயிலுக்குள்ளையுமே கொலை நடக்குது. இதில சாதாரண மக்களுக்கு என்ன பாதுகாப்பு? ஒவ்வொரு நாளும் இரவும் பகலுமா கொலைகாரன் ஊருக்குள்ளால திரியிறான். எப்பிடி வாய் திறக்கிறது? காலையில வாய் திறந்தா இரவைக்கு வெடி விழும். இந்தக் கணக்கா எங்கட சுதந்திரம் கிடக்கு. இந்த லட்சணத்தில கண்டிக்கிறதெண்டால் எப்பிடி....? ஆனால் ஒண்டு மட்டும் சொல்லுவன், சனம் மனசுக்குள்ளாலேயே காலாகாலத்துக்கும் அழும் எண்டு நான் நம்பயில்லை. ஒருநாளைக்கு இது வெடிக்கும். அது வரைக்கும் வாயிருந்தும் நாங்கள் ஊமைதான்.''

கண்கள் சிவப்பேறப் பேசி முடித்த அவர் ஒரு ஓய்வுபெற்ற வாத்தியார் என்றது பின்னர்தான் தெரிய வந்தது. இப்படித் தனது ஆதங்கத்தை எம்மிடம் கொட்டிய திருப்தி அவரின் முகத்தில் தெரிந்தது. பின்னர் அவரே சொன்னார்.

''இவ்வளவு பேசினனான், என்ர மாதப் பென்சனில ஒரு தொகையை அவையளுக்கு வரியாகக் கொடுத்துக்கொண்டுதான் இருக்கிறன்'' என்று சிரித்தா. காய்ந்துபோன அந்தச் சிரிப்பில் ஆயிரம் இயலாமைகள் புதைந்திருப்பதைப் புரிந்துகொள்ளக் கூடியதாக இருந்தது.

மட்டக்களப்பு, அம்பாறை, பொலநறுவை மற்றும் எல்லைப்புறக் கிராமங்கள் எனப் பரவலாக நடைபெற்று வந்த படுகொலைகள் இப்போது திருமலையையும் ஆக்கிரமித்துவிட்டது. அன்புவழிபுரத்தில் இருபத்தைந்து வயது இளைஞன் சுடப்பட்டான். இவர் கருணாவின் சகா என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. இந்த ஊடகங்கள் எதுவுமே இக் கொலைகளைக் கண்டிப்பதில்லை. இது எந்த வகைத் தேசப்பற்று என்று விளங்கிக்கொள்ள முடியவில்லை. இயற்கை மரணம் தவிர்ந்த, ஒருவரால் இன்னொருவரின் வாழ்வு உரிமையை மறுக்கும் எந்தச் செயற்பாடும், கொலையும் வன்மையான கண்டனத்துக்குரியதே. மாற்றங்கள் நிறைந்ததே வாழ்க்கை. தவிர மாற்றுக் கருத்துக் கொண்டோரையெல்லாம் கொன்றொழிப்பதாக இருந்தால் மக்கள் இல்லாத வனாந்தரங்களே மிஞ்சும். பின்னர் யாருக்காக விடுதலை? யாருக்காகச் சுதந்திரம்? சுடுகாடுகளை ஆழ்வதற்கு எவரும் விருப்பங் கொண்டிருக்கலாம். ஆனால், சாதாரண மக்கள், ஒருவரின் கருத்தை மற்றவர் மதிக்கின்ற மனிதநேயமிக்க, கௌரவமான தீர்வையே நேசிக்கின்றனர்.

> மட்டக்களப்புக்குச் சென்றிருந்தபோது படுகொலைகளால் மகனை, கணவனை, தம்பியை, அண்ணனை இழந்தவர்கள் பலரைச் சந்திக்கின்ற வாய்ப்புக் கிடைத்தது. அவை எல்லாவற்றையும் எழுத்தில் தந்துவிட முடியாது. தவிரவும் அந்த அழுகைகளும் பரிதாபங்களும் வார்த்தைகளுக்குள் அடக்கிவிட முடியாதவை, எழுத்துக்களால் எழுதிப் புரியவைக்க முடியாதவை.

மட்டக்களப்புக்குச் சென்றிருந்தபோது படுகொலைகளால் மகனை, கணவனை, தம்பியை, அண்ணனை இழந்தவர்கள் பலரைச் சந்திக்கின்ற வாய்ப்புக் கிடைத்தது. அவை எல்லாவற்றையும் எழுத்தில் தந்துவிட முடியாது. தவிரவும் அந்த அழுகைகளும் பரிதாபங்களும் வார்த்தைகளுக்குள் அடக்கிவிட முடியாதவை, எழுத்துக்களால் எழுதிப் புரியவைக்க முடியாதவை. அந்த யதார்த்தத்தை கொலைகளை ஆமோதிப்பவர்களால் புரிந்துகொள்ள முடியாது. இழப்புகளுக்கு உட்பட்டவர்களுக்குத்தான் அந்தக் கண்ணீர்க் கதைகளின் அர்த்தம் புரியும்.

''வெளிநாட்டில் மனைவியையும் பிள்ளைகளையும் சொகுசாக வாழ அனுப்பி வைத்துவிட்டு, அன்றாட உணவுக்கே ஆலாய்ப் பறந்து திரிகிற எங்களின் இயலாமையில் வீரம் பேசுகின்ற எவருக்கும் இழப்புகளின் தாக்கம் விளங்காது'' என்று மகனைப் பறிகொடுத்த ஒரு தாய் அடித்துக்கொண்டது இன்னும் ஞாபகத்தில் நின்று சித்திரவதை செய்கிறது.

''ஒரு காலத்தில் சிங்கள இராணுவம் எம்மைத் தாக்கும்போது அவர்கள் மேல் எவ்வளவு கோபம் வந்ததோ, அதே அளவு இப்போது இயக்கத்தின் மீதும் கோபமாக இருக்கிறது. கொலைகளை இயக்கமே செய்கிறது என்று தெரிந்தும் அதைத் தடுக்க முடியாத அரசும் - சர்வதேச சமூகமும் தங்கள் தங்கள் அரசியல் லாபத்தில் இருந்து கொண்டுதான் சம்பவங்களைப் பார்க்கிறார்கள். இந்தக் கையாலாகாத்தனத்தை நினைத்து அழுவதா? சிரிப்பதா? ஒன்றுமே விளங்குதில்லை'' என்கிறார் வைத்திய அதிகாரி ஒருவர். அவரே தொடர்ந்தார்.

''இங்க பாருங்கோ! நான் யாரும் சரியெண்டு பந்தம் பிடிக்க வரயில்ல.....நான் யாழ்ப்பாணத்தான். அதுக்காகக் கருணா பிழையெண்டும் சொல்லமாட்டன். அன்றாடச் செய்தியளைப் பார்க்கிறன். 'எவன் உண்மையைச் சொல்லுறான். உண்மையைச் சொல்லுறவனை உடனடியாச் சுடு' எண்ட எழுதப்படாத நியதி இருக்கேக்க, எவன் தம்பி எழுதுவான்? அந்தக் காலத்தில இயக்கமெண்டால் எவ்வளவு உதவியைச் செய்தனான். ஆனா இப்ப அவையள் வாசலுக்கு வந்தாலே 'சனியன் எப்படா தொலையப் போகுது' எண்டு தான் நினைக்கிறன். ஏனெண்டால் போராட்டம் வெறுத்துப் போச்சுது. உண்மையான சமாதானம் எண்டதில சனத்தைத் தவிர வேற ஒருத்தருக்கும் விருப்பமில்லை.

"நடந்து முடிஞ்ச தேர்தல் எப்பிடி நடந்ததெண்டு உலகத்துக்கே தெரியும். அதை விடுங்கோ....சரியோ பிழையோ. இப்ப பாராளுமன்றப் பலம் இருக்கு, அதே போல ஆயுத பலமும் இருக்கு. இந்தக் காலகட்டத்தில நிரந்தரத் தீர்வு காணாட்டில் இனி எந்தக் காலத்தில காணப்போகினம்? சும்மா மத்தவனை சுட்டுப் போட்டாப் போல விடுதலை கிடைச்சிடுமா? இதைக் கேக்க ஒரு ஆளும் இல்ல, வீரப்பனை ஏன் சுட்டீங்கள் எண்டு கேக்கினம்?''

இப்படிப் பேசிவிட்டு அவர் விட்ட பெருமூச்சு தீயாய் இருந்தது. இத்தனை ஆதங்கங்கள் இருந்தும் அவை வெளிப்படாததால் மக்கள் எல்லாவற்றையும் ஆதரிக்கிறார்கள் என்று கூற முடியவில்லை. எப்போதும் கூறி வருவது போல, கொடுமைகளுக்குத் துணைபோவோருக்குக் காலம்தான் பதிலளிக்க வேண்டும்.

கருணாவோடு இருந்ததுதான் குற்றம் என்றால் மரணம்தான் தீர்ப்பா? அப்படியென்றால் அவருடன் இருந்ததாகக் கூறப்படும் 5600 பேருக்கும் தீர்ப்பு மரணமா? தற்போது தொடரும் படுகொலைகள் தொடர்கதையாகத்தான் இருக்கப்போகிறதா? இத்தனை உறுப்பினர்களின் பெற்றோர், உடன்பிறப்புகள், மனைவி, பிள்ளைகள் இவர்களுக்கு நியாயமே இல்லையா? படுகொலைகளின் பாதாளத்திலிருந்தா தமிழ் மக்களின் விடுதலை வீடுவிக்கப்படப்போகிறது? நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக ஒவ்வொரு விடியலும் மரணச் செய்திகள்தான் ஒலிக்கப்போகிறதா? இதற்காகத்தான் தமிழ் மக்கள் இத்தனை தியாகங்களைச் செய்தார்களா? கருணாவைக் காரணமாகக் காட்டி இன்னும் எத்தனை கிழக்கு மாகாண இளைஞர்களைப் பலியெடுக்கப் போகிறார்கள்? இந்த அடக்குமுறைப் பண்புகள்தான் மக்களை ஆளப்போகிறதா? அதுதான் மக்களுக்குப் பெற்றுத் தரப்போகிற சமாதானமா? மனிதத்தை நேசிப்பவர்களே! மனந் திறந்து பதில் கூறுங்கள். இதுதான் இலங்கை வாழ் தமிழ் மக்களுடன் இணைந்து கிழக்கு மக்கள் விடுக்கும் கேள்விகள்.

## அதிரடி அய்யாத்துரை



**சூரியக்கண்** கொண்டு பாக்கிற நிகழ்ச்சியில ஊடகக் காறர் பக்கச் சார்பாகவா செய்திகளை எழுதுகினம் எண்ட கேள்வியை ஜெயமான பத்தி எழுத்தாளரிட்ட கேட்டிச்சினம். அதற்கு அவர் 'சிங்கள, ஆங்கில பத்திரிகைகள் அப்பிடித்தான் எழுதுதுகள். தங்களுக்குக் கூட இடம் தருகினமில்லை' என்கிறார். அது மட்டுமில்லாம அவையள் அப்பிடி நடக்கிறதாலதான் எங்கட தமிழ்ப் பத்திரிகைகளும் ஒரு பக்கமா நிண்டு எழுத வேண்டிய கட்டாயமாம். அப்பிடி அவையள் பிழை விடுகினமெண்டால் தாங்களும் பிழை விடுகிறதைச் சரியெண்டிறாராக்கும். இவர் சொல்லிறதைப் பாத்தால் அதுக்குப் பதிலடியாத்தான் இவையளும் கொடுக்குக் கட்டியிருக்கினமாக்கும், அவலை நினைச்சு உரலை இடிக்குமாப் போல. இவரே தமிழ் வலையெண்ட இணையத்தளத்தை நடத்தி படுகொலையளால பிரபலமானவர். இவரிட்ட இந்தக் கேள்வியைக் கேட்டது பொருத்தமில்லையுங்கோ.

**கடல்** தளபதி கோவிச்சுக்கொண்டு போயிட்டார் எண்டு சொல்லிச்சினமே! இப்ப திரும்பி வந்திட்டார். இப்ப என்ன செய்யப் போகினம்...? இங்க நிண்டு பெடியளைக் குழப்பாமல் குடும்பத்தோட சிங்கப்பூரில போயிரும் எண்டு ரெண்டெழுத்தார் அனுப்பிப் பாத்தினம்....போனவரை தெற்கில இருக்கிறவை விட்டிச்சினமே? கிண்டிக் கிழங்கெடுத்திச்சினம். திருப்பி நாட்டுக்குள்ள இறக்-காட்டி காட்டுக்குள்ள சலசலப்புதான் எண்ட கதை உண்மையாப் போயிடுமெண்டு பிளீஸ்பண்ணி இறக்கிப்போட்டிச்சினம்.... இதைத்தான் 'கட்சிக்காறன் காலில விழுறத விடவும் சண்டைக்காறன் காலில விழுறது' எண்டிறதாக்கும்.... தளபதியா இருந்தவர் தளமொண்டும் இல்லாததால இந்தப் பாடு படுறார் எண்டு ஊர்க்குருவி சொல்லுது.

**மரக்** கட்சிக்காறர் சமரசமாப் போகப் போகினமெண்டு கதை அடிபடுகுது...ஊர் ரெண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் எண்டுவினம். என் வழி தனி வழியெண்டு திக்குத் திக்காத் திரிஞ்சிச்சினம். மாறி மாறி சேத்தை வாரி வீசிச்சினம். இப்ப ஒரு மாதிரியா சமரசத்தைப் பற்றிப் பேசுகினம். அம்மணி கூட்டுச்சேர விருப்பமெண்டு பச்சைக் கொடியைக் காட்டிப்போட்டா. ஐயாதான் சிக்னல் இல்லாம இருக்கிறார். மக்களுக்கெண்டு வந்துபோட்டுப் மனக் கசப்புகளை பெரிசு பண்ணாதேயுங்கோ. அதிகாரமிருக்கக்கையே அம்மணி கீழயிறங்கி வந்ததை பாராட்டாமல் இருக்கேலாது. ஒண்டும் இல்லாமல் முறைக்கிறது நல்லதில்லையுங்கோ. பச்சைக் கட்சியில இருந்தாலும் மரக் கட்சியெண்டதை மறந்து போடதேயுங்கோ.... பிளீஸ்....

**சமாதான** முயற்சிக்கு ஒத்துழைப்புத் தராத எந்தக் கட்சிக்கும் இனி மதபீடத் தலைவர்கள் ஆசி தரப்போவதில்லையெண்டு சொல்லியிருக்கினமாம். ம்... சொல்லி என்ன நடந்திச்சு... அரசியல் எண்டு வந்த பிறகு ஆரும் ஆசி தரயில்லையெண்டு அழுதுகொண்டிருக்க முடியுமே... நாட்டில சமாதானம் வரவேணுமெண்டதில ஒருத்தருக்கும் விருப்பமேயில்லை. ஒருவன் விடாக்கண்டனாக இருந்தால் மற்றவன் கொடாக்கண்டனாக இருக்கிறான். இந்த லட்சணத்தில ஒத்துப் போங்கோ எண்டு ஓதி என்ன நடக்கப்போகுது? மதத் தலைவர்களையே மதிக்கயில்லையெண்டால் வட்டு டு.....

**தர்ம** ராச்சியத்தை நிறுவப் போறமெண்டு தேர்தலில நிண்டிச்சினமெல்லோ. காவி கட்டினவை கண்ணியமா நடப்பினம் எண்டுதானாம் சனமும் வாக்குப் போட்டுச்சினம். இப்ப என்னடா வெண்டால் ஆளுக்கொரு திசையில நிக்கினம். சனத்துக்கு அரசியலெண்டாலே அலர்ஜி. அது இப்ப அதிகரிச்சுப் போட்டுது... இதெல்லாத்ததுக்கும் காரணம் உறுமயக்காறர் எண்டும் ஒரு கதை அடிபடுகுது. ஒரு தர்மராச்சிய போராட்டத்தையே ஆறு மாதத்துக்கு மேல நடத்த முடியல்லையெண்டால் தமிழ்ச் சனம் தங்கட விடுதலைப் போராட்டத்தை நடத்த எத்தனை கஸ்டப்பட்டிருக்கும்... சில விசயங்களை பேசினாப் போல சரிவராது. செய்து பாத்தாத்தான் தெரியும்.

**வெளிநாடுகளுக்குப்** போயிருந்த ரெண்டெழுத்தார் குழு கட்டம் கட்டமா நாடு திரும்புது. போன இடத்தில கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாம பிதுங்கின முழிகளால, எங்கட எயாபோர்ட்டால இறங்கேக்கதான் நிதானமாப் பாத்திச்சினமாம்... வழக்கமா பீத்திக்கொள்ளும் பேராசிரியர் இப்ப பதுங்குகிறார் எண்டு அவருக்குப் பக்கத்தில இருக்கிறவர் கொடுப்புக்குள்ள சிரிக்கிறார். சேர்ந்து சிரிக்க ஏலாமக் கிடக்கு. ஏன் தெரியுமோ? செல்வனார் வந்து சேர்ந்ததும் வந்த களைப்புக்கு நாலு பேரைச் சுட்டாத்தான் சரி வருமெண்டு கோபத்தில இருக்கிறராம். ரெண்டு பேரைச் சுட்டாத்தான் ரெண்டெழுத்துக்கே மரியாதை எண்ட கணக்கா இங்காலை நடக்குது. அதில அவற்ர கோவத்துக்கு வேற நாலு பேரா? இது ஜஸ்ட் ஓவருங்கோ....

**கிழக்கில** பிரிஞ்சவர் கட்சி ஆரம்பிச்சிருக்கிறார் எண்டதும் அதே கிழக்கில கண்டன ஆர்ப்பாட்டம் நடந்திருக்கு. இதை நடத்தினவை மாணவர்களாம். வீதி மறியல் செய்யாதேயுங்கோ எண்டு காக்கிச் சட்டைக்காறர் சொல்லச் சொல்ல கூட்டத்தோட வந்த கொஞ்சப் பேர் காக்கிச் சட்டைக்காறருக்கு கடுப்பேத்திச்சினமாம். பிறகெண்டு திட்டம் போட்டது வேளைக்கே நடத்திட்டுதாம். மாணவர்களுக்கு காக்கிச் சட்டைக்காறர் தாக்கிப்போட்டினம் எண்டு நியூஸ் வந்திட்டுது. தேர்தல் ஆணையகத்தில அந்தக் கட்சியை பதிவு செய்யக் கூடாதெண்ட மகஜரை ரெண்டெழுத்தாரின்ர ஒப்பிசிலயே ஒப்படைச்சினமாம். இப்ப விளங்குதோ என்ன நடந்திருக்கெண்டு? படிக்கிற பெடியள பலி கொடுக்க நினைக்கிறது சரியில்லை... சொல்லிப்போட்டன்.

முந்திச் சொன்ன கவிதையை திரும்பவும் சொல்லிறன். இந்தக் காலகட்டத்துக்கும் பொருந்துதோ கொஞ்சம் பாருங்கோ...

**பொல்லாத உலகமிது**
**தயங்கி தயங்கிப் பேசினால்**
**உண்மையைச் சந்தேகிக்கிறது**
**இனிக்க இனிக்கப் பேசினால்**
**பொய்யையும் சம்மதிக்கிறது.**

(எப்பிடியிருக்கு)

# அமிர்தாஞ்சன் - நோவு நீக்கி நிவாரணி

அமிர்தாஞ்சன் - சகல வீடுகளிலும் சகலரோக நிவாரணியாக உச்சரிக்கப்படும் பெயர்.

இந்தியாவில் 1893 முதல் தன்னுடைய தயாரிப்புகளை வழங்கி, மக்களை சௌபாக்கியவான்களாகவும் சுகதேகிகளாகவும் பேண உதவிவரும் இந்நிறுவனம் 1936இல் வரையறுக்கப்பட்ட கம்பனியாக மாறியது.

நூற்றாண்டைத் தாண்டிய சிறப்பான - நேர்த்தியான - அநுபவப் படிவுகளைக் கொண்ட இந்த நிறுவனம் நூற்றாண்டு இளமையோடு திகழ்வதுதான் அதன் சிறப்பாகும்.

இந்தியாவிலும் இலங்கையிலும் பட்டிதொட்டிகளில் எல்லாம் - மாடமாளிகை வாசஸ்தலங்கள் முதல் குடிசை வீடுகள் வரை எல்லாம் - அமிர்தாஞ்சன் நோவுக் களிம்புப் புட்டி (Amrutanjan Pain Balm) இல்லாத வீடே இல்லை எனலாம். அத்துணை தூரம் நோவு, வலிகளில் இருந்து நிவாரணமும் விடுதலையும் பெற்றுத் தருவதில் ஏகோபித்த வரவேற்பைப் பெற்றுள்ளது அது.

அமிர்தாஞ்சன் பல வகை ஆயுர்வேதத் தயாரிப்புகளை வழங்குகின்றது. அவை நோவு, வலிகளிலிருந்து நிவாரணம் தரும் களிம்புகள் முதல் பல்வேறு பாதிப்புகளிலிருந்து மீட்சி பெற்று புத்துயிர்ப்புத் தரும் மருந்துகள் வரை பலரகப்பட்டவை.

வலி, நோவு ஆகியவற்றிலிருந்து மட்டுமல்லாமல் தலையிடி, தலைக்குத்து, சளி, சுரம், சுளுக்கு, தசைப்பிடிப்பு, வாத நோவு, இடுப்பு வாதம் (கீல் வாதம்) போன்றவற்றிலிருந்து நிவாரணம், விடுதலை பெறுவதற்குப் பல ஆயுர்வேத மூலிகைகள் அடங்கிய மருந்துத் தயாரிப்புக்களை வெற்றிகரமாகத் தந்துள்ளது அமிர்தாஞ்சன்.

'அமிர்தாஞ்சன் நோவு பாம்' - இதுவே அதிக மக்களின் - பல மில்லியன் கணக்கானோரின் - ஏக வரவேற்புக்குள்ளாகியிருக்கும் முக்கிய உற்பத்தி.

அமிர்தாஞ்சன் - தொன்மையான மூலிகை மருந்துகள் தொடர்பாகத் தனக்குக் காலம் காலமாக இருந்த வரும் பட்டறிவை புதிய விஞ்ஞானபூர்வ அநுபவங்களோடு இணைந்து சிறந்த மருத்துவ உற்பத்திகளையும் நிவாரணிகளையும் தனது வாடிக்கையாளர்களுக்குத் தருவதற்கு திடசங்கற்பம் பூண்டுள்ளது என்று அந்நிறுவனம் கூறுகின்றது.

தரமான உற்பத்திகளைத் தருவதற்குத் திறமான நிபுணத்துவ சேவை தங்களிடம் தயாராகக் காத்திருக்கிறது என்று கூறும் அமிர்தாஞ்சன் நிர்வாகிகள், வாடிக்கையாளர்களுடனான தமது உணர்வுபூர்வ - சிநேகபூர்வ - தொடர்பு மேலும் மேலும் வலுப்பட்டு வருவதாகவும் பெருமிதம் கொள்கின்றனர்.

அமிர்தாஞ்சன் தயாரிப்புகள் இப்போது இலங்கையிலும் தாராளமாகக் கிடைக்கின்றன. உற்பத்திகளை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற "ஸ்பீட் பாமாசூட்டிகல் டிஸ்ரிபியூட்டர்ஸ் லிமிட்டெட். 28, பியர்னராம பிளேஸ். அலன் அவனியூ ஊடாக, தெஹிவளை. (தொலைபேசி 2739899)" என்ற நிறுவனத்துடன் வாடிக்கையாளர்கள், விற்பனையாளர்கள் தொடர்புகொள்ளும்படி கோரப்பட்டுள்ளனர்

## பாதை சீர்கேடு! பயணிகள் அவதி! அதிகாரிகள் ஆவனசெய்வார்களா?

ஊர்காவற்றுறையில் இருந்து கண்ணகை அம்மன் இறங்கு துறைக்குச் செல்லும் பாதை வாகனங்கள் செல்ல முடியாத நிலையில் மிகவும் மோசமாக பாதிப்படைந்துள்ளது. இத் துறைமுகத்திற்குச் செல்லும் பாதை பாரிய குண்டும் குழியுமாக இருப்பதுடன், மோட்டார் சைக்கிள் கூடச் செல்ல முடியாத நிலையில் உள்ளது. இதனால் இப் பாதையால் பஸ் வண்டிகள், ஏனைய வாகனங்கள் மிக சிரமத்தின் மத்தியிலேயே தமது போக்குவரத்தை மேற்கொள்கின்றன. இதனால் வாகனச் சாரதிகள் பெரும் அபாயகரமான நிலையிலேயே வாகனங்களை செலுத்திவருகின்றனர். இப் பாதை முன்பு புனர்வாழ்வு அமைச்சராக இருந்த கௌரவ டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் கடந்த 2001ஆம் ஆண்டு புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வாகனப் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டதுடன் இந்த இறங்குதுறை புனர்நிர்மாணம் செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த ஒரு வருட காலமாக மிகவும் மோசமாகப் பாதிப்படைந்துள்ள இப்பாதை தொடர்பில் அரச அதிகாரிகளோ பாராளுமன்ற உறுப்பினர்களோ எவ்வித நடவடிக்கைகளும் எடுக்க முன்வரவில்லை. ஊர்காவற்றுறை கண்ணகை அம்மன் இறங்குதுறை பாதையூடாகவே அனலைதீவு, எழுவைதீவு மக்கள் தினசரி தமது போக்குவரத்தை மேற்கொண்டு வருகின்றனர். தற்போது ஏற்பட்டுள்ள கடும் மழை காரணமாக இப்பாதையில் ஏற்பட்டுள்ள பாரிய குழிகளில் மழைநீர் தேங்கியுள்ளதால் பாதசாரிகள், நோயாளிகள், வயோதிபர்கள் மற்றும் வியாபாரிகள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றனர். இத்துடன் வாகனங்கள் இப்பாதையூடாகப் பிரயாணம் மேற்கொள்வதில் பெரும் கஷ்டத்தை எதிர் கொண்டுள்ளதுடன், இனி மழைகாலம் என்பதனால் தொடர்ந்து இதே நிலை இருக்குமானால் இப்பாதையால் பஸ்கள் ஓட முடியாத சூழ்நிலை தோன்றும் என வாகன சாரதிகள் தெரிவிக்கின்றனர். கடந்த தேர்தலில் தீவகத்தை மீட்டுவிட்டோம் என கூறிய தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள், தேர்தலின் பின்னர் இப்பகுதிக்கு வந்ததும் இல்லை; மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் பற்றிக் கேட்டறிந்ததும் இல்லை. தேர்தலின்போது தீவகம் என முழங்கியவர்கள் இன்று தமது தேவைகள் முடிந்ததும் பராமுகம் காட்டுவதாகவே உள்ளதற்கு இது ஓர் சான்றாகும்.

எனவே, இப் பாதையில் பயணிக்கும் மக்களின் சிரமத்தைப் போக்கவும், சிரமமின்றி வாகனப் போக்குவரத்து நடத்தவும் பாதையைச் சீரமைக்கப் பொறுப்பானவர்கள், அரசியல்வாதிகள், உள்ளூராட்சி அதிகாரிகள், மற்றும் வீதித் திணைக்கள அதிகாரிகள் அக்கறையுடன் செயல்படுவார்களா?

-வி.ஜனகன்.ஊர்காவற்றுறை.


## சிங்கப்பூரில் திருமண சேவை



சிங்கப்பூரில் திருமணம் செய்ய வருவோருக்கும் வீடுமுறையைக் கழிக்க வருவோருக்கும் சகல வசதிகளும் கொண்ட வீடும் மற்றும் திருமணத்துக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் குறைந்த செலவில் திருப்திகரமாகச் செய்து தருவோம். மேலும் எங்கள் இடம் 'குட்டி இந்தியா' என்று அழைக்கப்படும் இடத்தில் இருப்பதால், வேண்டிய பொருட்களை நடந்து சென்றே வாங்கலாம். மேலும் வீபரமறிய எந்த நேரத்திலும் தொடர்புகொள்ள வசதியாக

கை தொலைபேசி எண். : 0065 97514941,
தொலை நகல். : 0065 64816144.

படத்தில் காணும் அப்புவீடம் தொடர்பு கொள்ளவும்.

சிங்கப்பூருக்குள் வர அனுமதி கிடைக்காமல் திரும்பிப் போவதைத் தடுப்பதற்கு 2 கிழமைக்கு முன்பே எங்களுடன் தொடர்புகொள்ளவும்.

**Lingam Wedding Services,**
10.Anson Road #15 -14 International Plaza, Singapore 079903.

# விளம்பரப் பகுதி

**வாழவைக்கும் அற்புத மருந்து மந்திர மனோதத்துவ அழகு மருத்துவம்**

**மந்திரயோகி** YOGI-DR. T. MYLVAGANAM [Rh.M.D- DAcu (இலங்கை)M.B.B.S(h) (இந்தியா)]
MINISTRY OF HEALTH சுகாதார அமைச்சின் (மெடிக்கல் கவுண்சில்) பதிவு இல M. C. 061



**இறையருள் தியான யோக சக்தியினால் சொன்னது பலிக்கின்றது, செய்தது சித்தியாகுகின்றது.** குருசக்தி நிலைய சித்தர்மருத்துவபண்டிட் மஹாவிஷ்ணு உபாஷனா டாக்டர்.மந்திரயோகியின் அற்புத மருந்து மந்திர யந்திர வசிய மனோதத்துவ மருத்துவங்களினால் பிரிந்து சென்றவர்களை வெறுப்பவாகளை உறவாக்கி, காதல், திருமணம், கல்வி, வியாபாரம் வேறுகாரியங்களிலும் வெற்றிபெற்று, தீயசக்திகளின் தொல்லைகள், சிக்கலான சிலவகைப் பிரச்சனைகள் மனோநிலைபாதிப்புக்கள் நீண்டகால ஆஸ்த்மா, அலர்ஜி, சர்ம தோல் வியாதிகள், உடல் குறைபாடுகள், பாலியல் பலயீனம், தலையிடி, தலைமுடிப் பிரச்சனைகள், வேறு நாட்பட்ட நோய்களைத் தீர்த்து நன்மையான காரியங்களை உடன் நிறைவேற்றி மகிழ்ச்சியாக வாழ்கின்றார்கள். யோகிடாக்டரிடம் வரமுடியாதவர்களுக்கு பதிவுப்பார்சலில் அனுப்பப்படுகின்றன. பதிவுத்தபாலில் தொலைபேசியில், தொடர்பு கொண்டு செய்து கொள்ளலாம். கடல்கடந்த வெளிநாட்டவர்களுக்கு அதிவிஷேட செயல்முறைகள்.

**தர்ம சிந்தனையுள்ள புனிதசேவை ஸத்தானம் அரசாங்க பதிவு இல.** HA14/BT/176

GURUSACKTHY CENTER
KALLADY - BATTICALOA (SRI LANKA)

njhiyNgrp: 0777573368
(வெளிநாடு) +0094-0777573368

Body & Mental Health Care - (Psychotherapy & Yoga - Meditation) Develop Heuman Resources)

Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N) Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N) Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N) Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N) Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N)

# மலையாள மாந்திரீக சக்தி
# கை கண்ட பலன் பெற



பேராசிரியர் கருணாகரபூஷணம் உலக மலையாள மாந்திரீக ஜோதிட சக்கரவர்த்தி

எம்மால் வெற்றி பெறுவது நிச்சயம் என்பதாலேயே வாங்கும் பணத்திற்கு திட்டவட்டமாக ரசீது வழங்குகிறோம்



**சிவகுமார் வத்தளை!**

மதிப்பிற்கும் பெறுமைக்கும் வணக்கத்துக்கும் உரிய சாமி ஐயா அவர்களுக்கு எனது அக்கா மகளை விடுமுறைக்காக மட்டக்களப்பின் ஆச்சி வீட்டில் கொண்டு போய் விட்டிருந்த நேரத்தில் அங்க அவர் ஒருவரோடு பழகி வீட்டை விட்டு போய்விட்டார். அந்த சமயத்தில் தங்களிடம் வந்து எனது அக்கா மகளை (விஜயகுமாரி) மீட்டுதரும்படியும் காதலை விட்டு எங்கள் வசம் வரவேண்டும் என்று தங்களிடம் வேண்டி பரிகாரம் செய்து கொண்டதின்பேரில் ஐயாவின் அருள்சக்தியாலும் துர்க்கையின் ஆசீர்வாதத்தாலும் எனது அக்கா மகள் விஜயகுமாரி எந்தகுறையுமில்லாமல் நல்லபடியாக வீடு வந்து சேர்ந்துள்ளார். தனது காதலையும் மறந்து நல்லபடியாக எங்கள் சொல் கேட்டு நலமாக உள்ளார் என்பதை தங்களுக்கு பல ஆயிரம் நன்றிக்கடன் நானும் எனது குடும்பத்தாரும் தெரிவித்துக்கொள்கிறோம்.

நன்றி



**சந்திரன் இங்கிலாந்து!**

திரு ஐயா அவர்களுக்கு நான் திருமதி ஆனந்தி ரண சந்திரன் எழுதுவது ஐயா நாங்கள் 10.05.2003 நிரந்தர விசா கிடைத்து கனடா நாட்டிற்கு செல்கிறோம் தயவு செய்து எந்த காரணத்திற்கும் எனக்கு இங்கிலாந்துக்கு கடிதம் போட வேண்டிய நாங்கள் நிரந்தரமாக கனடாவில் தங்கி விடுவோம். நீங்கள் இதுவரை செய்த உதவிக்கு நன்றி.

**நாகம்மா திருக்கோணமலை**

கௌரவத்திற்குரிய சாமி ஐயா அவர்களே பலகோடி வணக்கத்துடன் நான் உங்களுக்கு இந்த கடிதத்தை எழுதுகின்றேன்.

மார்கழி மாதம் 2003ம் ஆண்டு எனது கணவனின் நேரங்காரணமாக தாங்களிடம் ஆசீர்வாதம் கேட்டு வந்த போது எந்த வெளிநாட்டு பயணம் தடைபட்டு கொண்டிருப்பதை தங்களிடம் சொன்னபோது அதற்கு பயப்படாதே என்று எனக்கு அச்சார கூடு கட்டி விட்டீர்களா ஐயா ஆனால் தாங்கள் சொன்ன தினத்தில் நாளை 08.02.2004 அதிகாலை 4.00மணிக்கு எயாபோட் போகின்றேன் ஐயா. உங்களுக்கு மிகுந்த நன்றி கூறி விடை பெறுகின்றேன். வெளிநாடு போய் சுபீட்ச வாழ்வு 'கிட்ட எனக்கு ஆசீர்வதியுங்கள் ஐயா

நன்றி

**கமலகுமாரி மட்டக்களப்பு!**

கனம் மேன்மைதாங்கிய பேராசிரியர் டாக்டர் P.K. சாமி ஐயா அவர்களுக்கு கமலகுமாரி எழுதிக்கொள்வது!

ஐயா எனது தொழில் அதிகாரிகளின் பிரச்சினைகள் காரணமாக சகோதரன் சாமித்தம்பியின் அறிமுகத்துடன் தங்களிடம் ஆலோசனை கேட்டு வந்தபோது அன்னை துணையுடன் அருட் கடாச்சத்து பரிகாரத்தின் பின் தொழில் அதிகாரிகளின் எதிரி தொல்லை நீங்கி சுபீட்சத்துடன் தொழில் செய்கின்றேன் என்பதை நன்றியுடன் தெரியத்தருவதோடு மேலும் எனக்குள்ள சிறுசிறு பிரச்சினைகளுக்கு ஆசீர்வாதம் தருவீராக என்று தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**செல்வராஜ் கொழும்பு-13**

அருள்ஞானசித்தர் ஜோதிட பக்குவ இளமை ஐயா அவர்களுக்கு எனது மகள் ராதிகாவின் ஜாதகத்தை தங்களிடம் கொடுத்து கனித்து பார்த்து அவளின் திருமண விடயம் கேட்ட போது 21-5-2004க்குள் திருமண வாய்ப்பு உண்டு அதுவும் வெளிநாட்டு வரன் தான் அமையும் என்று ஆணித்தரமாக கூறினீர்கள். ஐயா நாங்கள் முற்றிலும் எதிர்ப்பார்க்காத விதமாக ஐயா குறிப்பிட்ட கால எல்லைக்குள் எனது மகளுக்கு வெளிநாட்டு வரன் ஒரு நல்ல இடத்தில் இருந்து வந்து முடிவாகியுள்ளது. சொன்னது பழித்துவிட்டது. ஞானத்துடன் கூறும் ஜாதகம் என்றுமே பிழைத்தது இல்லை என்பது நிருபமாகிவிட்டது. 12-2-2004ம் ஆண்டு எனது மகளுக்கு நிச்சயதார்த்தம் நடக்கின்றது. ஏல்லாம் ஐயாவின் ஆசீர்வாதம். ஐயாவின் சேவை மென்மேலும் வளர ஸ்ரீ துர்க்கையை பிராத்திப்பதோடு நானும் எனது குடும்பமும் என்றும் நன்றி உள்ளவர்களாக இருப்போம் என்பதை கூறிக்கொள்கிரோம்.

நன்றி

**பாதிமா!**

கனம் மதிப்பிற்குறிய சாமி ஐயா அவர்களுக்கு வணக்கத்துடனும் நன்றியுடனும் எழுதும் கடிதம்.

ஐயா எனது தகப்பன் பாருள் என்பவர் பரம்பரையாக குடிக்கு அடிமைப்பட்டு குடித்து குடித்து தங்ளிடம் வந்து முறையிட்ட போது அதை நிறுத்தி தருவதாக கூறி செய்த பரிகாரத்தின் பின் எனது தகப்பன் படிப்படியாக முற்றாகவே குடியை நிறுத்தி விட்டார் என்பதை குடும்பத்தில் அனைவரும் சந்தோஷத்துடன் ஐயாவிடம் கூறிக்கொள்வதோடு மேற்படி எனது தகப்பனின் காலில் உள்ள புண் வருத்தத்தையும் குணப்படுத்தி எனது தகப்பனை காப்பாற்றித்தர தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

வணக்கம்

**குறைம் சுவஸ்!**

அன்புள்ள சாமி ஐயா அவர்களுக்கு பணிவுடன் எழுதிக் கொள்வது யாதெனில் நான் என்னுடைய வருத்தம் சம்பந்தமாக தங்களுடன் தொலை பேசி ஊடாக தொடர்பு கொண்டு எனது வேதனையை தங்களுக்கு தெரித்தேன். தாங்களும் என்மீது கூடிய கவணம் செலுத்தி ஸ்ரீ துர்க்கை அம்மன் அருளுடன் எனக்கு உதவி செய்தீர்கள். அதன் பின்பு என்னுடைய வேதனைகள் மிகவும் குறைந்துள்ளது. எனவே தங்களையும் ஸ்ரீ துர்க்கை அம்மனையும் எப்பொழுதும் வணங்க கடமைப்பட்டுள்ளேன்.

நன்றி

குறிப்பு: வாடிக்கையாளரின் மாந்திரீக இரகசியங்கள் பாதுகாக்கப்படும்

**Prof. Dr .PK. சாமி (J.D.G.A.N.)J.P.**
ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம், மாந்திரீக உச்சாடன பீடம்
இல. 162, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு - 13.
தொலைபேசி: 0112470615-2342463-2342464
தொலைநகல்: 0112344831

நுவரெலியாவில் :
33, Daily Fair Complex, Nuwara Eliya.
Tel : 052-2222508, 2235097 Fax: 052-2222508

எம்மிடம் வெளிநாட்டவருக்கு பிரத்தியேக விசேட சேவை பிரிவுண்டு. இங்கு தீய வேலைகளுக்கு இடமில்லை.

Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N) Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N) Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N) Prof. Dr .PK. சாமி (J.D.G.A.N) Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N)

## இன்னொருவர் பார்வையில்

**தமிழ்ச் சமூகம் வன்செயல் கலாசாரத்தின் மரணப் பிடிக்குள் சிக்கி, மூச்சுத் திணறி சேடம் இழுத்துக்கொண்டிருக்கிறது. மாற்றுக் கருத்துக்களைக் கூடச் சகித்துக்கொள்ள முடியாத எமன்கள் தமிழ் மக்களுக்காகத் தர்ம யுத்தம் நடத்துவதாகக் கூறிக்கொண்டே பாசக் கயிறுகளோடு தேசமெங்கும் தமிழர்களைத் தேடியலைகிறார்கள். தேடியழிக்கிறார்கள். சகோதரப் படுகொலைகள் சம்பிரதாயப் பூர்வ நிகழ்வுகளாகிவிட்டன. தனிநபர் வழிபாட்டுப் பாதையில் மூளைச்சலவை செய்து வளர்த்தெடுக்கப்பட்டவர்கள் சூரிய தேவர்களின் பலிபீடத்தில் தமிழ் இளைஞர்களையும் வயோதிபர்களையும் கூட காணிக்கை செலுத்திக் கொண்டேயிருக்கிறார்கள். இவ் வகையில் பலியெடுக்கப்பட்ட சின்னபாலாவின் சோகக் கதை இது.**

# சின்னபாலாவும் தமிழ்த் தேசியப் போராட்டமும்

கொழும்பில் ஆகஸ்ட் 16ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்ட பாலநடராஜ ஐயரின் கொலையைக் கண்டித்தும் 'சின்னபாலா' என்று பிரபலமாக அழைக்கப்படும் அவருக்கு அஞ்சலி செலுத்தும் முகமாகவும் ரொறன்ரோவிலுள்ள தமிழ் மக்களில் பல தரப்பட்டவர்கள் தமது துணிச்சலான ஐக்கியத்தை வெளிப்படுத்தும் விதத்தில் அண்மையில் ஸ்காபரோவில் ஒன்றுகூடினர். மோட்டார்ச் சைக்கிளில் வந்த கொலைஞர்களால் வெள்ளவத்தையில் மிலேச்சத்தனமாகச் சுட்டுக் கொல்லப்பட்ட சின்னபாலாவை நினைவு கூருமுகமாக ஈ.பி.டி.பி., த.வி.கூ., புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈரோஸ் ஆகியவற்றின் பிரதிநிதிகளோடு மனித உரிமை ஆர்வலர்கள், கல்விமான்கள், பத்திரிகையாளர்கள், சட்டத்தரணிகள், பிராமண மதகுருமார் மற்றும் ஏனைய சிவில் சமூக அங்கத்தவர்களெனப் பலர் ஒரு சனிக்கிழமை மாலை ஒன்றுகூடினர்.

கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களைப் பொறுத்தவரை மூன்று காரணங்களுக்காக இந்த அஞ்சலிக் கூட்டம் முக்கியத்துவமிக்க நிகழ்வாகும்.

முதலாவதாக, எவ்வித நோக்குகளுமின்றி ரொறன்ரோவில் தனித் தனியே இருக்கும் புலிச்சார்பற்ற பிரிவுகள் ஒரு பொது நோக்குக்காக ஐக்கியப்பட்டிருக்கும் அருமை பெருமையான சந்தர்ப்பம் இதுவாகும். இரண்டாவதாக, தமிழ் அரசியல்வாதியொருவரின் கொலையைக் கண்டித்தும் அவருக்கு அஞ்சலி செலுத்துமுகமாகவும் ரொறன்ரோவில் பதினைந்து வருடங்களுக்குப் பின்னர் பகிரங்கக் கூட்டமொன்று நடத்தப்பட்டிருக்கிறது. தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கத்துக்காக நடைபெற்ற கூட்டம் கடைசியாக 1989ஆம் ஆண்டு நடைபெற்றது. மூன்றாவதாக, முன்னரெப்போதும் தமிழ்ப் பொதுக் கூட்டமொன்றில் கலந்துரையாடப்படாத பல விடயங்கள், கருத்துக்கள் பற்றி இதன்போது எடுத்தாளப்பட்டன.

புலிகளினால் ஒழுங்குசெய்யப்படும் கூட்டங்களில் கலந்துகொள்ளும் அளவுக்கு மக்கள் கூட்டம் இல்லையென்றபோதிலும் அரசியல் மனோ உணர்வுகளைப் பொறுத்தவரை கூட்டத்தில் பங்குபற்றியவர்களில் பெரும்பாலானோர் வித்தியாசமான தரத்தை உடையவர்கள். சின்னபாலாவின் வாழ்க்கை மற்றும் அவர் பணியாற்றிய காலகட்டங்களைப் பற்றிப் பேசிய பேச்சாளர்கள் கொலையை வன்மையாகக் கண்டித்ததோடு, கொலைக்குப் பின்னணியிலுள்ள பாரிய விடயங்கள் குறித்தும் எடுத்துக் கூறுவதில் துணிவு காட்டினர். பேசக் கிடைத்த சிறிது நேரத்துக்குள் பல பரிமாணங்களிலிருந்து தற்போதைய கொலை நெருக்கடிகளைப் பேச்சாளர்கள் அணுகினர்.

### அரசியல் படுகொலைகள்

தமிழ் சமூகத்தில் இடம்பெற்று வரும் அரசியல் படுகொலைகளின் வரலாறு, மாற்று அரசியல் கருத்துக் கொண்டவர்களைத் துரோகிகளென முத்திரை குத்தி, அவர்களைக் கொல்வதைக் களையெடுப்பு என நியாயப்படுத்தும் தன்மை, தமிழ்ப் பாசிஸத்தின் எழுச்சி, தற்போது தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் கொலைகளின் மிலேச்சத்தனமான தன்மை, தமிழ் மக்களின் இருண்ட எதிர்காலம், கடந்த பொதுத் தேர்தலின்போது வடக்கு, கிழக்கில் பெறப்பட்ட மோசடியான பெறுபேறுகள், ஏகப் பிரதிநிதித்துவ அந்தஸ்து போன்ற, இதுகாலவரை பேசுவதற்குத் தடுக்கப்பட்டிருந்த சில விடயங்கள், கருத்துக்கள் குறித்து சில பேச்சாளர்கள் ஆழமாக உரையாற்றினர்.

கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் பலர் தமது மனைவிமாருடன் வருகை தந்திருந்தனர். அரசியல் விழிப்புணர்வு கொண்டவர்கள் கூட்டத்தில் பங்குபற்றினர். அங்கு வெளியிடப்பட்ட பெரும்பாலான கருத்துக்களுக்குப் பெரும் வரவேற்புக் காணப்பட்டதோடு இடைக்கிடையே எழுந்தமானவையாகவும் நீடித்தும் ஏற்பட்ட கைதட்டல் ஓசைகளின் மூலம் தமது அங்கீகாரத்தை வெளிப்படுத்தினர். இக் கூட்டம் நடைபெற்ற சூழ்நிலையும் நிலவிய மனோ உணர்வும் மிகவும் உயர்ந்ததாக விளங்கியது. கேவலமான நிலைக்கு அது கீழிறங்கவில்லை. கூட்டத்தில் பெரும்பாலும் புத்துணர்வே காணப்பட்டது. கூட்டத்தின் பின்னர் அதேயிடத்தில் நடைபெற்ற இராப்போசன விருந்தில் பல்வேறு கருத்துக்கள் பரிமாறப்பட்டன. இக் கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி கலந்துகொண்டமை பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தது. சமகால தமிழ் அரசியல் குறித்து அவர் தெரிவித்த முக்கியமான கருத்துகளுக்குக் கூட்டத்தில் நல்ல வரவேற்புக் காணப்பட்டது.

கூட்டம் ஆரம்பமானபோது ஈ.பி.ஆர்.எல்.எப்.பின் சுபத்திரன் அல்லது ரொபேர்ட்டின் தாயாரான திருமதி தம்பிராஜா சின்னபாலாவின் உருவப் படத்துக்கு மலர் மாலை சூட்டி அஞ்சலி செலுத்தியது வேதனை மிக்க காட்சியாக அமைந்திருந்தது. கடந்த வருடம் ஜூன் மாதம் 15ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் புலிகளால் கொல்லப்பட்ட தனது மகனை நினைத்து அவர் சத்தமிட்டு அழத் தொடங்கிய போது கலங்காதவர்களே கிடையாது. இவரின் கணவரும் சகோதரரும் கூட முன்னர் கொல்லப்பட்டனர்.

**மூன்று தசாப்தங்களுக்கு மேலாகத் தமிழ்த் தேசியப் போராட்டத்துக்குப் பெரும் பங்காற்றிய சின்னபாலா சின்னத்தனமாக வெள்ளவத்தையில் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தின் பின்னணியைச் சுட்டிக்காட்டிப் பத்திரிகையாளர் டி.பி.எஸ் ஜெயராஜ் எழுதிய கட்டுரை கடந்த 17-10-2004 ஆம் திகதிய "சண்டே லீடர்" ஆங்கில வார இதழில் வெளியாகியிருந்தது. அதன் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது.**

இக் கூட்டத்தை 'இலங்கையில் மனித உரிமைகள் சமத்துவம், சமாதானம் மற்றும் ஜனநாயகத்துக்கான கூட்டமைப்பு' ஒழுங்கு செய்திருந்தது. கூட்டத்தின் இறுதியில் தீர்மானமொன்று முன்வைக்கப்பட்டு, ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இத் தீர்மானம் பாலநடராஜ ஐயரின் கொலையைக் கண்டித்ததோடு, அவரது குடும்பத்தவருக்கு அனுதாபத்தையும் தெரிவித்து நிறைவேற்றப்பட்டது. இலங்கையில் மாற்று அரசியல் கருத்துக் கொண்டவர்களைக் கொன்றொழிக்கும் கொலைக் கலாசாரத்துக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டுமென்றும் அத் தீர்மானத்தில் கோரப்பட்டிருந்தது. கனடாவும் ஏனைய சர்வதேச சமூகமும் அழுத்தங்களைப் பிரயோகித்து இக் கொலைகளை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்றும் அத் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டிருந்தது.

சின்னபாலா கொல்லப்பட்டுப் பல வாரங்கள் கழித்துவிட்டபோதிலும் அவரின் வாழ்க்கையும் மரணமும் தமிழ்த் தேசியப் போராட்டத்தில் சம உரிமைக்காக அவர் வகித்த பாத்திரமும் இப்போதும் கூட மீள நினைத்துப் பார்க்கக்கூடிய அளவுக்குப் பெறுமதி மிக்கதாகும்.

சின்னபாலா என்று பிரபலமாக அழைக்கப்படும் பாலநடராஜ ஐயர் கொழும்பு, வெள்ளவத்தையில் ஆகஸ்ட் மாதம் 16ஆம் திகதி மிலேச்சதனமாகச் சுட்டுக் கொல்லப்பட்டார். ஹெல்மற் அணிந்தபடி மோட்டார்ச் சைக்கிளில் பயணஞ் செய்த இந்தக் கொலையாளிகள் புலிகளின் கொலைக் குழுவைச் சேர்ந்தவர்கள் என்றே கருதப்படுகிறது. இக் கொலைக்கான குற்றச்சாட்டை வேறு யார் மீதும் பழிபோட முயற்சிகள் எடுக்கப்பட்டபோதும் கூட, உண்மையில் புலிகளே குற்றவாளிகள் என்பது பரவலாகத் தெரிந்த விடயமாகும். சின்னபாலாவின் கொலை குறித்து புலிகள் கவலையோ கண்டனமோ தெரிவிக்கவில்லை என்பதும் இங்கு குறிப்பிடக்கூடியதாகும்.

### தமிழ் அரசியல்

சின்னபாலா 1957ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஆறாம் திகதி பிறந்தார். யாழ்ப்பாணத்திலுள்ள சிறிய சமூகமான பிராமண வகுப்பைச் சேர்ந்தவர் அவர். பாலாவின் தந்தையாரான கந்தசாமி ஐயர் புங்குடுதீவைச் சேர்ந்தவர். யாழ்ப்பாணம் ஊரெழுவில் ஆசிரியராகப் பணி புரிந்தார். பாலாவின் பெரிய தந்தையார் மிகப் பிரபலமான இசையமைப்பாளரும், பாடகரும், கவிஞருமான இணுவில் வீரமணி ஐயராவார். "கற்பகவல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்" என்ற பாடலை எழுதி அதற்கு இசையமைத்தவர் வீரமணி ஐயராவார். இந்த பக்திப் பாடலைப் பிரபல பாடகர். டி.எம்.சௌந்தரராஜன் பாடியிருந்தார்.

கடந்த வருடம் யாழ்ப்பாணத்தில் வீரமணி ஐயர் காலமானபோது அவரது இறுதிக் கிரியைகளைச் செய்தவர் சின்னபாலாவே யாவார். பாலாவின் உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தபோதும் கூட, துணிந்து பாதுகாப்புமின்றி இறுதிக் கிரியைகளை நடத்த யாழ்ப்பாணத்துக்குச் சென்றார். இந்தக் கடமை உணர்வும் அவரது குடும்பக் கடப்பாடுமே அவரது மரணத்துக்குக் காரணமாக அமைந்தது.

பாலா அன்றைய தினம் சுவிற்ஸர்லாந்து தூதரகத்துக்கு விசா பெறுவதற்குச் செல்லத் திட்டமிட்டிருந்தார். இலங்கை - இந்திய ஒப்பந்தம் தொடர்பாகப் புலிகளை விமர்சித்து அவர் கடைசியாக எழுதிய நூல் சுவிஸில் வெளியிடப்படவிருந்தது. அவரது எண்ணிக்கையற்ற பத்திரிகைத் துறைசார்ந்த எழுத்துகளுக்கப்பால் அவர் மூன்று நூல்களை எழுதியுள்ளார். 'காணி உறுதி' என்ற நூல் இவற்றில் பிரபலமானதாகும்.

சின்னபாலா மூன்று தசாப்தங்களுக்கு மேலாகத் தமிழ்த் தேசிய அரசியலில் மிக நெருக்கமாகச் செயற்பட்டு வந்தவர். 15 வயதிலிருந்தே தமிழ் மாணவர் அரசியலில் தன்னைத் தீவிரமாக ஈடுபடுத்தினார். 1972ஆம் ஆண்டு தமிழ் மாணவர் பேரவையின் அங்கத்தவராகச் சேர்ந்தார். தமிழ்த் தீவிரவாதப் போராட்டத்தில் பழைய அங்கத்தவர்கள் பாலாவின் பங்களிப்பை வெகுவாகப் பாராட்டினர். யாழ்ப்பாணத்தில் பொலிஸ்காரரின் பிடியிலிருந்து தப்பியோடிய பல இளம் தமிழ்ப் போராளிகளுக்கு அடைக்கலம் கொடுத்துப் பாதுகாத்து தங்க இடமும் உணவும் அளித்து உதவியவர் பாலா.

பின்னர் விமலதாஸன் என்பவரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த 'மனிதம்' என்ற முற்போக்குத் தமிழ்ச் சஞ்சிகையை மையமாகக் கொண்டு அவர் தனது செயற்பாடுகளை மேற்கொண்டு வந்தார். அப்போது இடதுசாரி சார்பு நிலைப்பாட்டை எடுத்திருந்தார். பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாணவர் இளைஞர் அமைப்புகளிலிருந்து விலகிச் செயற்பட்டார். முற்போக்கான புரட்சிகர அரசியலில தன்னை ஈடுபடுத்திக்கொண்ட பாலா, ஈழப் புரட்சிகர மாணவர் அமைப்பின் (ஈரோஸ்) ஸ்தாபக அங்கத்தவர்களில் ஒருவராவார். இந்த அமைப்பும் பின்னர் அரசியல் முன்னணியாகப் பரிணாமம் பெற்றது. அப்போது இவர் 'ஈரோஸ் பாலா' என்று பரவலாக அறியப்பட்டார். பின்னர் வேலுப்பிள்ளை பாலகுமார் ஈரோஸில் இணைந்து கொண்டபோது வே.பாலகுமாரின் அரசியல் சிரேஷ்டத் தன்மையைக் கவனத்திற் கொண்டு அவரே 'ஈரோஸ் பாலா' என்று அழைக்கப்பட்டார். இதன் பின்னர் பாலநடராஜ ஐயர் 'சின்னபாலா' என்று அழைக்கப்பட்டார்.

### பத்திரிகையாளர்

1987இன் ஆரம்பத்தில் ஈரோஸின் கருத்துக்களைப் பிரதிபலித்து வெளியிடப்பட்ட "தாக்கீகம்" என்ற சிற்றிதழை வெளியிடுவதில் சின்னபாலா பெரும் பங்காற்றினார். "இளையவன்" என்ற புனைபெயரை அங்கு பயன்படுத்தினார். அவர் ஓர் அரசியல் ஊழியருமாவார். ஆசிரிய பீட வேலைகளோடு தன்னை மட்டுப்படுத்தாமல் பொதுமக்களோடு நெருங்கிச் செயற்பட்டுப் பொதுஜன அபிப்பிராயத்தைக் கட்டியெழுப்புவதிலும் பெரும் பங்காற்றினார்.

அவர் பிராமண சமூகத்தவர் என்றபோதிலும் கூட சகல சமூகங்களைச் சேர்ந்த மக்களுடனும் நெருங்கிப் பழகினார். சாதி உணர்வுடன் அவர் என்றும் செயற்பட்டதில்லை. இவர் கிழக்கிலும் மன்னாரிலும் இந்தியாவிலும் அரசியற் பணியாற்றினார். அத்துடன் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் கூட அரசியற் பணி புரிந்துள்ளார்.

1983ஆம் ஆண்டு ஜூலை மாதத்துக்குப் பின்னர் ஈரோஸ் இயக்கமும் இந்தியாவில் ஆயுதப் பயிற்சி பெற்றது. ஆரம்பத்தில் பயிற்சி பெற்ற குழுவில் சின்னபாலாவும் ஒருவராக இருந்தார். சின்னபாலா தொழில்சார் பத்திரிகையாளனாக இல்லையென்றபோதிலும் கூட, நடைமுறை நோக்கங்களுக்காக அவர் முழுநேர எழுத்தாளனாக விளங்கினார். அவரது அரசியலின் ஒரு விஸ்தரிப்பே பத்திரிகைத் துறையாகும். அவர் ஒரு மலினமான பிரசாரகர் அல்லர். ஆழ்ந்த அரசியல் உணர்வும் அஞ்சா நெஞ்சமும் கொண்டவர். பத்திரிகைத் துறையின் சுதந்திர அங்கத்தவரென்று தம்மைத் தாமே பறைசாற்றிக்கொள்ளும் பத்திரிகையாளர்களுடனும் ஏனைய போலிப் பத்திரிகையாளர்களுடனும் ஒப்பிடுகையில் சின்னபாலாவைச் சிறந்த, உன்னதமான பத்திரிகையாளனென்று பலர் கருதுகின்றனர். 'தாக்கீகம்' வெளிவந்த காலத்திலிருந்தே அவரது எழுத்துக்களை வெகுவாக மதித்து வந்தவன் நான்.

1990ஆம் ஆண்டு இந்திய இராணுவம் வெளியேறி புலிகளின் கைகளில் பொறுப்புச் சென்றபோது, நிலைமைக்கேற்ப ஈரோஸ் ஒரு முடிவை எடுக்க வேண்டி ஏற்பட்டது. பாலகுமாரினாலும் பராவினாலும் தலைமை தாங்கப்பட்ட பெரும்பாலான ஈரோஸ் அங்கத்தவர்கள் புலிகளோடு இணைந்து கொண்டனர். ஈரோஸ் இயக்கம் கலைக்கப்பட்டு பெரும்பாலான அங்கத்தவர்கள் புலிகளோடு இணைந்துகொண்டபோது சின்னபாலாவும் புலிகளுடன் இணைந்தார்.

யாழ்ப்பாணத்தில் இருந்தபோது புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த "ஈழநாதம்" பத்திரிகையின் உதவி ஆசிரியராகவும், பின்னர் பிரதி ஆசிரியராகவும் சின்னபாலா பணியாற்றினார். இதன் மூலம் அவருக்கு வேலைவாய்ப்பு ஒன்று கிட்டியது. மாத்தையா விவகாரத்துக்குப் பின்னர் இந்தப் பத்திரிகை கடும் கட்டுப்பாடுகளை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டது. ஆசிரிய பீட சுதந்திரம் மிகக் கடுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டது. யாழ்ப்பாணத்தில் புலிகளின் எதேச்சாதிகாரம், எதிர்காலத்தில் என்ன நடக்கப்போகிறதென்ற உள்ளுணர்வைச் சின்னபாலாவுக்கு ஏற்படுத்தியது. புலிகள் தமிழ் மக்களை அழிவுப் பாதைக்கு மட்டுமே இட்டுச் செல்கிறார்கள் என்பதை உணர்ந்துகொண்ட சின்னபாலா, அதற்குப் பங்காளியாக இருக்க விரும்பவில்லை. புலிகளின் மேலாதிக்கத்திலிருந்து தப்பிச் செல்வதென்பது ஒன்றும் இலகுவான காரியமல்ல.

'ரிவி ரச' நடவடிக்கையின் மூலம் 1995ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தை இலங்கை இராணுவம் மீளக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தபோது சின்னபாலாவுக்கு அதற்கான சந்தர்ப்பம் கிட்டியது. சந்தேகம் எதுவும் ஏற்படுத்துவதைத் தவிர்ப்பதற்காக தனது நூல்களையும் பத்திரிகைகளையும் வன்னிக்கு அனுப்பிவைத்துவிட்டு யாழ்ப்பாணத்தில் அவரது குடும்பத்தினருடன் தங்கியிருந்தார். அவர் வன்னிக்குச் செல்லவில்லை.

"காலைக்கதிர்" என்ற பத்திரிகையை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிப்பதற்கான முயற்சிகளில் அப்போது அவர் ஈடுபட்டிருந்தார். எனினும் அவரது முயற்சி வெற்றியளிக்கவில்லை.

பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எப்.வில் இணைந்து கொண்ட சின்னபாலா 1998ஆம் ஆண்டு வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றார். இக் கட்சி பின்னர் சுரேஷ் அணி என்றும் வரதர் அணி என்றும் இரண்டாகப் பிரிந்தது. இதனால் ஏமாற்றமடைந்த சின்னபாலா எந்தத் தரப்பினருடனும் இணைந்துகொள்ளாமல் அரசியலிலிருந்து ஒதுங்கினார்.

### பாலாவின் திறமைகள்

பாலாவின் திறமைகளை உணர்ந்து கொண்ட ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, அவரைத் தனது கட்சியில் சேருமாறு அழைத்தார். பாலா அதற்கிணங்கி இணைந்துகொண்டார். யாழ்.மாவட்டத்தில் ஈ.பி.டி.பி. சார்பில் ஒக்டோபர் 10-2000, டிசம்பர் 05-2001, ஏப்ரல் 02-2004 ஆகிய பாராளுமன்றத் தேர்தல்களில் இவர் போட்டியிட்டார். பாலா வெற்றிபெறவில்லையென்றபோதிலும் தேர்தல் பிரசாரங்களில் உணர்வுபூர்வமாகப் பங்கேற்றார். புலிகளின் வன்செயல் மற்றும் கொலை அச்சுறுத்தல்களுக்கும் அவர் துணிகரமாக முகங் கொடுத்தார்.

ஈ.பி.டி.பி.யின் பிரசாரச் செயலாளர் என்ற வகையில் சின்னபாலா தனது பத்திரிகைத் துறைசார்ந்த திறமைகளை வெளிப்படுத்துவதற்குப் போதிய வாய்ப்புகளைப் பெற்றுக்கொண்டார். ரமேஷ் அற்புதராஜாவின் மரணத்துக்குப் பின்னர் "தினமுரசு" வார இதழில் ஆசிரிய பீட விவகாரங்களோடு இவர் தன்னை இணைத்துக்கொண்டார். 'அம்பிமகன்' என்ற புனைபெயரை அங்கு அவர் பயன்படுத்தினார். "மக்கள் குரல்" என்ற ஈ.பி.டி.பி.யின் இதழையும் அவரே வெளியிட்டார். ஈ.பி.டி.பி.யின் தமிழ் இணையத்தளத்துக்கும் இவரே பொறுப்பாக இருந்தார்.

சின்னபாலாவின் மரணத்துக்குச் சில வாரங்கள் முன்னதாக அவரது முன்னாள் சகாவும் தற்போது புலிகளின் சிரேஷ்ட தலைவர்களிலொருவருமான வே.பாலகுமார், கொழும்பில் வாழ்ந்த சின்னபாலாவுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டார். ஈ.பி.டி.பி.யின் அரசியலில் இருந்து ஒதுங்குமாறும் முடிந்தால் வெளிநாடு செல்லுமாறும் வே.பாலகுமார் தனது பழைய நண்பருக்குப் "புத்திமதி" சொன்னார். சின்னபாலா உறுதியாகவும் அடக்கமாகவும் அதற்கு மறுப்புத் தெரிவித்தார்.

### வாழ்வதற்கான உரிமை

அங்கே அப்பொழுதே அவர் தலைவிதி நிர்ணயிக்கப்பட்டுவிட்டது. எமதர்மன் தனது கிங்கரர்களைப் பாசக் கயிறோடு அனுப்பிச் சின்னபாலாவின் உயிரை எடுப்பதற்கு தருணம் பார்த்துக்கொண்டிருந்ததையே இவர்களது சம்பாசணை குறித்து நின்றது. அந்த நாள் ஆகஸ்ட் 16ஆம் திததியும் வந்தது. மிலேச்சத்தனமாக மட்டுமல்ல, மிகக் கொடூரமாகவும் சின்னபாலாவின் உயிர் பறிக்கப்பட்டது. அவர் தனது மனைவி ஜெகதீஸ்வரியையும் மூன்று புதல்விகளையும் விட்டுப் பிரிந்தார்.


அவரது படுகொலை, கருத்துக்களைச் சுதந்திரமான வெளியிடுவதற்கான உரிமையையும், அரசியற் அபிப்பிராயங்களை வெளியிடும் உரிமைகளையும், எல்லாவற்றுக்கும் மேலாக அவரது வாழும் உரிமையையும் பறித்த மிகப் பயங்கரமான உரிமை மீறலாகும். வாழ்வதற்கான உரிமையே இவை அனைத்தையும் விட மிக முக்கியமான அடிப்படை உரிமையாகும். இந்த வாழ்வுரிமை இருந்தால் மட்டுமே ஏனைய மனித உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

உயிர் வாழ்வதற்கான புனிதத் தன்மையின் முக்கியத்துவத்தை தமிழ் சமுதாயம் உணர்ந்துகொள்ளவில்லையென்பது வேதனைக்குரியது. சின்னபாலா போன்ற திறமையும் விசுவாசமும் மிக்கவர்களைத் "துரோகிகள்" என்று முத்திரை குத்தி இலகுவில் கொன்றுவிடுகிறார்கள். இந்தப் பயங்கரமான மரண நடனம் மேலும் மேலும் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கையில் மௌனமே தொடர்ந்தும் கோலேச்சுகிறது. வாழ்வுரிமை மதிக்கப்படாத வரை தமிழ் மக்களின் எதிர்காலம் இருண்டதாகவே இருக்கப் போகிறது.

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

NO HINDU
NO MOVIE
நடமாடும் -
இஸ்திரி வண்டிக் காரனுக்கும்
நமஸ்காரம் போட்டாகிவிட்டது
ப்ராமிஸ்ஸுக்கு பதிலாக -
பல்பொடி;
டாபருக்கு பதிலாக
பயத்த மாவு -
வீட்டிலுள்ள



நண்டு சிண்டுகளுக்கெல்லாம்...
அம்மா
சிக்கனத்தை விளக்கி
சுற்றறிக்கை வாசித்தாள்.
ஆயிரம் அப்பளத்திற்கு
இப்பவே
உளுந்து வாங்கி
ஊறப் போட்டாள்;
குல தெய்வத்திற்குக்
காசு முடிந்தாள்.
மஹாலிங்கபுரம்
பிள்ளையார் கோவில்...
அடிபப்பிரதட்சிணம் செய்து
மஞ்சள் தடவிய
என் ஜாதகத்தை
BIO - DATA வோடு
சுவரில் தொங்கவிட்டாள்;
ராவெல்லாம்
ராமஜெயம்...
கொயர் கொயராக
எழுதினாள்.
தன் -
காதிலும் மூக்கிலும்
ஈர்க்குச்சியை
செருகக்கிக் கொண்டு...

ப்ளூ ஜாக்கர்
வைரத் தோட்டையும் -
வைர மூக்குத்தியையும் -
எம்பெருமாள் அண்ட் சன்ஸில் -
எண்ணெய்
எடுக்கக் கொடுத்தாள்;
காப்பி கொட்டை
சங்கிலியையும் -
ஹைதர் காலத்து
காசு மாலையையும்
அழித்து
ஆறுஜதை வளை பண்ணச்
சொன்னாள்;
கூடவே -
ஆறுஜோடி
ஆனைவால் முடியையும்
கொடுத்தாள்.
பழைய துணிகளைப் போட்டு -
பாத்திரம் வாங்கினாள்;
பக்கத்தாத்து
பங்கஜம் மாமியிடம் -
பத்தாயிரம் ரூபாய்க்கு
சீட்டுக் கட்டினாள்.
நாத்தனார் பிடுங்கலில்லாமல் -
நல்ல வரனாகக்
குதிர வேண்டுமேயென்று...
வயிற்றில்
நெருப்பை கட்டிக்கொண்டு
வலம் வந்தாள்.
அம்மா மட்டுமல்ல...
அப்பா,
கிச்சா,
நந்து
அம்புலு
இப்படி வீட்டில்


எல்லாருமே..
பத்து வாரமாக
போர்க்கால நடவடிக்கையில்...
நான் மட்டும்:.
எதிர் வீட்டு
முதலியார்
பையனோடு
ஏற்காடு எக்ஸ்பிரஸ்ஸில்

மேற்கண்ட என் கவிதையை
இப்போது படிக்கையில்
இப்படியெல்லாம் எழுத ஓரளவு
அவகாசம் எனக்கு இருந்ததை
எண்ணி, அந்த நாள் ஞாபகங்கள்
நெஞ்சில் அலைமோதின.
'அந்த நாள் ஞாபகம்' பற்றி
சிறிய விளக்கத்தையும் இப்போது
சொல்ல வேண்டுமென்று எனக்குப்
படுகிறது.
ஒரு வார இதழில் அநுபவத்
தொடரை எழுதிவரும் என்
மதிப்பிற்குரிய அண்ணன்
மெல்லிசை மன்னர் திரு.எம்.எஸ்
விஸ்வநாதன் அவர்கள்.
"உயர்ந்த மனிதன் படத்தில் இடம்
பெற்றுள்ள


**'அந்த நாள் ஞாபகம்**
**நெஞ்சிலே வந்ததே!**
**நண்பனே! நண்பனே!'**

என்னும் பாட்டைப் பற்றி
எழுதுகையில், அந்தப் பாடல்
கவிஞர் கண்ணதாசன்
எழுதியதாகவும், எழுதி
முடித்துவிட்டு அவரைப்பார்த்துக்
கவிஞர் கண்சிமிட்டியதாகவும்
எழுதியிருக்கிறார்.

(தொடரும்.......)




உளவு பார்த்தல் எவ்வாறு ஆரம்பமானது, உளவு பார்த்தலால் என்னென்ன நன்மைகள், தீமைகள் ஏற்படுகின்றன என்பதை சில அநுபவங்களிலிருந்து கூறும் கட்டுரைத் தொடர்....




## சில அநுபவங்கள்

டெல்லியில் நடந்தது :

ஒரு நாட்டினுடைய உளவு நிறுவனத்தின் முக்கிய வேலை அந்நிய நாடுகளிலிருந்து தங்கள் நாட்டுக்குத் தேவையான தகவல்களை இரகசியமாகச் சேகரிப்பது மட்டுமல்ல, அந்நிய நாட்டு உளவாளிகள் தங்கள் நாட்டில் இரகசியமாகச் செய்திகள் சேகரிப்பதைத் தடுப்பதும் ஆகும்.

புதுடில்லியில் உள்ள சோவியத் தூதரகத்தில் வேலை பார்த்த இரண்டாவது செயலாளர், அலுவலகத்திலிருந்து தன்னுடைய வீட்டுக்குக் காரில் செல்வதுதான் வழக்கம். திடீரென்று ஒருநாள் இந்த வழக்கத்தை மாற்றிக்கொண்டு மாலையில் அலுவலகத்திலிருந்து வீட்டுக்கு நடந்து செல்ல ஆரம்பித்தார். அவருடைய வீடு நடந்து செல்லுகின்ற தூரத்திலும் இருக்கவில்லை. பல மைல்களுக்கு அப்பால் இருந்தது.

சோவியத் தூதரக இரண்டாவது செயலாளரின் இந்தப் போக்கு இந்திய உளவுத் துறையினரிடம் அவரைப் பற்றிச் சந்தேகம் கொள்ள வைத்தது. அவரைக் கண்காணிக்கத் தொடங்கினார்கள். வீட்டுக்கு நடந்து போனாரே தவிர சந்தேகப்படும்படியான வேறு எந்தக் காரியத்திலும் அவர் ஈடுபடவில்லை.

ஆகவே, இந்திய உளவுத் துறையினர் தங்கள் கண்காணிப்பைத் தளர்த்திக் கொண்டார்கள்.

இது நடந்த சில மாதங்களில் மாஸ்கோவில் உள்ள இந்தியத் தூதரகத்தில் வேலை பார்த்து கே.ஜி.பி.யின் கையாளாக மாறிவிட்ட இந்திய இளைஞர் மாற்றலாகி இந்தியாவிற்கே திரும்பி வந்தார். இந்திய அரசு சம்பந்தப்பட்ட சில தாஸ்வேஜுகளைத் தங்களுக்குக் கொண்டுவந்து கொடுக்கும்படி இந்திய இளைஞரிடம் கே.ஜி.பி.யினர் கேட்டுக்கொண்டார்கள்.

அலுவலகத்திலிருந்து வீட்டுக்கு நடந்து செல்லும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொண்டிருந்த சோவியத் தூதரகத்தின் இரண்டாவது செயலாளர் இந்திய இளைஞரின் தொடர்பு மனிதர் ஆனார். இரண்டாவது செயலாளரின் நடவடிக்கையைக் கண்காணிப்பதை இந்திய உளவுத் துறையினர் தளர்த்தியிருந்தாலும் அடியோடு கைவிட்டுவிடவில்லை. வீட்டுக்கு நடந்து செல்கின்ற அவர் இந்திய இளைஞரை வழியில் சந்தித்துப் பேசுவதையும் பரி மாற்றங்கள் செய்துகொள்வதையும் அவர்கள் கவனித்தார்கள். ஒரு சமயம் இந்திய இளைஞர் சோவியத் அதிகாரியைச் சந்தித்துவிட்டுத் திரும்பியபோது அந்த இளைஞரை இந்திய உளவு அதிகாரிகள் தொடர்ந்து சென்று, வீட்டில் அவரை மடக்கி விசாரிக்கத் தொடங்கினார்கள். இந்திய அரசின் இரகசியங்களை வெளிநாட்டிற்கு அவர் கொடுத்து வருவதாக நேராகவே அவர் மீது குற்றம் சாட்டினார்கள். முதலில் இந்திய இளைஞர் அதை மறுத்தார். உளவு அதிகாரிகள் விடவில்லை. கடைசியில் குற்றத்தை ஒப்புக்கொண்டதோடு, தனக்கு இந்த நிலை ஏற்பட்டதற்கான காரணத்தையும் விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துச் சொன்னார்.

மறுநாள் இந்திய இளைஞர் நமது உளவாளிகள் சொன்னபடி சில இரகசிய தஸ்தாவேஜுகளை எடுத்துக்கொண்டு சோவியத் தூதரக இரண்டாவது செயலாளரைச் சந்திக்கச் சென்றார். இரண்டாவது செயலாளர் இந்திய இளைஞரிடமிருந்து அவற்றைப் பெற்றுக்கொள்ளும்போது உளவு இலாகாவினர் அவரைக் கையுங்களவுமாகப் பிடித்தார்கள்.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)

# இந்திய கிரிக்கெட் அணியின் அதிக வருமானம் ஈட்டும் வீரர்கள்

உலகிலேயே மிகச் சிறந்த கிரிக்கெட் வீரர்கள் இருவர் என்றால் அதிலொருவராகக் கருதப்படும் சச்சின் டெண்டுல்கார் இந்தியாவில் இருக்கக்கூடிய கிரிக்கெட் வீரர்களிடையே மிகவும் செல்வந்த வீரராகக் காணப்படுகின்றார். இவரது தனிப்பட்ட சொத்துக்களின் பெறுமதி இந்திய நாணயத்தில் 20 கோடி ரூபாயாகும். இலங்கையில் இது 45 கோடி ரூபாய்களாகும்.

சச்சின் மேற்படி தனது வருமானத்தில் அதி கூடிய தொகையை கிரிக்கெட் போட்டிகளில் கலந்துகொள்வதன் மூலம் ஈட்டுவதில்லை. அதனை அவர் பல்வேறு விளம்பரங்களில் தோன்றுவதன் மூலமே ஈட்டிக்கொள்கிறார். விளம்பரங்களில் தோன்றி நடிப்பதும் தோன்றுவதும் கூட இதனுள் அடக்கம்.

இவ்வாறு சச்சின் ஒரு விளம்பரம் தொடர்பில் கையெழுத்திட்ட ஒப்பந்தமொன்று மிகவும் பிரபல்யமாகியது. அதாவது அவர் இந்த விளம்பரத்துக்காக மிகக் கூடிய தொகை ஒன்றைப் பெற்றுக்கொண்டார் என்பதுதான் அந்தப் பிரபல்யத்துக்குக் காரணமாகும். இந்திய நாணயத்தில் 100 கோடி ரூபாயை (இலங்கையில் 210 கோடிக்கு அண்மித்த தொகை) இந்த விளம்பரம் அவருக்கு ஈட்டிக் கொடுத்துள்ளது.



இவ்வாறான பாரிய தொகையுடன் ஒப்பிடும் போது அவவர் கிரிக்கெட் போட்டிகளில் கலந்து கொள்வதன் மூலம் பெறும் வருமானம் மிகவும் குறைந்ததாகும்.

டெஸ்ட் போட்டியொன்றில் கலந்துகொள் வதற்காக இவர் வாங்கும் தொகை இந்திய நாணயப்படி 1.25 இலட்சங்கள் ஒருநாள் போட்டி ஒன்றில் கலந்துகொள்வதற்காக இந்திய நாணயப்படி 90,000 ரூபாய் இவருக்கு வழங்கப் படுகின்றது.

கிரிக்கெட் விளையாட்டுக்குப் புறம்பாக இவர் பெறும் வருமானத்துடன் ஒப்பிடும்போது மேற்படி தொகையானது பெட்டி கேஷ் (Petty Cash) என்றே கூப்படுகின்றது.

இவரது நிதி தொடர்பான நடவடிக்கைகளை இவரது மனைவி அஞ்சலியும் சகோதரர் அஜித்துமே கவனித்துக்கொள்கின்றனர்.

இந்தியாவில் கிரிக்கெட் வீரர் ஒருவரின் பெயரில் உருவாக் கப்பட்டுள்ள ஒரேயொரு உணவகமான 'டெண்டுர்கார்ஸ்'ஸின் சம உரிமையாளராகவும் இவர் இருந்து வருகின்றார். இந்த உணவகத்தின் அருகிலேயே நினைவுச் சின்னங்களை விற்பனைச் செய்யும் விற்பனை நிலையமொன்றையும் அவர் நடாத்தி வருகின்றார்.



ரீ சேர்ட்ஸ், பேனா, மக்ஸ், பென்சில் பெட்டி, கீ டெக்ஸ் போன்ற பொருட்கள் இங்கு விற்பனையாகின்றன.


சர்வதேச விற்பனைப் பொருட்களைப் பிரசாரம் செய்யும் விளம்பரக் கலையில் இந்தியாவிலேயே இருவர்தான் மிகவும் முன்னிலை வகிக்கின்றனர். இவ்விருவருக்கும்தான் இங்கு பெரும் வரவேற்பும் கேள்வியும் இருந்து வருகின்றது.

ஒருவர் சச்சின் டெண்டுல்கார், மற்றவர் அமிதாப்பச்சன். இவர்களுடன் தற்போது இன்னும் ஒருவர் இணைந்துகொண்டுள்ளார். 'தேவதாஸ்', திரைப்படம் சர்வதேச ரீதியில் புகழ் பெற்றதன் பின்னர் அதில் நடித்துள்ள பிரபல நடிகை ஐஸ்வர்யாதான் அந்த மூன்றாமவராவார்.

அதிக வருமானத்தை ஈட்டும் இந்திய கிரிக்கெட் வீரர்களிடையே இந்திய அணியின் தலைவர் சவ்ரவ் கங்குலிக்கும் முக்கியம் இடம் இருந்து வருகிறது. அண்மையில் இவர் குறிப்பிட்ட ஒரு நிறுவனத்தின் விளம்பரம் ஒன்றில் தோன்றுவதற்காக இந்திய நாணயத்தில் 60 கோடி ரூபாய்க்கான ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளார். கிரிக்கெட் விளையாட்டுக்குப் புறம்பாக அவரது வருட வருமானம் அண்ணளவாக இந்திய நாணயப்படி 7 கோடியாகும். (இலங்கைப் பெறுமதிப்படி 14கோடி ரூபாய்)

கங்குலிக்கு அடுத்ததாக அதிக வருமானம் ஈட்டி வருபவர் ராகுல் திராவிட். கடந்த சில வருடங்களாக இந்திய அணியின் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் இவர் விளங்கி வருகின்றார்.


திராவிட் இதுகால வரையில் நல்லதொரு விற்பனைச் சந்தையைத் தேடிக் கொண்டுள்ள இந்திய வீரராகத் திகழ்கின்றார். இன்றைய நிலையில் முதல் தர நிறுவனங்கள் பல இவருடன் விளம்பரங்களுக்காக ஒப்பந்தங்



களைச் செய்துகொண்டுள்ளன. போட்டிகளில் ஈட்டிக்கொள்ளும் வருமானத்தைத் தவிர இவர் வருடந்தோறும் 5 கோடிக்கும் 6 கோடிக்கும் இடைப்பட்ட ஒரு தொகையை வெளி வருமானமாக ஈட்டிக்கொள்கின்றார்.


சிறந்த துடுப்பாட்ட வீரர்களுள் ஒருவராக முன்னணிக்கு வந்துகொண்டிருக்கும் விரேந்தர் செவாக் இப்போது செல்வந்த வீரர் என்ற பட்டியலில் இடம் பிடித்துள்ளார்.

குறிப்பாக அண்மையில் இடம்பெற்ற இந்தியா - பாகிஸ்தான் கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் போது இவர் பெற்றுக்கொண்ட 300 ஓட்டங்கள் இவரை இப்போது பிரபல இடத்துக்கு இட்டுச்



சென்றுள்ளது. இதன் பின்னர் இவரை நாடி வரும் விளம்பரதாரர்களின் தொகையும் அதிகரித் துள்ளது.

இப்போது கூட முன்னணி நிறுவனங்கள் பலவற்றுடன் இவர் ஒப்பந்தம் செய்துகொண் டுள்ளார். இதன் மூலம் இவர் வருடமொன்றுக்கு ஈட்டும் தொகை இந்திய நாணயப்படி 5 கோடி ரூபாயாகும்.



அண்மையில் இவர் புதிய விளம்பரம் ஒன்றில் தோன்றுவதற்காக இந்திய நாணயத்தில் ஒரு கோடி ரூபாயைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

இது ஆரம்பமே தவிர அவரது விற்பனைச் சந்தை விலை இன்னும் சில வருடங்களில் இதை விடப் பல மடங்கு அதிகரிக்கக் கூடும் என விளம்பர முகவர்கள் கூறுகின்றனர்.

வீ.வீ.எஸ். லக்ஷ்மன், யுவராஜ் சிங் போன்றவர்கள் கிரிக்கெட் விளையாட்டுக்குப் புறம்பாக ஈட்டுகின்ற வருட வருமானம் 4 கோடி ரூபாய்களாகும் (இந்திய நாணயப்படி).

-பாரூக்

# கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, இந்துசமய அலுவல்கள் அமைச்சு மற்றும் கல்வி, வாழ்க்கைத் தொழிற்பயிற்சிக்கு உதவும் அமைச்சு.

## தொழிற்பயிற்சி பிரிவு.

### தச்சுவேலைப் (இயந்திர) பயிற்சி நெறி
Carpenter (Mechanised ) Course

வடக்கு, கிழக்கு மாகாணத்தை வாழ்விடமாகக் கொண்ட அல்லது அங்கிருந்து இடம்பெயர்ந்து வெளிமாவட்டங்களில் வாழும், பாடசாலைக் கல்வியை முடித்த / இடைநிறுத்திய மற்றும் பாதிப்புற்ற தரம் 8இல் சித்திபெற்ற இளைஞர் யுவதிகளுக்காக மேற்படி அமைச்சினால் ஆறு மாத கால தச்சுவேலைப் (இயந்திர) (**Carpenter Mechanised**) பயிற்சி நெறி திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்மொழிமூலம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப் பயிற்சிநெறிக்குத் தெரிவுசெய்யப்படுவோருக்குத் **தங்குமிட வசதியும், உதவிக் கொடுப்பனவும்** வழங்கப்படும்.

### அலுமினியம் கட்டுமாணப் பயிற்சி நெறி
**Aluminium Fabricators Course**

வடக்கு, கிழக்கு மாகாணத்தை வாழ்விடமாகக் கொண்ட அல்லது அங்கிருந்து இடம்பெயர்ந்து வெளிமாவட்டங்களில் வாழும், பாடசாலைக் கல்வியை முடித்த / இடைநிறுத்திய மற்றும் பாதிப்புற்ற தரம் 8இல் சித்திபெற்ற இளைஞர் யுவதிகளுக்காக மேற்படி அமைச்சினால் ஆறு மாத கால அலுமினியம் கட்டுமான (**Aluminium Fabricators**) பயிற்சிநெறி கொழும்பு மாவட்டத்தில் தமிழ் மொழி மூலம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப் பயிற்சிநெறிக்குத் தெரிவுசெய்யப்படுவோருக்குத் **தங்குமிட வசதியும், உதவிக் கொடுப்பனவும்** வழங்கப்படும்.

### இயந்திர இயக்குனர் (தரிப்பு மற்றும் நகரும் பயிற்சி)
**Machinery Operator Training (Moving & Stationary)**

வடக்கு, கிழக்கு மாகாணத்தை வாழ்விடமாகக் கொண்ட அல்லது அங்கிருந்து இடம்பெயர்ந்து வெளிமாவட்டங்களில் வாழும், பாடசாலைக் கல்வியை முடித்த / இடைநிறுத்திய மற்றும் பாதிப்புற்ற தரம் 8இல் சித்திபெற்ற இளைஞர், யுவதிகளுக்காக மேற்படி அமைச்சினால் அநுராதபுரம் மாவட்டத்தின் கல்குளம் பிரதேசத்தில் உள்ள பயிற்சி நிலையத்தில் சகலவகையான பார இயந்திரங்கள் இயக்குவதற்கான பயிற்சி தமிழ்மொழி மூலம் அளிக்கப்படவுள்ளது.

இப் பயிற்சிநெறிக்குத் தெரிவுசெய்யப்படுவோருக்குத் **தங்குமிட வசதியும், உதவிக் கொடுப்பனவும்** வழங்கப்படும்.

**தகைமைகள்**

1. வடக்கு, கிழக்கு மாகாணங்களை வாழ்விடமாக / பிறந்த இடமாகக் கொண்டவர்களாக இருத்தல்.
2. தரம் 8 அல்லது அதற்கு மேல் சித்தி பெற்றிருத்தல்.
3. பார ஊர்தி சாரதி – அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல். (வகுப்பு ஏ) (இயந்திர இயக்குனருக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு மட்டும்)
4. 17 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல்.
5. நற்குணமும் நல்லொழுக்கமும் உடையவர்களாய் இருத்தல்.

மேற்படி பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தேசிய அடையாள அட்டையின் நிழற் பிரதியுடன் கீழே தரப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்தை "A4" அளவுத் தாளில் தயாரித்துப் பூரணப்படுத்தி 30.11.2004 திகதிக்கு முன்

**பணிப்பாளர்,**
**தொழிற்பயிற்சி,**
**கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி,**
**கூட்டுறவு அபிவிருத்தி, இந்து சமய அலுவல்கள் அமைச்சு**
**மற்றும் கல்வி, வாழ்க்கைத் தொழிற்பயிற்சிக்கு உதவும் அமைச்சு.**
**2ஆம் மாடி,**
**64, காலி வீதி,**
**கொழும்பு – 03.**

என்ற முகவரிக்கு அனுப்பல் வேண்டும்.

க. மகானந்தன்,
செயலாளர்.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

1. முழுப்பெயர்,(ஆங்கிலத்தில் பெரிய எழுத்தில்) :-
..........................................................................................

2. முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில் பெரிய எழுத்தில்) :-
..........................................................................................

3. விலாசம் (ஆங்கிலத்தில்) :-
..........................................................................................

4. முழுப்பெயர் (தமிழில்) :-
..........................................................................................

5. இலங்கைப் பிரஜையா? ஆம் / இல்லை:-

6. தேசிய அடையாள அட்டை இல
..........................................................................................

7. ஆண் / பெண்:-
..........................................................................................

8. குடியியல் நிலை :-
..........................................................................................

9. பிறந்த திகதி :-
..........................................................................................

10. (1) பிறந்த மாவட்டம் :-
..........................................................................................
(2) தேர்தல் மாவட்டம் :-
..........................................................................................
(3) தேர்தல் தொகுதி பிரிவு:-
..........................................................................................

11. கல்வித் தகைமைகள் (சித்தியெய்திய பாடம், ஆண்டுகளுடன்) :-
..........................................................................................

12. வாழ்க்கைத் தொழிற்பயிற்சித் தகைமைகள் (பெற்றிருப்பின்) :-

| நிறுவனம் | துறை | காலம் |
|---|---|---|
| | | |

13. மொழித் தேர்ச்சி :-

| | வாசித்தல் | எழுதுதல் | பேசுதல் |
|---|---|---|---|
| தமிழ் | | | |
| ஆங்கிலம் | | | |
| சிங்களம் | | | |

14. தொழில் அநுபவம் (இருப்பின்) :-

| காலம் (மாதங்களில்) | தொழில் புரிந்த இடம் | மாதாந்த வேதனம் ரூபாய். |
|---|---|---|
| | | |

இத்துடன் தேசிய அடையாள அட்டையின் (இருபுறம்) நிழற்பிரதி சமர்ப்பிக்கின்றேன்.

எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்ட விபரங்கள் யாவும் உண்மையானதும் சரியானதுமென வெளிப்படுத்துகிறேன். பொய்யான தகவல்கள் தரப்பட்டுள்ளதென எச்சந்தர்ப்பத்திலும் கண்டுபிடிக்கப்பட்டால் எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம் என நான் நன்கறிவேன்.


......................
திகதி

......................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.



சக்தி சக்தி சக்தீ சக்தீ
சக்தீ சக்தீ வாழீ நீ!
சக்தி சக்தி சக்தீ சக்தீ
சக்தீ சக்தீ வாழீ நீ!

சுப்பிரமணிய பாரதியார்–



# வியாபாரியின் மகன்

பாப்பா முரசு சிறுகதை



ஒரு வியாபாரிக்கு ஒரு மகன் இருந்தான். ஒருநாள் அவன் ஒரு புத்தகத்தை நூறு ரூபாவுக்கு வாங்கி வந்தான். இந்த இளைஞன் வாங்கி வந்த புத்தகத்தில் இருந்ததெல்லாம் "உனது விதியை நீ ஏற்றுக்கொள்!" என்ற வரிதான்.

இந்த ஒரு வரிப் புத்தகத்துக்காகத் தனது மகன் நூறு ரூபா கொடுத்துள்ளான் என்று கேள்விப்பட்டவுடன் அந்த வியாபாரிக்குச் சினம் தலைக்கேறியது.

"முட்டாள்! வெளியே போய் பொது அறிவு கற்று வா!" என்று உறுமிய வியாபாரி, அவனைத் தன் வீட்டை விட்டு வெளியேற்றினான்.

வியாபாரியின் மகன் வேறொரு ஊருக்குச் சென்று அங்கேயே தங்கலாம் என்று தீர்மானித்தான். அந்த ஊரில் இருக்கும்பொழுது ஒருவன் அவனிடம் வந்து "உன் பெயர் என்ன? நீ எங்கிருந்து வருகிறாய்?" என்று கேட்டான்.

"உனது விதியை ஏற்றுக்கொள்" என்று வியாபாரியின் மகன் அவனுக்கு மறுமொழி கூறினான்.

அவனிடம் கேள்வி கேட்கும் மனிதர்களுக்கெல்லாம் அவன் இந்த பதிலைத்தான் திரும்பத் திரும்பக் கூறி வந்தான். அதனால் அங்குள்ள மக்கள் எல்லோரும் "விதியை ஏற்றுக்கொள்" என்றே அவனை அழைக்கத் தொடங்கினர்.

ஒருநாள் அந் நாட்டின் அழகிய இளவரசி சந்திரவதி என்பவள், தன் தோழிகளுடன் ஒரு விழாவில் கலந்து கொள்வதற்காக வந்துகொண்டிருந்தாள். வழியில் அவள் வியாபாரியின் மகனைச் சந்தித்து, அவன் மீது காதல் கொண்டாள். அவள் தோழி ஒருத்தியிடம் அவனைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யும்படி கேட்டுக் கொண்டாள்.

அவள் கூறியவாறே அத் தோழி வியாபாரியின் மகனிடம் சென்று, "நான் இளவரசி சந்திரவதியிடமிருந்து வருகிறேன். அவள் தங்களைக் காண விரும்புகிறாள். தங்களை உடனே சந்திக்க வேண்டுமென்கிறாள்" என்று கூறினாள்.

"யாரும் பார்க்காமல் அரண்மனைக்குள் நான் எப்படி வருவது?" என்று வியாபாரியின் மகன் தோழியைக் கேட்டான்.

"என்னிடம் ஒரு யோசனை இருக்கிறது! நீங்கள் இரவு நேரத்தில் கோட்டையின் அருகே வந்தால், ஒரு ஜன்னலிலிருந்து ஒரு கயிறு தொங்கிக் கொண்டிருப்பதைக் காண்பீர்கள். அதைப் பிடித்து மேலேறி இளவரசியின் அறைக்கு வந்துவிடுங்கள்" என்று தோழி பதிலுரைத்தாள்.

"அப்படியே செய்கிறேன்" என்று கூறிவிட்டு, வியாபாரியின் மகன் அங்கிருந்து போய்விட்டான்.

அதன் பிறகு வியாபாரியின் மகன் மிகவும் ஆழமாகச் சிந்தித்து, தான் இளவரசியை இரகசியமாகச் சந்திப்பது தவறு என்று தீர்மானித்தான்.

'விதியை ஏற்றுக்கொள்' என்றழைக்கப்படும், வியாபாரியின் மகன் அப்படியே ஊரைச் சுற்றிக்கொண்டு வந்தவன் கோட்டையின் அருகில் ஒரு கயிறு தொங்கிக்கொண்டிருப்பதைக் கண்டான். அவனுக்கு ஆர்வம் மிகுதியாயிற்று, அதனால் அவன் அதைப் பிடித்து ஏறி இளவரசி சந்திரவதியின் அறைக்குள் நுழைந்தான்.

இளவரசி அவனை வரவேற்று அவனுக்கு நல்ல விருந்தளித்து உபசரித்தாள். அவள் அவனிடம், "தங்களைக் கண்டவுடனேயே நான் தங்கள் மீது விருப்பம் கொண்டேன். நீங்கள்தான் எனக்குக் கணவனாக வேண்டும்" என்று கூறினாள்.

வழமைபோல "உனது விதியை ஏற்றுக்கொள்" என்று அந்த வியாபாரியின் மகன் பதிலளித்தான்.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் இளவரசி, "விதியின் வழியை யாராலும் மாற்ற முடியாது" என்று கூறினாள்.


அப்போது அங்கு வந்து ஒன்றும் புரியாத அரசன், "இவன் கூறிய வார்த்தைகளுக்குப் பொருளென்ன" என்று கேட்டபொழுது, நடந்த சம்பவங்கள் அனைத்தும் கூறப்பட்டன.

பிறகு அரசன் தனது மகளான சந்திரவதியை, ஏராளமான நகையையும் ஆயிரம் கிராமங்களையும் சீதனமாகக் கொடுத்து வியாபாரியின் மகனுக்கு மணம் செய்வித்தான். அவனுக்கு ஆண் வாரிசு இல்லாமையினால் வியாபாரியின் மகனே தனக்குப் பிறகு நாட்டின் மன்னன் என்று அறிவித்தான்.

ஆகையினால் 'உனது விதியை ஏற்றுக்கொள்' என்பவன், அதன் பிறகு மிக்க மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தான்.

விதியை இறைவன் வகுத்த நியதி. எல்லாம் அதன் படித்தான் நடக்கும். அதனால்தான் நாம் அனைவரும் விதிக்கப்பட்ட விதியை ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்பொழுது எமது எதிர்காலம் எமது விதிப்படியே நிறைவேறும்!

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **03.11.2004.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **568**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 566

பரிசுக்குரியவர்:
**சி. சுரேக்கா, தரம் 04, யா/வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம், வேலணை**

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| எம். காயத்திரன், இல 254, கோயில் வீதி, பலகட்டுவ. | ஆர்.கே கௌதீபன், தரம் 2B, நு/கொட்டகலை த.ம.வி. பிரதான வீதி, கொட்டகலை. |
| கோ. அக்ஷயா, தரம் 3 G, வின்சன் மகளிர் தேசிய உயர்தரப் பாடசாலை, மட்டக்களப்பு. | ரா.திவ்யா, 175, லோவர் வீதி, பதுளை |
| எம். எச். எப். ஜெஸ்மினா, 61/30, கொரட்டுவ, வெலிகம. | ஜீ. கோகுலன், தேசிய இந்துக் கல்லூரி, மாத்தளை. |
| சி. கோகுலரமணன், தரம் 6E, வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம், வவுனியா. | எஸ். நிவேதா, கண்டி வீதி, வவுனியா. |
| அருட்செல்வம் செந்தூரன், கலைவாணி முன்பள்ளி பாடசாலை, அன்புவழிபுரம், திருகோணமலை | யோ. சரண்யா, தரம் 8A, தி/கலைமகள் வித்தியாலயம், அன்புவழிபுரம், திருகோணமலை. |


# ஆத்திசூடி

## ஈவது விலக்கேல்

எவரும் பிறருக்கு கொடுப்பதை நீ தடுக்காதே.

நன்றி: நிரஞ்சலா, கண்டி. -ஔவையார்

## சிட்டுவின் கீர்த்தி




பட்டம் ஒன்றைப் பெரிதாய்க்
கட்டி அதனின் நடுவிலே
கொட்டை எழுத்தில் என் பெயர்
பட்டை அடித்து எழுதினேன்.

வெட்ட வெளியில் நின்றுநான்
விட்டேன் நூலில் கட்டியே.
வெட்டி வெட்டி இழுக்கவே
பட்டம் மேலே சென்றதே!

எட்டி வானைத் தொட்டிடும்
இன்ப மான வேளையில்
பட்டென் றந்த நூலுமே
நட்ட நடுவில் அறுந்ததே!

கட்ட விழ்ந்த காளைபோல்
காற்ற டித்த திசையிலே
பட்டம் பறந்து சென்றதே!
விட்டுத் திரும்ப முடியுமோ?

# அதிசய உலகம்

## பாம்பு பற்றிய செய்திகள்

**பா**ம்பு என்றவுடனேயே சாகடிக்கும் பாம்பின் விஷம் நமக்கு நினைவில் தோன்றிப் பயமூட்டுகிறது. 'பாம்பு என்றால் படையும் நடுங்கும்' என்பது உண்மைதான். ஆனால் எல்லாப் பாம்புமே கொடியது அல்ல; விஷங்கொண்டதுமல்ல.

நிலத்திலும் கடலிலும் வாழும் பாம்புகளுக்கு விஷம் உண்டு. ஆனால் நல்ல நீரில் (Fresh Water) உள்ள பாம்புகள் ஆபத்தில்லாதவை.

பாம்புகளுக்குக் கண் இமைகள் கிடையாது. ஆனால் அதற்குப் பதிலாக பாதுகாப்பான, மெலிதான, கண்ணாடி போன்ற திரை உண்டு. அந்தக் கண்ணாடிதான் கூரிய பார்வைக்கு உதவுகிறது. பாம்பின் விலா எலும்புகள் விரைவாக ஊர்ந்து செல்வதற்கு ஒத்தாசை புரிகின்ற வகையில் அமைந்துள்ளன.

பாம்பு இரையை விழுங்கவே செய்கிறது. ஏனெனில், அதற்கு வாயில் உணவை அரைக்கத்தக்க அமைப்பு இல்லை.

பாம்பின் எலாஸ்டிக் வாய்த் தாடைகளும் லூசான தொண்டை எலும்புகளும், இரைகளை விழுங்கும் தன்மையில் இறப்பர் போல விரியும் வகையில் அமைந்துள்ளன. பைதான் (Pythan) எனப்படும் மலைப்பாம்பு ஒரு பன்றிக் குட்டியைக் கூட அப்படியே விழுங்கிவிடும்.

சிலர் பாம்பின் தலையை அல்லது கண்களைப் பார்த்தே விஷப் பாம்பைக் கண்டு பிடித்துவிடலாம் என்கிறார்கள். ஆனால் அது உண்மையல்ல. பாம்பின் வாயைப் பார்த்து அதில் பற்கள் (Tangs) உள்ளனவா என்பதைப் பார்த்தே விஷப் பாம்பைக் கண்டறியலாம்.

பாம்பைக் கடவுளாக நாக தேவதை என்றும், நாகசாமி என்றும் வணங்கும் வழக்கம் ஆதியிலிருந்தே இருந்து வருகிறது.

மத்திய காலத்தில் மாயாஜால வித்தைகளுடன் (Sorcery) பாம்பு தொடர்புடையதாக இருந்தது.

ஒரு வகை எண்ணெய் பாம்பின் தோல்களிடையே சுரக்கிறது. அது கடினமாகும் போது தோல் தளர்ந்து, அதை தரையிலோ கல்லிலோ தேய்த்து பாம்பு உரித்து விடுகிறது.

உலகின் எல்லாப் பகுயிலும் பாம்பு காணப்படுகிறது. ஏறக்குறைய 2000 வகையான பாம்புகள் உள்ளன. இவற்றில் நல்ல பாம்பும் (Cobra) கட்டுவிரியனும் (Krait) கொடிய விஷத் தன்மை உடையவை.

பாம்புகள் பல சாவுகளுக்குக் காரணமாக இருப்பினும், சில வகைகளில் பயனுள்ளவைகளாகவே உள்ளன. தானியப் பயிர்களை அழிக்கும் எலிகள், தவளைகள் போன்ற ஜந்துக்களை (Pests) ஒழித்திட பாம்புகள் உதவுகின்றன. இரத்த உறைவு (Blood Clottind) மற்றும் சில வகைப் புற்றுநோய்களுக்குச் சிறந்த மருந்துகளைத் தயாரிக்க பாம்பின் விஷம் பயன்படுகிறது என்பதையும் மறுப்பதற்கில்லை.






# உங்கள் பொது அறிவு எப்படி?

1. மெரினோ என்றால் என்ன?
   **கம்பளி செய்யப் பயன்படும் ஆடு.**
2. கரிபு என்றால் என்ன?
   **வட அமெரிக்க பனி நாய்.**
3. றிமோனா என்றால் என்ன?
   **மற்ற மீன்களில் ஒட்டும் தன்மையுள்ள மீன்.**
4. அல்பகா என்றால் என்ன?
   **தென்னமெரிக்க கம்பளி ஆடு.**
5. ஒறாங்ஹுறான் என்றால் என்ன?
   **சுமாத்ரா, ஜாவாவில் உள்ள மனிதக் குரங்கு.**
6. கடல் சாமந்தி என்றால் என்ன?
   **கடலில் வாழும் ஒரு பிராணி**
7. மிக வேகமாக ஓடும் விலங்கு எது?
   **சீட்டால்**
8. புவிவாழ் மிகச் சிறிய முலையூட்டி எது?
   **மூஞ்சூறு**
9. மாமிசம் உண்ணும் மிகப் பெரிய மிருகம் எது?
   **துருவக் கரடி.**
10. முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் விலங்கு எது?
   **நீர் அகழான்.**





## கலனுக்கு 1800 மைல்

மோட்டார் வாகன நிர்மாணத்தின் மிக அண்மைய புரட்சியே இது. ஜேர்மனியில் நிர்மாணிக்கப்பட்ட இவ் வாகனத்துக்கு ஐட்ரஜன் கலனுக்கும் குறைந்த அளவு எரிபொருளில் 1800 மைலுக்கும் மேற்பட்ட தூரம் பயணிக்க முடியும். 'ஐயிஷன் 3000' என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்பட்ட இவ் வாகனத்தை வியாபார ரீதியில் சந்தைப்படுத்த இன்னும் சில வருடங்கள் காத்திருக்க வேண்டும் என்று அதன் தொழில்நுட்பவியலாளர்கள் கூறுகிறார்கள்.



## உயிர் தப்பினாரா இவர்?

ஜல்லிக்கட்டு விளையாட்டு என்பது உலகில் மிகப் பிரபலமான விளையாட்டுகளில் ஒன்றாகக் கருதப்பட்டபோதிலும், உயிரைப் பணயம் வைத்தே இப் போட்டியில் ஈடுபட வேண்டியிருப்பதை நாம் புதிதாகச் சொல்லத் தேவையில்லை. இப்புகைப்படம் குறிப்பது உலகிலே மிகவும் பிரபல்யம் வாய்ந்த ஜல்லிக்கட்டு வீரர் ஒருவர் முகங்கொடுத்த திகிலூட்டும் அநுபவமொன்றையே. பிரான்ஸ் வீரரான இவரின் பெயர் செபஸ்டியன் கெஸ்டேலா. இவர் அண்மையில் பிரான்ஸில் நடைபெற்ற ஜல்லிக்கட்டுப் போட்டியின்போது நன்கு பெருத்து வளர்ந்த காளையின் தாக்குதலுக்கு முகங்கொடுத்த காட்சியையே படத்தில் காண்கிறீர்கள்.

12 வயது தொடக்கம் ஜல்லிக்கட்டுப் போட்டியில் கலந்துகொண்ட இவரது தற்போதைய வயது 22. எவ்வளவுதான் இவ்வாறான படுமோசமான பயங்கரச் சம்பவங்கள் எதற்குமே அஞ்சாமல் அஞ்சா நெஞ்சனாக எதற்கும் துணிந்து முகங்கொடுத்து நாளுக்கு நாள் முன்னேறும் வீரனாகப் புகழ் பெற்றுள்ளார். இதற்கு முன்னரும் ஒரு தடவை இதே போன்ற காளையின் பயங்கரத் தாக்குதலினால் இவரது கால் தொடையில் ஒரு அடி நீளமான கிழிவு ஏற்பட்டது.


இப் புகைப்படத்தில் காணப்படும் தாக்குதலின் பின்னர் கெஸ்டேலா பல அடி உயரத்தில் தூக்கி எறியப்பட்டு பின்னர் தரையில் வீழ்ந்தார். அப்போதும் காளை அவரை துரத்தி மீண்டும் தாக்க முற்பட்டபோது, கெஸ்டேலா காளையிடமிருந்து தப்பி எழுந்து நின்றார். இறுதியில் காளையை அடக்கி போட்டியில் வெற்றிபெற்றமை பார்த்துக்கொண்டிருந்த இரசிகர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

## கடைசிப் பயணமும் கலியுக மோஸ்தரில்.....


இறுதி ஊர்வலம் செல்வதும் இப்போது புதுப்புது விதங்களில் நடைபெறத் தொடங்கியுள்ளது. இங்கிலாந்துப் பிரஜை ஒருவருக்கு அவசியமென்றால் தனது இறுதிப் பயணத்தைச் "போவில்" ஜீப் வாகனத்திலும் செல்ல முடியும். இங்கிலாந்து பேட்போட்ஷெயாரில் நிறுவனம் ஒன்று இறுதி ஊர்வலம் செல்வதற்காக லேன்ட் ரோவர் ஜீப்களை இப்போது வழங்குகின்றது. சாதாரண மாக இங்கிலாந்து வாசிகள் லேன்ட்ரோவர் ஜீப் வகைகளுக்குக் கூடுதலான விருப்பத்தைத் தெரிவிக்கின்றனர்.




## புலியைப் போன்ற பூனை



இது பூனையானாலும் இதே போன்ற அளவுடைய புலிகளும் உள்ளன. அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் பூனைகள் கண்காட்சி ஒன்றில் கலந்துகொண்ட இந்தப் பூனை ராஜாவின் நிறை 23 இறாத்தல். இக் கண்காட்சியைக் கண்டு களிப்பதற்காக 25,000க்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் கலந்துகொண்டனர் என்று குறிப்பிடப்படுகின்றது.



## மாளிகையில் எதிர்ப்பு

இங்கிலாந்து இராணியின் வாசஸ்தலமான பக்கிங்ஹாம் மாளிகை என்பது பாதுகாப்பு ஏற்பாடுகள் உயர்ந்த அளவில் பலப்படுத்தப்பட்ட ஓர் இடமாகும். ஆனால் அண்மையில் 'பேட்மேன்' போன்று அலங்கரித்துக்கொண்ட 33 வயதுடைய நபரொருவர் பாதுகாப்பு வேலிகளைத் தாண்டி சுவரில் ஏறி, அதன் இரண்டாம் மாடிக்குச் சென்று எதிர்ப்புத் தெரிவித்த சந்தர்ப்பமொன்றில் பொலிஸ் அதிகாரியொருவர் அவரை அங்கிருந்து இறக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் காட்சியையே இங்கு காண்கிறீர்கள்.



## பழைய சைக்கிள்! புதிய சாதனை!!

ஆதி காலத்தில் பாவனையில் இருந்த இத் துவிச்சக்கர வண்டி காலத்தின் கோலத்தில் காலாவதியானது. ஆனால் இப்போது மீண்டும் லோயிட் ஸ்கோட் என்ற நபர் தனது புராதன சைக்கிள் மூலம் புதுமை செய்ய முனைந்துள்ளார். அவுஸ்திரேலியாவில் உள்ள பாலைவனங்களில் தனது பழைய சைக்கிள் மூலம் சவாரி செய்து சாதனை படைக்க உள்ளார்.

## வீதி நண்டுகள்

அண்மையில் பல நாடுகளுக்கும் தாக்கத்தை ஏற்படுத்திய 'ஹரிகேன் பிரான்ஸஸ்' என்ற வானிலை மாற்றம் காரணமாக அமெரிக்க புளோரிடா மாநில கடற்கரைக்கு அண்மைய ஸ்டுவட் நகர வீதியில் ஆயிரக்கணக்கான நண்டுகள் நிரம்பி வழிந்தன. கடல் அலைகளினால் அடித்துச் செல்லப்பட்ட நண்டுகள் வீதியில் கரை ஒதுங்கிய காரணத்தால், மீண்டும் கடலை நோக்கி கூட்டம் கூட்டமாக நகரும் காட்சியே இது.



# சினி விசிட்

## ஏன் இப்படி?

ஏடாகூடமாகப் பேசி வாங்கிக் கட்டிக்கொண்டிருக்கும் அந்த சூர்ய இயக்குநர், தனது சமீபத்திய படம் பற்றி 'நியூ' வாகச் சொன்னவர்களை தொடர்ந்து சாடியே வருகிறார்.

சமீபத்திய இப்படியான அவரது உதிர்தல் இது, "என் படத்துக்குத் தான் 'ஏ' சர்டிபிக்கேட் கொடுத்திருக்கிறாங்களே...! அப்புறம் குடும்பத்தோடு போய் பார்த்திட்டு, ஏன் குய்யோ முறையோ என்று கத்தணும்" என்று ஏடாகூடமாகவே பேசித் திரிகிறார்.




நமிதா

## ஸ்ரூடியோவுக்குள் கப்பல்!

பிரசாத் ஸ்ரூடியோவின் ஒரு ப்ளோருக்குள் நுழைந்தபோது பளிச்செனக் கண்ணில் பட்டது கப்பல். ஸ்ரூடியோவுக்குள் கப்பலா என அதிர்ச்சியாகப் பார்த்துக்கொண்டிருந்த போது, எதிரே 'அட்டகாசம்' பட இயக்குநர் சரண்.

"நீங்க பார்க்கிறது நிஜக் கப்பல் அல்ல. நிஜக் கப்பல் மாதிரிப் பண்ணிய ஆர்ட் டைரக்டர் மோகன மகேந்திரனுக்குத்தான் இதற்கான கிரெடிட்" என்றார். இந்த செட்டைப் பார்த்த அஜித் ரொம்பவே வியந்து போனாராம். ஒவ்வொரு அறையாகப் போய் பார்த்தவர் பிரமித்துப் போனாராம். இந்தக் கப்பலில் உள்ள நங்கூரத்தைக் கொஞ்சம் வலுவாகப் பிடித்துப் பார்த்தாராம். அடுத்த கணமே நங்கூரம் மாவாகி விட்டதாம். நங்கூரம் தெர்மக்கோலில் செய்யப்பட்டிருந்தது என்பது அப்போதுதான் அவருக்கே தெரிந்ததாம்.

அட, இந்த மேட்டர்கூட அட்டகாசமாக இருக்கே!



பாண்டியராஜன் - விந்தியா

## முதல் அடிக்கல்!

தமிழில் பெயர் வைக்க வேண்டும் என்று வந்த முதல் கோரிக்கைக்கு உடனடியாக பெயர் மாற்றியிருப்பவர் டைரக்டர் மணிபாரதி. அவர் இயக்கும் 'பிளாஷ்பேக்' படத்துக்கு 'அந்த நாள் ஞாபகம்' என்று தமிழுக்கு மாற்றியிருக்கிறார்.

படத்தில் குடும்பப் பாங்கான நாயகி, மாடர்ன் பெண் என இருவர் தேவைப்பட்டதில் மும்பையில் இருந்து மார்டன் பெண் ஜோதி கிடைத்துவிட்டார். குடும்பப் பாங்குக்குத்தான் கொஞ்சம் சிரமப்பட்டிருக்கிறார். சிநேகா, பிரியாமணி என்று முயன்றவர், தற்செயலாக 'ராமகிருஷ்ணா' நாயகி ஸ்ரீதேவிகாவை பார்த்ததும், நமது குடும்பப் பாங்கான நாயகி கிடைத்துவிட்டார் என்று அப்போதே ஒப்பந்தம் செய்துவிட்டாராம்.

கதைக்கேற்ற நாயகி என்பதே படத்தின் வெற்றிக்கான முதல் அடிக்கல்தானே!

## அடுத்தும் காமெடி!

'வசூல்ராஜா' வெற்றியைத் தொடர்ந்து கமல் அடுத்து பண்ணவிருப்பதும் காமெடிப் படம் தான். சிங்கீதம் சீனிவாசராவ் இயக்கும் இந்தப் படத்துக்குப் பொருத்தமான பெயரைத் தேடிக்கொண்டிருக்கிறார் கமல்.


படம் தமிழிலும் இந்தியிலும் ஒரே நேரத்தில் தயாராகிறது. இதற்கிடையே 'சதி லீலாவதி'யை கன்னடத்தில் எடுக்க இருந்தார் கமல். தற்போது அந்தத் திட்டத்தைத் தள்ளி வைத்துவிட்டு முழுக்க முழுக்க காமெடிப் படத்துடன் ஐக்கியமாகி விட்டார்.

## ரகுமானுக்காக...

'நியூ' வில் எஸ்.ஜே.சூர்யா கிரணோடு ஆடிப் பாடிய 'மார்க்கண்டேயா' பாடலைச் சேர்ப்பதில்தான் பெரும் சர்ச்சை. காட்சியமைப்பு மட்டுமின்றி வரிகளில் கூட ஆபாசம் தலை தூக்கி நிற்கிறது என்றார்கள்.

இந்தப் பாடலைப் பாடியவர் யார் தெரியுமா? 'கண்ணோடு காண்பதெல்லாம்' என்று 'ஜீன்ஸ்' படத்துக்காகப் பாடினாரே. அதே நித்யஸ்ரீதான். அவரிடம் இது பற்றிக் கேட்டபோது, "ஏ.ஆர். ரகுமான் கேட்டாரே என்று பாடினேன்" என்கிறார்.


என்னத்தைச் சொல்ல...!



டைரக்டர் பாலா - தனுஷ் - தயாரிப்பாளர் ஏ.எம்.ரத்னம் கூட்டணியில் உருவாக இருந்த படம் கைவிடப்பட்டது. காரணம்....தன் குருநாதர் பாலு மகேந்திராவின் 'அது ஒரு கனாக் காலம்' படத்திற்கு தனுஷ் கால்ஷீட் சொதப்பியதால் கடுப்பான பாலா தனுஷை பிடிபிடியென்று பிடித்துவிட்டார்.

இதையடுத்தே அஜித் - பாலா - ரத்னம் கூட்டணிக்கு ஏற்பாடானது. படத்திற்கான ஒரு பட்ஜெட்டைப் போட்டு ரத்தினத்திடம் கொடுக்கிருக் கிறார் பாலா.

இதற்கிடையே "படத்தோட பட்ஜெட் உள்ளிட்ட எல்லா டீடெய்லயும் எனக்கு அனுப்புங்க" என அஜித் கட்டளை போட்டார் ரத்னத்துக்கு. இந்தக் கட்டளை ரத்தினத்துக்கு செம கடுப்பைக் கிளப்பியிருக்கிறது.



## தப்பில்லை!

'அது' படத்தின் டிரெய்லர் வெளியீட்டு விழா. தலைமை தாங்க வந்த பாரதிராஜா "டிரெய்லர் மிரட்டுகிறது. இயக்குநர் ரமேஷ் கிருஷ்ணனை பாராட்டுகிறேன்" என்றவர் அதே வேகத்தில் இயக்குநரைப் பார்த்து "இதுதான் முதல் படமா?" என்று கேட்க, அதிர்ந்து போனார் இயக்குநர்.

ரமேஷ் கிருஷ்ணன் இயக்கிய 3 படங்களில் 'அதர்மம்', 'பகைவன்' ஆகிய இரண்டு படங்களும் வெற்றிப் படங்களே. இருந்தும், அறிமுக இயக்குநரா என பாரதிராஜா கேட்டதும் ஒரு கணம் ஆடித்தான் போனார்.

விஷயம் தெரிந்த பின்பு பாரதிராஜா மன்னிப்புக் கேட்டார். ஆனால் "7 வருஷத்துக்குப் பிறகு படம் பண்ணுறேன். அதனால் என்னை புது இயக்குநர் என்று டைரக்டர் பாரதிராஜா நினைச்சது தப்பில்லை" என்று சமாளித்தார், ரமேஷ் கிருஷ்ணன்.

வேறு வழி?



பாக்கியராஜ் - ராஜேஷ் - சேரன்

## எப்ப வருமோ...?

உதயா நடிக்கும் 'ஆசாமி', அதன் வித்தியாசமான கதையால் கவரப்படும் என்கிறார்கள், கோலிவுட்டில். இதையே, 'ஆசாமி' அசத்தும் சாமியாக மாறும் என்று நம்மிடம் உறுதிப்படுத்தினார், உதயாவும்.

"'காதல் ஜாதி' படம் வந்தால் எனது இன்னொரு பரிமாணம் வெளிப்படும் என்று சொன்னீர்கள், என்ன ஆயிற்று?" என்று கேட்டபோது, "உண்மைதான், ஆனால் படத்தை ரிலீஸ் செய்வது அதன் தயாரிப்பாளர் கஸ்தூரிராஜா கையில் அல்லவா இருக்கிறது."

இதைச் சொல்லும்போது மட்டும் உதயா முகத்தில் கணநேர சோகம். மற்றபடி படத்தில் அவருடன் ஜோடி சேரும் ஒரிசாவின் அழகுப்புயல் நேகாவுடன் உற்சாகமாகவே பேசிக்கொண்டிருந்தார்.


வாரமலர் தினமுரசு
ஒக். 28 - நவ. 03, 2004



எந்த 'கிசுகிசு'விலும் சிக்காத நடிகர் அவர்! கால்ஷீட் சொதப்பியதாக ஒருத்தர் கூட அவரை நோக்கி விரல் நீட்டிவிட முடியாது! அவருக்குச் சினிமாவில் வாய்ப்புகள் இல்லாத சமயம் ரஜினியைச் சந்தித்துப் பேசினார். "உங்களுக்கு எவ்வளவு பணம் வேணும்னாலும் தாரேன்" என்றார் ரஜினி. "பணம் வேண்டாம். என் கஷ்டத்திற்கு ஆறுதல் சொல்கிற உங்கள் மனம் போதும்" என்றார் அந்த நடிகர்.


இன்னொரு சமயம்....தன் சுய சம்பாத்தியத்தில் கட்டிய வீட்டை விற்க வேண்டிய சூழல். இந்த விஷயத்தை அறிந்த கமல் சொன்னார். "வீட்டை விற்காதீர்கள். தேவர்மகன் என்கிற படத்தைப் பண்ணப்போகிறேன். அதை நீங்கள்தான் தயாரிக்கணும்" என்றார். "உங்க கால்ஷீட் வேண்டாம். வாங்க கருணை போதும்" என்றார் அந்த நடிகர்.

எம்.ஜி.ஆர் - சிவாஜி என இரு மேதைகளிடமும் அவருக்கு நட்பு உண்டு. அவர்...நடிகர் ராஜேஷ். 'கன்னிப் பருவத்திலே' படம் மூலம் நடிகரான இந்த ஆசிரியர் இதோ 'ஆட்டோகிராப்' வரையிலும் கலைப் பயணத்தின் 25ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறார்.

இதற்காக நடந்த விழாவில் எல்லாச் சினிமாக்காரர்களும் கற்றுக்கொள்ள வேண்டிய ஒரு விஷயத்தை திரையில் காணமுடிந்தது.

'கன்னிப்பருவத்திலே' படத்தை தயாரித்த எஸ்.ஏ.ராஜகண்ணு, அப்படத்தின் இயக்குநர் பாலகுரு, தனது கலையுலகப் பயணத் திற்குத் திருப்புமுனையாக இருந்த பாக்யராஜ், 25ஆவது ஆண்டிலும் தனக்கு வாய்ப்பளித்த சேரன் ஆகியோரை அந்த மேடையில் கௌரவித்தார் ராஜேஷ்!

நிமிடத்தில் நன்றி மறக்கிற சினிமாக்காரர்கள் மத்தியில் ராஜேஷ் மிக வித்தியாசமானவர்தான்.



அர்ஜுன் - லைலா



சந்தியா

தான் நடிக்கும் விளம்பரப் படங்களின் ஒப்பந்தத்தில் 'தனக்கும், விளம்பரம் செய்யும் பொருளுக்கும் சம்பந்தமில்லை' என்று கையெழுத்துப் போட்டுவிட்டுத்தான் நடிக்கிறார் விவேக். எல்லாம் கரப்பான் பூச்சியின் கைங்கர்யம்.

"எந்த ஹீரோவாக இருந்தாலும் பரவால்ல. ஆனா கதைதான் முக்கியம்" என்று இப்போது கலக்கிக் கொண்டிருப்பவர் 'இயற்கை' பட நாயகி குட்டி ராதிகா. இப் போது ஜோராக நடந்து வரும் ஸ்ரீ அங்காளம்மன் பிக்சர்ஸ், நேதாஜியின் தயாரிப்பில் 'குட்' என்கிற படத்தில் புதுமுகம் வினோத் என்பவருடன் நடித்து வருகிறார்.

கவர்ச்சியாக நடிக்கவும் தயங்குவதில்லையாம். எது எப்படியோ, நல்ல நடிகை எனப் பெயரெடுப்பதே என் நோக்கம்" என்கிறார்.

நல்ல நோக்கம். புதிதாக நடிக்க வரும் ஹீரோக்கள் யாரை ஜோடியாகப் போடுவது என்று கலங்க வேண்டாம். இருக்கவே இருக்கிறார் குட்டி ராதிகா.

## குடும்பத்தினர் மீது புகார்!

தான் சினிமாவில் நடித்துச் சம்பாதித்த பணத்தையும் சொத்துக்களையும் தனது குடும்பத்தினர் பறித்துக் கொண்டதாகப் பொலிஸில் புகார் தந்துள்ளார் மீரா ஜாஸ்மின்.

எர்ணாகுளத்தில் டிஐஜி ஸ்ரீலேகாவை நேற்றிரவு சந்தித்து ஒரு புகாரைக் கொடுத்தார் மீரா. அதில் கூறப்பட்டுள்ளதாவது:

நான் நம்பிய அனைவரும் என்னை ஏமாற்றிவிட்டனர். எனக்கு இனி அப்பா, அம்மா, சகோதர, சகோதரிகள் என்று யாரும் கிடையாது. நான் தற்கொலைக்கு முயன்றதாகவும் இயக்குநர் லோகிதாஸ் என் சொத்துக்களைப் பறித்துக்கொண்டதாகவும் எனக்கு மிக வேண்டியவர்களே பொய்ச் செய்திகளைப் பரப்பி வருகிறார்கள்.

நான் குருவாக மதிக்கும் லோகிதாஸையும் என்னையும் தொடர்புபடுத்தி அவமதித்துள்ளனர். என் பெற்றோரும் சகோதரிகளும் என் பணம், சொத்துக்களை மோசடி செய்துவிட்டனர். என் பணத்தில் ரூ.35 இலட்சத்தில் ஒரு அபார்ட்மெண்ட், ஒரு மருத்துவமனையை வாங்கியிருக்கிறார்கள். ஆனால், அதை என் சகோதரிகள் பெயரில் பதிவு செய்துள்ளார்கள். என் கிரெடிட் கார்டுகளையும் முறைகேடாகப் பயன்படுத்தி எனக்கு ஏகப்பட்ட நஷ்டம் விளைவித்துவிட்டார்கள். இது குறித்து விசாரித்து என் சொத்துக்களை மீட்க பொலிஸ் உதவ வேண்டும் என்று கூறியுள்ளார் மீரா.

## செலவு வைத்த நடிகை

சிம்ம நடிகை திருமணத்துக்குப் பின் மீண்டும் நடிக்க வந்தார் அல்லவா...? நாகர்கோவிலில் 15 நாள் தொடர்ந்து படப்பிடிப்புக்காகப் போனது யூனிட். ஆனால், 10 நாட்களில் விழுந்தடித்துக்கொண்டு திரும்பியிருக்கிறது. காரணம், 15 நாளுக்குக் கொண்டுபோன பணம் 10 நாட்களிலேயே கரைந்து போனதுதானாம்.

பட்ஜெட் படம். அது தெரியாமல் சம்பளத்தையும் ஏறுக்குமாறாக வாங்கிக்கொண்ட நடிகை, நாகர்கோவிலிலும் தினமும் கேரவன் வேனை வரவழைத்துத் தங்கிக் கொண்டாராம். அதற்குத் தினமும் 5 ஆயிரம் ரூபாய் வாடகை. தாங்குமா, பட்ஜெட் கம் பெனி?



"குட்"
குட்டிராதிகா- வினோத்



ரோகன்

## செல்வராகவன் இயக்கத்தில் அஜித்!

சமீப காலமாகத் தோல்விப் படங்களையே தொடர்ந்து கொடுத்துக் கொண்டிருக்கும் அஜித் சற்றே சுதாகரித்துள்ளார். இனிமேல் வெற்றிப் படங்களை மட்டுமே கொடுக்கும் வகையில் நல்ல படங்களாகப் பார்த்து நடிக்க வேண்டும் என்று முடிவு செய்துள்ளார்.

தற்போது சரண் இயக்கத்தில் பூஜாவுடன் 'அட்டகாசம்' படத்திலும், லிங்குசாமி இயக்கத்தில் த்ரிஷாவுடன் 'ஜி' படத்திலும் அஜித் நடித்து வருகிறார்.

சூர்யா மூவிஸ் ஏ.எம்.ரத்னம் அஜித்தை வைத்து இரண்டு படங்கள் தயாரிப்பது குறித்து அவரிடம் பேசியிருக்கிறார் என்பதையும், ஒரு படத்தை பாலாவும் மற்றொரு படத்தை தரணியும் இயக்குகிறார்கள் என்பதையும் நாம் ஏற்கெனவே தெரிவித்திருந்தோம்.

இப்போது, இரண்டு வெற்றிப் படங்களைக் கொடுத்த இயக்குநர் செல்வராகவனுடன் அணி சேருகிறார் அஜித். இருவரும் இணைந்து வித்தியாசமான கதையமைப்பில் அட்டகாசமான படத்தைக் கொடுக்கப் போகிறார்களாம்.

இதற்கான பேச்சுவார்த்தை நடந்து முடிந்துள்ளது. அஜித்திற்கேற்ற வகையில் அருமையான கதையை செல்வராகவன் தயார்செய்துள்ளாராம் அஜித்திற்கும் கதை பிடித்துவிட்டது. விரைவில் படப்பிடிப்பைத் தொடங்கவும் முடிவு செய்துள்ளார்கள்.

வழக்கம் போல இந்தப் படத்திற்கும் யுவன்ஷங்கர் ராஜாதான் இசை. ஏற்கனவே யுவனின் இசையில் அஜித் 'தீனா' படத்தில் நடித்துள்ளார். அந்தப் படம் சுமாராக ஓடியதற்கு யுவனின் அற்புதமான இசையும் ஒரு காரணம்.

இதே போல, ஏவி.எம். நிறுவனத்தின் தயாரிப்பிலும் அஜித் நடிக்கவுள்ளதாகப் பேச்சு அடிபடுகிறது. தனக்குப் பின்னால் அறிமுகமாகி தலையெடுத்துவிட்டவர்களை ஒரு கை பார்ப்பது என்ற முடிவில் மும்மரமாக இறங்கியுள்ளார் அஜித்.

தடாலடியா நிறைய பண்றீங்க, கொஞ்சம் கவனம் தலை!

## இப்படியும் அப்படியும்!

'சாமி', 'கோவில்', 'அருள்' என்று தொடர்ந்து ஹரீஸ் ஜெயராஜுடன் கைகோர்த்துக் கொண்டிருந்த டைரக்டர் ஹரி, சரத் நடிக்கும் 'ஐயா' படத்துக்கு பரத்வாஜை ஒப்பந்தம் செய்திருக்கிறார்.

இதற்கு, ஹரீஸுக்கும், ஹரிக்கும் இடையே ஏற்பட்ட உரசல்தான் காரணம் என்று சொல்கிறவர்களும் இருக்கிறார்கள்.

ஆனால், ஹரி டைரக்டராக அறிமுகமான 'தமிழ்' படத்துக்கு பரத்வாஜ்தான் இசையமைத்திருந்தார். பழைய நண்பர்கள் இப்போது ஒன்றுகூடியிருக்கிறார்கள் என்று சொல்கிறவர்களும் இருக்கிறார்கள்.




## நீ கிடைப்பாயா?

எனக்குத் தெரியும் என்றோ
ஒருநாள்
நாமிருவரும் பிரிய வேண்டி
நேரிடும் என்று; ஆனால்
இவ்வளவு விரைவில்
அந்த நாள் வரும்
என்று
நான்
நினைக்கவில்லை.

தன்னம்பிக்கையுடன்
தேடிக்
கொண்டிருக்கின்றேன்
ஒருநாள் நீ என்
கண்ணில்
படுவாயென்று
நண்பிகள்
கிண்டலடிப்பார்கள்
இத்தனை பெரிய
உலகத்திலே
எவ்வாறு தேடுவேன்
என்று.

ஆனால் எனக்குத்
தெரியும்.
நிச்சயமாக நீ
என்னைத்
தேடி வரமாட்டாய்
நான்தான் உன்னைத் தேடி
வர வேண்டும் என்று.

நீ இருக்கும்போது உன்
அருமை விளங்கவில்லை
நீ திடீரென்று
இல்லாதபோதுதான்
விளங்குகின்றது உன் அருமை.
நீ நினைக்கலாம்.
நீ இல்லாவிட்டால் எனக்கு
வேறு இல்லையா என்று;
ஆனால்
உனக்கு அப்படியிருக்கலாம்.
எனக்கு நீதான் வேண்டும்.

ஏனெனில்
உன்னால் எழுதித்தானே
நான் உயர்தரப் பரீட்சையில்
சிறந்த பெறுபேற்றைப்
பெற்றேன்
நான் தொலைத்த பேனாவே!

*-அ.யூடாமரீனி, யாழ்ப்பாணம்.*

## நினைவிருக்கு

நினைவிருக்கு....
நீலச் சட்டை
குடைவெட்டுப் பாவாடை

குடை மூடிப் போகும்
கன்னக் குழி விழும் முகம்
நெஞ்சைத் தடவும் - சுஜாதாவின்
புத்தகக் கட்டு.

இடுப்பு வரையில் நீண்டு
இருண்ட பின்னல் - நீ
தலை குனிந்து நடக்கும்
தார் போட்ட - பெரிய
கணேஸ் வீதி.

அறிந்தேன்...
இப்போது நீ
தலைகுனிவதும் இல்லை
நம் ரோட்டில்
தாரும் இல்லை என்று.....

கடைசியாக - உன்னை
அழகாய் பார்த்த
காளிகோயிலடி இத்திமரம்.

அறிந்தேன்....
இப்போது உனக்குள்ளும்
காதல் இல்லை.

உண்மைதான்!....
ஊரில் கூட
நான் இல்லை.


*-சம்பூர் எம்.வதனரூபன்.*

## விண்ணப்பம்

அடிக்கடி நாங்கள்
விற்பனைக்குள்ளாகும்
உயர்திணை
போன மாதம்
டொக்டர் ஐயா வீட்டில்
இந்த மாதம்
முதலாளியின் கடையில்
அடுத்த மாதம்
யாராவது கிடைப்பார்.
சந்தையிலே எங்கள் விலை
ஏகமாய் கூடிவிட்டது.
ஏட்டிலே நாங்கள்
வாங்காத புள்ளிகள்
வீட்டிலே வாங்கிவிட்டோம்.
மாஸ்டரிடம் வாங்காத அடிகள்
எஜமானிடம் வாங்கிவிட்டோம்
புத்தகம் சுமக்காத தோள்கள்
பொதிகளின் சுமைதனை
கணக்கிட்டுச் சுமக்கிறது.
எத்தனை சட்டங்கள் இருந்தாலும்
அங்கேயும் நாங்கள்தான்.
வேலைக்கு ஆள் தேடும்போது
முக்கியமாய் 15 வயதிற்குட்டவராய்
வேண்டும் என்றே
விளம்பரப்படுத்துகின்றனர்.
பணக்கார வர்க்கத்தினர்.

*-ந.ரிஷா, வெதமுல்லை.*

## உணர்வெல்லாம்



என் உணர்வுகளில்
ஊறி உறைந்துபோன
உன் நினைவுகளோடு
காலத்தை அலசிக்
கொண்டிருக்கிறேன்.

என்னவளே!
பசியெடுக்கும் நேரத்தில்
உன்னை மனம் சலிக்கிறது.
உன் நினைவு தரும் சுகத்தால்,
வேளைக்குத் துயின்றுவிடும் நான்
ராத்திரி ஜாமமாகியும்
தூக்கமின்றி விழிக்கின்றேன்.
என் விழிமடலில் நீ இருக்கும்
சுமைதாங்க முடியாமல்,

தத்தித்தாவி சோலைமடல் தடவி
சுத்திவரும் தென்றல் கூட
உனைச் சுற்றிச் சுழல்கிறது.
வியர்வைத் துளி ஒன்றேனும்
உனக்கு வந்துவிடக் கூடாதென்று


குறுகிய காலத்தில்
குதூகலத்தைத் தந்துவிட்ட நீ
இது வரைக்கும்
என் உணர்வுகளில் வசித்தாய்
இனியாவது வந்துவிடு
இருவருமாய்
சேர்ந்து வசிப்போம்....!

*-ஜமால்தீன் அஸ்ஹர், புல்மோட்டை.*

## உன்னைத் தவிர....

ஒவ்வொரு நாளும்
என் வாலிபம்
கரைந்தோடுகிறது
அவள் நினைவுகளை
என்னுள்
பத்திரப்படுத்தியபோது.
குற்றவாளியாய்
கூண்டில் நிறுத்தப்பட்ட
கைதி - போல.....
வார்த்தைகள் வர
தடுமாறுகிறது.
அவளிடம்
என் காதலைச் சொல்ல!
நிசப்த இரவில்
தினமும் என்னுள்
கனவு - வரும்
ஆனால்....
நீ - மட்டும்
வருவதில்லை.
புலம்பல்களை மட்டும்
நான்
புதைத்து வைத்து
பசுமை நினைவுகளாய்
என்னுள்
பத்திரப்படுத்துகிறேன்.
எந்த சோகமும்
என்னை....
இப்படி
வாட்டியதில்லை
கண்ணே!
உன்னைத் தவிர.

*-முஸம்மில, குவைத்.*



## சொல்லாத காதல்!

கவிதைக்குப்
பொய்யழகு என்றதாலா?
பெண்ணே!
என் காதலும் பொய்யாகிப்
போனது!

இன்று பழுக்கும்,
நாளை பழுக்கும்
என்று காத்திருந்த
என் காதல்
நீ
இன்னொருவனுக்கு
சொந்தமான பின்
இலவம் பஞ்சாய்....
வெடித்துப் போனது!

வாஸ்தவம்தான்.

உன்னில் நானும்
என்னில் நீயும்
ஒருவருக்கொருவர்
ஓராயிரம் எண்ணங்களை
வளர்த்துக்
கொண்டபின்தானடி....
இருவருக்குள்ளேயும்
ஓர் இரசாயன மாற்றம்

இதுதான்
காதலென்று எண்ணி
இறுமாந்திருந்தது
எத்தனை பெரிய
ஏமாற்றம் எனக்கு.
பெண்ணே!
சொல்ல
எண்ணியதை
அன்றே
சொல்லியிருந்தால்,
இன்று
இல்லற பந்தத்தில்!
எவ்வளவு
சந்தோஷமாய்....!

காத்திருத்தல் என்பது
காதலுக்கு
அவசியமில்லை
என்பது
எவ்வளவு பெரிய உண்மை!

உன்னை இழந்த பின்தானடி!
இதுவும் புரிந்தது
எனக்கு!

உன்னவனோடு நீ
கைகோர்த்துச் சென்றபோது
உடைந்து போனது
என் மனது மட்டுமல்ல
உன்னிடம் சொல்லாத என்
காதலும்தான்!

*-மனோ கோபாலன், ஹப்புத்தளை.*

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் — கவிஞரும்

எழுபதுகளின் பிற்பகுதியில் எழுதத் தொடங்கியவர் கவிஞர் உமாபதி. ஓரிரு சிறுகதைகள் எழுதியிருப்பினும் பிரதானமாய்க் கவிஞராகவே தன்னை வெளிப்படுத்தியிருப்பவர். பேச்சில் புழங்கும் சாதாரண சொற்களைக் கொண்டிருப்பதாலேயே ஒரு கவிதை எளிமையானதாகிவிடுவதில்லை என்பதை இவர் கவிதைகளும் நிரூபிக்கின்றன. உபதேசங்களை வெளிப்படுத்தும் நோக்கமோ, வாழ்க்கையின் சிக்கல்களுக்குத் தெளிவான விடைகளை விநியோகிக்கும் எண்ணமோ இவர் கவிதைகளுக்கு இல்லை. வாழ்க்கையின் ரகசியப் பொந்துகளுக்குச் சிறு வெளிச்சம் பாய்ச்சி, அவற்றை நமக்குக் காட்டிவிட்டு ஒதுங்கிவிடுபவை இவர் கவிதைகள்.

சொற்களின் சேர்மானத்தில் உருவாகும் நூதனமும், புத்துணர்ச்சியும், அழகும் இவர் காட்ட விரும்பும் பிரதேசங்களுக்கு நம்மை ஆர்வமுடன் சென்று பார்க்க வைக்கின்றன.

உமாபதியின் "வெளியில் இருந்து வந்தவன்" தொகுப்பிலிருந்து சில கவிதைகள்.



### படித்தல் பற்றி

சத்துள்ள உணவாகச் சாப்பிடு
கொஞ்சமும் கழித்து எறியாதே
தேச நலனுக்காக அல்ல
சுற்றுப்புற சுகாதாரம் பாதிக்கும்.

உறுதியுடன் செயற்படு
எண்ணற்ற இந்திரன்களுக்குச் சமம்
நாம்
சுலபமாகக் கண்ணீரை வழியவிடலாம்
வியர்வையும் கண்ணீரும்
வேறுபட்டவையல்ல

அறுத்து எறி சலங்கைகளை
எல்லாச் செவிப்பறைகளிலும்
நர்த்தனமாடு
அவசியமெனில் பேசு
கூடியவரை மௌனமாக
பற்கள்
ஆரோக்கியமாய் இருக்குமெனில்
அசிங்கமாய் இருந்தால் கூட
சிரி.
குரூபியும் சிரிப்பில் அழகாவான்

பயப்படாதே!
காற்றுக்கு அஞ்சி
'ஷெல்' லில் போய்ப்
பதுங்காதே
முடமாகிப் போவாய்.

நான்கு சுவர்களுக்கும்
ஒரு கூரைக்கும் உள்ளே
இரு.
வெளி பற்றி சிந்தி.
இப்போது
எட்டி உதை
புத்தகங்களை.

### இது இங்கே இப்படித்தான் விதிக்கப்பட்டிருக்கிறது எனவே!

குலோத்துங்கன் குடையில்
ஒண்டிக் கொண்டு
காவியம் படைத்த
கம்பன் படைத்த
நாளாச்சு.

அடிக்குப் பயந்து
ஓடி ஒளிந்த
மீசைக் காரனுக்கும்
இதே கதி.

பண்டிதர்கள் நடாத்தும்
பட்டிமன்றமும்
தேசத்தின் விளம்பில்
சில குருட்டுச் சிலைகளும்
காரைக்குடியும்
எட்டயபுரமும்
ஞாபகத்தின் எச்சம்.

மூளையைப் பிடுங்கி
இதயத்தில் மாட்டி
அதையும் அறுத்து
விரல்களில் கோர்த்து
பத்தையும் வெட்டி
இருபதாய்ப் பெருக்கி
காக்கைக்குப் போட
கிடந்து துடிக்குது
ஒவ்வொரு அணுவும்.

### வாழ்வு

வாழ்க்கை மிக எளிதுதான்
எப்போது?
கிட்டிப்புள் விளையாடும் போதும்
வேம்பின் நீர் நோக்கித் தாழ்ந்த
கிளையில் ஊசலாடிய போதும்
மண்டை ஒரு கரும்பலகையாக
ஆசிரியரின் சொற்களை வெண்மை
ஒளிவிடும் எழுத்துக்களாக
பதித்தபோதும்
புத்தகங்கள் அத்தனையும்
தாள்தாளாக
உண்டு பின்னர் நரகலாகக் கழித்த
போதும்
இசையின் பெரு வெள்ளத்தை நாடி
நரம்புகளில் ஓடவிட்டு
செத்துக்கொண்டிருக்கும்
மருத்துவனுக்கு ரத்ததானம்
செய்தபோதும்
கொட்டடியில் லக்ஷ்மி என்ற பசு
வெண்ணெய் வெளுப்பில் மண் படர
மல்லாந்து சரிந்த போதும்
அம்மா தன் ஆவியைக் கட்டில்
கயிற்றினூடே
சிந்தி உறைந்த போதும்
ஜீவனே உருகி குறி வழியே
வழிந்த போதும். முகமெங்கும்
வழிகளாய் குஞ்சுப் பெண்
சிரித்தபோதும்

கணங்கள் ஒவ்வொன்றும்
நடுகல்லாய் சமைந்து நிற்க
எப்போதும் தோன்றாத இந்த
உண்மை
உட்கார்ந்து வான்நோக்கித் தலை
உயர்த்தத்
தெரியும்.

தூரத்தில் உலாவும் நட்சத்திரத்தின்
துன்பம் தெரியுமா? என்கிற
கேள்வியாக
எனில்,
மார்பைப் பிளந்து
குருதியனைத்தையும்
நேர்கோட்டில் நகர்ந்து பூமிக்கடியில்
வாழ்வு சமைக்கும் எறும்பும் புற்றில்
வார்த்துப் போ.
நட்சத்திரங்கள் கையில் வரும்.

### மரணம்

நேற்று காலை அது நிகழ்ந்தது
ஒரு மரணம்.
எனக்கு அம்மா. அவனுக்கு
அத்தை. அத்தையின்
தம்பிக்கு அக்கா
இன்னொருவனுக்குச்
சித்தி. மேலும் ஒரு வாண்டுக்குப்
பாட்டி. பாட்டிக்குப் பேத்தி
யாரோவுக்கு யாரோ
இந்த மரண அலை
ஓய்ந்த பின்னர்.

தெரு வளைவில்லாமல்
நேரே சென்றது.
மரங்கள் நிழலைத் தந்தன.
ஊர்க்குருவி ஒழுங்காய்
கத்திற்று.

எனக்கு எல்லோருக்கும்
முடி பின்னமில்லாமல் வளர்ந்து
கொஞ்சம் நரையூடே


எதுவரை?
இன்னொரு மரணம் வரை
இந்த முறை
எனக்கு மாமா
அவனுக்கு
அவளுக்கு

ஒரு குலுங்கல் அதிர்ந்து
ஓய்ந்த பின்னர்
எல்லாம் அதனதன் நெறியில்
தப்பிதமில்லாமல்.


## பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி



பெயர் : இ. தர்ஷினி
வயது : 17
முகவரி : 2ஆம் வட்டாரம், நெடுந்தீவு,ள மேற்கு நெடுந்தீவு.
பொழுதுபோக்கு: பத்திரிகை, ரி.வி.



பெயர் : கி. பார்த்தீபன்.
வயது : 20
முகவரி : சபாபதிப்பிள்ளை வீதி, கோளாவில்–02, அக்கரைப்பற்று.
பொழுதுபோக்கு : வானொலி, பத்திரிகை, கிரிக்கெட்



பெயர் : எஸ். சஞ்சை
வயது : 24
முகவரி : வட்டு – தெற்கு, வட்டுக்கோட்டை.
பொழுதுபோக்கு : கவிதை எழுதுதல், புதியதை தேடுதல்.



பெயர் : K. Ramanathas
வயது : 22
முகவரி : VIA-Candelai, No-96, Palermo - 90134, Italy.
பொழுதுபோக்கு : வழமையானவை

# சுவீற் லிப்ஸ் வேண்டுமா?

பார்ப்பவர்களைச் சட்டென்று கவரும் உதடுகளுக்குத் தேவை லிப்ஸ்டிக். உங்கள் மனநிலை, உடை, விருப்பம் ஆகியவற்றிற்கு ஏற்ப நிறத்தைப் பயன்படுத்தச் சிறந்த இடம் உதடுகள்தான்! இளஞ்சிவப்பு முதல் பிரவுண் வரை, வைலெட் முதல் கறுப்பு வரை எதை வேண்டுமானாலும் பயன்படுத்தலாம்!

லிப்ஸ்டிக் வெவ்வேறு வகைகளில் கிடைக்கும். அவை.....

**கிளாஸ்** : இது பளபளப்பானது, அதே நேரத்தில் மிகக் குறைந்த



அளவில் நிறத்தைத் தரக் கூடியது. இலேசான நிறம் பெறச் சிறந்தது. ஆனால் அதிக நேரம் நீடிக்காது.

**குறிப்பு** : லிப் பென்ஸிலால் உதடுகளில் நிறத்தை பூசிவிட்டு லிப் கிளாஸ் தடவினால், நீண்ட நேரம் நீடிக்கும்.

**மெட்டாலிக் (ஷிம்மர்)** : இதைப் பார்த்தால் அதிக நிறம் கொண்டது என்று தோன்றலாம். ஆனால் இதைத் தடவினால் இலேசான நிறத்தைத் தரும். வெளிச்சத்தில் மின்னும் தன்மை கொண்டது.


**குறிப்பு** : அதிக அளவில் நிறத்தை விரும்பினால், மேட் லிப்ஸ்டிக்கை உதடுகளில் பூசிய பின்னர் இதைத் தடவலாம்.

**க்ரீம்** : இதில் அதிகளவில் கண்டிஷனரும், மாய்ஸ்சுரைஸரும் உள்ளன. உதடுகளுக்கு மென்மையான தோற்றத்தைத் தரக்கூடியது. அதே நேரத்தில் அதிகளவில் நிறமும் பெறலாம்.

**குறிப்பு** : உதடுகளின் வெளிப்புறத்தை லிப் பென்ஸிலால் வரைந்துவிட்டு க்ரீம் லிப்ஸ்டிக்கைத் தடவினால் உதட்டைவிட்டு வெளியே வராது.

**மேட்** : ஆழமான மற்றும் அதிகளவில் நிறத்தைப் பெறச் சிறந்தது மேட் லிப்ஸ்டிக். இதில் பளபளப்பு இருக்காது, அதே நேரத்தில் உதடுகளை உலர வைக்கும் தன்மை கொண்டது.

**குறிப்பு** : உதடுகள் உலராமல் இருக்க முதலில் மாய்ஸ் சுரைஸரைப் பூசி அதன் பிறகு மேட் லிப்ஸ்டிக் தடவ வேண்டும்.



**லாங் லாஸ்ட்டிங்** : அதன் பெயரைப் போலவே இது 5 முதல் 8 மணி நேரம் நீடிக்கும். ஆழமான நிறத்தைத் தரும், எளிதில் அழியாது. ஆனால் உதடுகளை உலர வைக்கும்.

**குறிப்பு** : உதடுகள் உலர்ந்து விட்டதைப் போல் தோன்றினால் கண்டிஷனர் தடவலாம்.

**லிக்விட்** : திரவ வடிவில் இருக்கும் இந்த லிப்ஸ்டிக்குடன் அதைத் தடவ சிறிய பிரஷ் இருக்கும். நீண்ட நேரத்திற்கு அழியாமல் இருக்கும். பளபளப்பு தேவையென்றால் இதன் மேல் லிப் கிளாஸ் தடவலாம்.

**குறிப்பு** : இது விரைவில் உலர்ந்து விடுவதால் இதைப் பயன்படுத்தும்போது கவனம் தேவை.

**லிப் பென்ஸில்** : இது உதடுகளை மேலும் அழகாக்குகிறது.

லிப்ஸ்டிக்கின் நிறத்தை அதிகமாக்க, லிப்ஸ்டிக் தடவுவதற்கு முன் லிப் பென்ஸில் தடவலாம்.

லிப் பென்ஸில் தடவுவதால் லிப்ஸ்டிக் உதடுகளைவிட்டு வெளியே பரவாமல் இருக்கும்.

உதடுகளைப் பெரிதாக்க உதடுக்கு சற்றே வெளியே லிப் பென்ஸிலால் வரைந்து, அதன் பிறகு, லிப்ஸ்டிக் தடவலாம்.

உதடுகளைச் சிறியதாக்க, உதடுகளில் ஃபவுண்டேஷன் தடவி, உதட்டுக்கு உட்புறம் லிப் பென்ஸிலால் உதட்டின் வடிவத்தை வரைய வேண்டும். அதற்குள் லிப்ஸ்டிக் தடவலாம்.

லிப்ஸ்டிக் பற்றி சில முக்கிய குறிப்புகள் :

உங்கள் சருமத்தின் நிறத்திற்கு ஏற்ற நிறத்தில் உள்ள லிப்ஸ்டிக்கைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கறுப்பாக இருப்பவர்கள் வெளிர் நிறங்கள் தேர்ந்தெடுப்பதைத் தவிர்க்க வேண்டும்.

நீங்கள் விரும்பியதை விட வெளிர் நிறத்தில் உங்கள் லிப்ஸ்டிக் அமைந்துவிட்டால், சற்றுக் கருமையான நிறத்தில் உள்ள லிப் பென்ஸிலால் உதடுகளில் நிறத்தைப் பூசி விட்டு அதன் பிறகு லிப்ஸ்டிக் தடவலாம். உதாரணத்திற்கு சிகப்பு நிற லிப்ஸ்டிக்குடன் பிரவுண் நிற லிப் பென்ஸில் பயன்படுத்தலாம்.

தடவ முடியாத அளவுக்கு லிப்ஸ்டிக் குறைந்துவிட்டால் அதை தூக்கி எறியாமல் மீதமுள்ள லிப்ஸ்டிக்கை எடுத்து ஒரு சிறிய டப்பாவில் வைத்துப் பயன்படுத்தலாம். ஒன்றுக்கு அதிகமான லிப்ஸ்டிக்கை இப்படி சேர்த்து வைத்தால் அவற்றை கலந்து புதிய நிறத்தை உருவாக்கலாம்.

நீங்கள் எப்போது லிப்ஸ்டிக் பயன்படுத்தினாலும் உதட்டை விட்டு அது வெளியே வருகிறது என்றால் கிளாஸ் மற்றும் க்ரீம் லிப்ஸ்டிக்குகளைப் பயன்படுத்த வேண்டாம்.

லிப்ஸ்டிக் மற்றும் பர்ஃப்யூமை ஃப்ரிட்ஜில் வைத்தால் நீண்ட நாட்களுக்குக் கெடாமல் இருக்கும்.

கடைகளில் உள்ள பெஸ்ட்டர் லிப்ஸ்டிக்குகளை உதட்டில் பயன்படுத்தாதீர்கள். அது சுகாதாரமானதல்ல. விரல் நுனிகளில் தடவி சரி பாருங்கள். இது உதட்டில் பயன்படுத்துவதற்கு ஈடானது. தேவைப்பட்டால் கன்னங்களுக்கு ப்ளஷாக லிப்ஸ்டிக்கைப் பயன்படுத்தலாம்.



# லேடிஸ் ஸ்பெஷல்

## பெண்ணை பெண்ணாக வாழவிடுங்கள்!

பொதுவாக பெண்கள் என்றாலே பயம், ஒன்றல்ல, இரண்டல்ல, எல்லாமே பயம்தான்.

ஒரு பெண்ணை பிறப்பு முதல் இறப்பு வரை ஒவ்வொருவரும் பிரச்சினை என்றுதான் நினைக்கிறார்கள். இதற்குக் காரணம் இப்படி நினைப்பவர்களுடைய அறியாமை தான்.

பெண்பிள்ளைகளை வளர்க்கும்போதே 'நீ ஒரு பெண், உனக்கு இது தேவையில்லை. இது வேண்டாம். இதை செய்யாதே, ஒரு ஆண்தான் இதை செய்யலாம்' என்று சொன்னால், அது அப்படியே வளர்ந்து விடுகிறது. அதனால் நாளை ஒரு பிரச்சினை என்று வந்தால் அவளால் தனியாக நின்று எதிர்கொள்ள முடியாது. ஒரு வேலை கற்றுத் தருவதை விட்டுவிட்டு, அதை நீங்களே ஒவ்வொரு முறையும் ஏன் செய்து தருகிறீர்கள்?

"கடைசி வரையில் எப்பொழுதுமே என் மகள் வீட்டைவிட்டு வெளியே போகமாட்டாள், யாரிடமும் அதிகமாகப் பேசமாட்டாள், அவளை நான் அப்படித்தான் வளர்த்திருக்கிறேன் என்று பெருமையுடன் சிலர் கூறுவர். ஏன் இவர்கள் பெண்ணை வளர்த்து கொலு பொம்மை போல் உட்கார வைக்கப்போகிறார்களா? அவர்களுக்கென்று ஒரு வாழ்க்கை இல்லையா? அவர்கள் வாழமாட்டார்களா?

தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

என்று திருக்குறளில் திருவள்ளுவர் புகழ்பட வாழ வேண்டும் என்ற அறிவுரையைக் கூறியிருப்பது ஆண்களுக்கு மட்டுமல்ல, அது பெண்ணுக்கும்தான். சில பெற்றோர்கள் பெண் பிள்ளைகளைப் படிக்கவைக்கிறார்கள். பிள்ளைகளைப் படிக்கவைப்பது மட்டுமல்ல, அவர்களுக்கு முழுச் சுதந்திரமும் கொடுக்க வேண்டும். அதே நேரத்தில் கவனிப்பும் இருக்க வேண்டும்.

அந்தக் காலத்தில் பெரியோர்கள் "பெண்களுக்கு அடக்கம்தான் அழகு. அமைதிதான் அழகு" என்று கூறினார்கள். அப்போதிருந்த சூழ்நிலை வேறு. இப்போது அப்படியில்லை. பெண்கள் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் அடைந்துள்ளார்கள். சமூகத்தைப் புரிந்துகொண்டுள்ளார்கள். இந்தக் காலத்திலும் அடங்கிப் போக வேண்டும் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.

முற்காலத்தில் பெண்களுக்கு மிகவும் சிறு வயதிலேயே திருமணம் நடத்தினர். ஆனால் அந்த வயதில் அவர்களுக்கு என்ன தெரியும்? அன்று திருவிழாப் போல் புத்தாடை தருவார்கள், நிறைய நகைகள் தருவார்கள். விருந்து வைப்பார்கள், உறவினர்கள் வருவார்கள். நன்றாக இருக்கும். இதைத்தான் அந்தப் பிஞ்சுகளும் பார்த்து இரசித்து பின்பு நடக்கப்போவது பற்றி எதுவும் தெரியாமல் தன் மேல் ஒரு பெரிய பாரம் வைக்கப்போவது பற்றி தெரியாது இருந்தனர். இப்போது சிலரிடம் சிறுவயதில் திருமணம் செய்து கொடுக்கும் பழக்கம் இருக்கிறது. இதை ஒட்டுமொத்தப் பெண்களும் எதிர்க்க வேண்டும்.



சில வீடுகளில் மட்டும் சுதந்திரம், ஆரோக்கியமான வளர்ப்பு முறை உள்ளது. மற்ற வீடுகளில் அவ்வளவாக வளரவில்லை, சாதாரணமாக பெரியோரிடம் நன்றாகப் பேசி அவர்களின் சிந்தனையும், அறிவாற்றலையும் இவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். அப்பொழுதுதான் நாம் நினைக்கும் அளவிற்குப் பெண்களிடம் முன்னேற்றம் காணமுடியும்.

சமுதாயத்தில் பெண்ணால் பலவற்றைச் சாதிக்க முடியும். ஆகவே பெண்களின் உரிமையை அவர்களிடமே விட்டுவிடுங்கள். அவர்கள் வாழப் பிறந்தவர்கள் பொம்மைகளாக்கப்படுவதற்கு அல்ல!

# நீரிழிவு நோய் ஏன் வருகிறது?

இந்த நோய் யாருக்கும் வரலாம். பிறந்த ஆறு மாதத்திலும் வரலாம்; ஐம்பது வயதிலும் வரலாம்.

இருபது வயதுக்குள் வந்தால் அதற்கு பெயர் ஜுவனைல் டயபெடிஸ். இதை டைப் 1 என்கின்றனர்.

உடலில் சுரக்கும் ஹார்மோன்களில் மிகவும் முக்கியமானது இன்சுலின். கணையத்தில் இருக்கும் பீட்டா செல்களில் இந்த இன்சுலின் சுரக்கிறது. குழந்தையாக இருக்கும்போதே இளம் வயதிலேயே பீட்டா செல்கள் மொத்தமாகச் சிதைந்து, இன்சுலின் சுரக்க முடியாமல் போவதுதான் ஜுவனைல் டயபெடிஸுக்குக் காரணம்.

பீட்டா செல்கள் ஏன் சிதைந்து போகின்றன? அதற்குத் தனிப்பட்ட காரணங்கள் எதுவும் இதுவரை கண்டறியப்படவில்லை.

ஜுவனைல் டயபெடிஸ் பரம்பரையாக வரக்கூடிய நோய் அல்ல.

பெரியவர்களுக்கு வரும் டயபெடிஸ் வேறு வகை. இது இன்சுலின் சுரப்பு குறைவதால் ஏற்படுகிறது. இதை டைப் 2 என்கிறார்கள்.

இரத்தத்தில் இருக்கும் சர்க்கரையை என்ர்ஜியாக மாற்றுவதுதான் இன்சுலினுடைய வேலை.

9இல் இருந்து 13 வயதுக்கு உட்பட்ட காலகட்டத்தில் உடல் வளர்ச்சி காரணமாக ஹார்மோன்கள் சுரப்பதில் மாற்றங்கள் ஏற்படும். எனவே அந்த வயதில் சர்க்கரை நோய் பற்றிக் கவனம் தேவை.

சர்க்கரை அளவு அதிகமானால் குழந்தைகளுக்குப் பசி அதிகமாகத் தெரியும். நிறையச் சாப்பிடுவார்கள். ஆனால் உடல் எடை மட்டும் குறைந்துகொண்டே இருக்கும்.

அடிக்கடி தாகம் எடுக்கும். அடிக்கடி சிறுநீர் கழிப்பார்கள். எப்போதும் சோர்வாக இருக்கும்.

வேலை செய்யாமல் சும்மா இருக்கும்போது கூட மூச்சு வாங்கும். வயிற்று வலி, வயிற்றுப் போக்கு இருந்தாலும் அவை சர்க்கரை நோயின் அறிகுறியாக இருக்கக்




கூடும். பரிசோதனை செய்துவிடுங்கள்.

எந்த அறிகுறிகளும் தெரியாமலே கூட சில குழந்தைகள் திடீரென்று நேராக கோமாவுக்கு போகும் ஆபத்தும் இருக்கிறது.

இரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகமாக இருக்கும் நீரிழிவு நோயாளி கோமா நிலைக்குப் போகவும் மணிக் கணக்கில் ஆகும்; மீண்டு வருவதற்கும் அதே நேரம் பிடிக்கும்.

இன்சுலின் பற்றாக்குறையால் சர்க்கரை அளவு கூடினால் அதை எரிக்க வழி தெரியாமல் செல்கள் திண்டாடும். வேறு வழியில்லாமல், கொழுப்பை எரிக்கத் துவங்கும். அதிலிருந்து வெளிப்படும் அசிட்டோன் உயர் இரத்த அமிலத்தை உருவாக்கும். இன்சுலின் ஊசியால் உடனே சரிசெய்யவில்லை என்றால் கோமா அல்லது மரணம் வரை செல்லக் கூடும்.

இன்சுலின் ஊசியால் சில சமயம் சர்க்கரை அளவு மிகவும் குறைந்துவிடவும் வாய்ப்பு இருக்கிறது. உடலில் உள்ள திசுக்களுக்கு மட்டுமல்லாமல், மூளையின் இயக்கத்துக்கும் சர்க்கரை அவசியமானது. சர்க்கரை அளவு வெகுவாகக் குறைந்தால் மூளையின் செயற்பாட்டில் தடங்கல் ஏற்படும். அதனால் நினைவு தவறக் கூடும்.

அதிக சர்க்கரைக் காரருக்கு மெதுவாக நடக்கும் எல்லாமே, சர்க்கரைக் குறைவுள்ள இவர்களுக்குப் படு வேகமாக நிகழும். உடனே அவரது வாயில் கொஞ்சம் சர்க்கரை, ஜாம், கேக், சாக்லெட், பழச்சாறு என்று இனிப்பான எதையாவது கொடுப்பது உடனடி பலன் தரும்.

உடல் வியர்ப்பது, நடுங்குவது, எல்லாமே தாறுமாறாகத் தெரிவது, உணர்வது போன்றவை சர்க்கரை அளவு குறைந்திருப்பதை வெளிப்படுத்தும் அறிகுறிகள்.

நீரிழிவு நோயாளிகள் சாப்பாட்டில் உஷாராக இருக்க வேண்டும். குழந்தைகளுக்கு ஒரு நாளைக்கு மாவுச்சத்து 60 சதவீதம், புரதச்சத்து 30 சதவீதம், கொழுப்பு 10 இருக்கிற மாதிரி உணவு அவசியம்.

காய்கறி, கீரையில் அதிக விட்டமின் இருக்கிறது. வெள்ளரி, தக்காளி, கேரட் சாலட் நல்லது. ஸ்வீட்டுக்கு தடைதான். ஸ்டிரிப், இன்சுலின் ஊசியை கையோடு வைத்திருப்பது நல்லது.

## தூதுவளை

சாலையோரங்களிலும் புறம்போக்கு நிலங்களிலும் தானே வளரும் ஒரு வறண்ட தாவரமே தூதுவளை. இது மனிதகுலத்துக்குத் தரும் மருந்துப் பொருட்களைப் பற்றி



அறிந்தால், இதன் மகத்துவம் தெரிந்தால் மண்டியிட்டு வணங்கத் தோன்றும். ஆம். நீல நிறப் பூக்கள் பூக்கும் இந்தத் தூதுவளை மிகச் சிறந்த மருத்துவப் பண்புகள் நிறைந்த மூலிகையாகும்.

தூதுவளையின் இலைகள், பூக்கள், பழம் மற்றும் வேர் என இதன் அனைத்துப் பகுதிகளும் மருந்தாகப் பயன்படுகின்றன.

தூதுவளையின் பூக்கள் மற்றும் பழங்கள் இருமலைக் குணமாக்கும் ஆற்றல் பெற்றவை. இலை மற்றும் வேர் ஆகியவற்றின் சாறு சில குடல் சம்பந்தமான நோய்கள் மற்றும் எலும்புருக்கி நோய்க்கும் மருந்தாகப் பயன்படுகிறது. ஆஸ்துமா, மூச்சுக்குழல் அழற்சி, இருமல், காய்ச்சல் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் இதற்கு உண்டு என்பதை மருத்துவ உலகம் ஆராய்ச்சி செய்து, ஏற்றுக்கொண்டுள்ளது.

தூதுவளையைப் பயன்படுத்துவோம். துன்பம் தரும் பல நோய்களை வெல்வோம்.

## சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது -ஷோபா-*

### அன்னாசிப்பழ புட்டிங்

**தேவையான பொருட்கள் :-**

| | |
|---|---|
| சீனி | - 1/2 கிலோகிறாம் |
| அன்னாசிப் பழம் | - பெரியது 1 |
| பாசிப்பயறு | - 1/2 கிலோகிராம் |
| சேமியா | - 1/4 கிலோ |
| கோதுமை ரவை | - 1/2 கிலோ |
| ஏலப்பொடி | - 1 தேக்கரண்டி |
| முந்திரி | - 100 கிறாம் |
| அன்னாசி எசென்ஸ் | - 10 சொட்டு |
| நெய் | - 100 கிறாம் |
| கேசரிப் பவுடர் | - சிறிதளவு |

**செய்முறை :**

சீனியைப் பாகு காய்ச்சவும். அன்னாசிப் பழத்தைத் தோல் நீக்கி, சிறு சிறு துண்டாக வெட்டி, சீனிப் பாகில் ஊறவைக்கவும். பாசிப் பருப்பை வேகவைத்துக்கொள்ளவும். முந்திரி, திராட்சை, கோதுமை ரவை, சேமியாவை நெய்யில் சிவக்க வறுத்து ஏலப் பொடியுடன் சேர்த்து, ஊறவைத்துள்ள அன்னாசிப் பழத் துண்டுகளுடன் கலந்துகொள்ளவும். கூடவே கேசரிப் பவுடரையும், எசென்ஸையும் சேர்த்து நன்றாகக் கிளறவும். பிறகு கலவையை கண்ணாடி அல்லது சில்வர் கிண்ணத்தில் ஊற்றிப் பரிமாறலாம்.

விரும்பினால் குளிர்சாதனப் பெட்டியில் வைத்து விட்டு சிறிது நேரம் கழித்துச் சாப்பிடலாம். இது

மணி ஆறேகால் ஆகிக் கொண்டிருந்தது.

பெட்டியைப் படுக்கை மீது வைத்துக்கொண்டு துணிகளை அடுக்கிக்கொண்டிருந்த பிராட், பேஜ் வருவதைக் கண்டதும் எழுந்து மெதுவே முறுவல் செய்தான். அவளுக்காக ஸ்பெஷலாய் வெளிப்படுத்தும் புன்சிரிப்பு.

"ஆண்ட்ரூ இன்றைக்கு விளையாட்டில் பிய்த்துக் கட்டிவிட்டானாமே?" என்றான் அவன். மகனின் பேஸ் பால் விளையாட்டைப் பார்க்க ஒருநாள் கூட அவன் போவது கிடையாது. ஆண்ட்ரூவை அழைத்துப் போவதும் அழைத்து வருவதும் பேஜ்தான்.

பிராடுக்கு நேரமே கிடையாது. அவன், அவள் நாற்காலியின் கைப்பிடியில் அமர்ந்து.

"பரவாயில்லை," என்றாள் பேஜ். "காலையிலிருந்து நான் உங்களையே நினைத்துக்கொண்டு... உங்களுடன் இருக்கலாமென்று. சரி, அதனாலென்ன?" என்று புன்னகையை வரவழைத்துக்கொண்டு கூறினாள். இப்படிப் பெருந்தன்மையாக விட்டுக் கொடுப்பது அவளுக்குப் பழக்கமாகி விட்டது. இருந்தாலும் ஒவ்வொரு முறையும் அவன் பிரிவு வேதனைதான்.

பிராட் ஒரு விளம்பர ஏஜென்சியில் வேலைக்கு இருந்தான். அங்கே அவனைச் சக்கையாய்ப் பிழிந்தெடுத்தார்கள். காரணம்,

**சென்ற வாரம்...**
சான் பிரான்சிஸ்கோவைச் சேர்ந்தவள் பேஜ். இவளின் கணவன் பிராட். இவர்களுக்கு ஆண்ட்ரூ என்ற ஏழு வயது மகனும், ஆலிஸன் என்ற பதினைந்து வயதான மகளும் உள்ளனர். இரு பிள்ளைகள் இருந்தாலும் பேஜ் கணவன் மீது அளவுக்கதிகமான காதல் கொண்டிருந்தாள். ஆனால் பிராட் அடிக்கடி வெளிநாடு சென்று வருவான்.

# ஒரு தாய் மகள்

03

சதா பிஸி.

"உங்கள் பிள்ளைதான் இன்றைக்கு அங்கே ஹீரோ" என்றவள் கணவனை நெருங்கி முத்தமிட்டாள். அவனுடைய உயரத்துக்குச் சரியாக, நுனிக்காலில் எம்பி நிற்க வேண்டியிருந்தது.

அவன் வெளியூருக்குப் புறப்படுகிறான் என்ற எண்ணம் மனசை உறுத்தினாலும் ஒருவேளை நாளைக்குப் புறப்படுவதற்காக இன்றைக்கே பெட்டியை எடுத்து வைத்துக் கொள்கிறானோ என்னவோ என்று ஒரு நப்பாசை.

"தோட்டத்துக்குப் போய், திறந்த வெளியில் அடுப்பு மூட்டி, சாப்பிட ஏதாவது செய்யலாமா?" என்று கேட்டாள் அவனிடம். "இன்று 'வெதர்' ரொம்ப அருமையாக இருக்கிறது. நான், நீங்கள், ஆண்ட்ரூ மூன்றே பேர்தான். ஆலிஸன் அவள் சினேகிதி வீட்டுக்குப் போகிறாள்."

அவன்தான் அவர்களுடைய கவர்ச்சி நட்சத்திரம். விளம்பர தாரர்களை வசியம் செய்து வளைத்துப் பிடிப்பதிலும், பிடித்தவர்களைத் தக்க வைத்துக்கொள்வதிலும் அவனுக்கு நிகர் அவன்தானாம். ஆட்டுக் குட்டியை இழுத்து வருகிற மாதிரி வாடிக்கையாளர்களை அவன் இழுத்து வருகிறான் என்று கதை கதையாகச் சொல்வார்கள்.

"க்ளீவ்லண்டில் பொழுது போக்க எதுவுமே கிடையாது! பாவம், உங்களுக்குப் போரடிக்கும். அதுவும் ஞாயிற்றுக்கிழமையில்!" என்றாள் பேஜ் அனுதாபத்துடன்.

"ஏதோ ஒருவழியாய்ப் பொழுது போய்விடும்" என்றான் பிராட். "நான் சந்திக்கப் போகிற கம்பனியின் அதிபருடன் கால்.'.ப் விளையாடப் போகிறேன். மத்தியானம் அவருடன் போனில் பேசினேன். நாளைக் காலை கால்.'.ப் கிளப்புக்கு வரச் சொல்லியிருக்கிறார்." என்று சொன்னவாறு அவள் உதட்டில் அழுத்தமாக முத்தமிட்டான். அவள் உடம்பெங்கும் பரவசம் சிலிர்த்தோடியது.



பிராட் அவனை மறுபடி முத்தமிட்டு, "ஸாரி டார்லிங். நான் க்ளீவ்லண்டுக்குப் புறப்படணும். நாளை ராத்திரி ஃப்ளைட்டுக்கு டிக்கெட் கிடைக்கவில்லை அதனால் இன்றைக்கே கிளம்புகிறேன். ஒன்பது மணிக்கு ஃப்ளைட். ஏழு மணிக் கெல்லாம் புறப்பட வேண்டும்" என்றான்.

இது எதிர்பார்த்ததுதான் எனினும் பேஜ் மனம் நொந்தாள். இன்றிரவும் நாளையும் அவனுடன் இருக்க அவள் ஆசைப்பட்டிருந்தாள். தோட்டத்தில் பால் நிலா பளபளத்தது. இருவருமாக அங்கே உட்கார்ந்துகொண்டு ராத்திரி பூரா பேசிக்கொண்டிருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டது நடக்கவில்லை.

சலிப்புடன் நாற்காலியில் உட்கார்ந்தாள்.

"பேபி, ரொம்ப ஸாரி" என்றான்

**எழுதியது: டேனியல் ஸ்டீல்**
**தமிழில்: ரா.கி. ரங்கராஜன்**

"உன்னோடும் குழந்தைகளோடும் இருக்கணும் என்றுதான் எனக்கு ஆசை" என்று அவன் சொல்ல, "எப்பவும் உங்களுக்குக் குழந்தைகள்தான்! நான் முக்கியமில்லை!" என்று பேஜ் சிணுங்க, அவன் சிரித்தான்.

"இரண்டே நாள் பொறுத்துக் கொள். செவ்வாய்க்கிழமை வந்துவிடுவேன்..." என்று அவன் சொல்லிக் கொண்டிருந்தபோது ஆண்ட்ரூ கதவை மடாலென்று திறந்துகொண்டு உள்ளே ஓடி வந்தான்.

"அம்மா அம்மா! இந்த அல்லி பாட்டுக்கு உருளைக்கிழங்கு சிப்ஸைச் சாப்பிட்டுவிட்டு டப்பாவை அப்படியே திறந்து போட்டுவிட்டுப் போய்விட்டாள்! லிஸ்ஸி எல்லாத்தையும் தின்னுட்டிருக்குது! போச்சு! போச்சு! சமையலறை பூரா வாந்தி எடுக்கப் போகுது! வாம்மா சீக்கிரம்!" என்றான்.

லிஸ்ஸிக்கு அப்படியொரு கெட்ட பழக்கம். எதை வேண்டுமானாலும் தின்னும். ஆனால் ஜீரண சக்தி கிடையாது.

"இதோ வருகிறேன்." என்று பேஜ் புறப்பட்டபோது, இரகசியமாய், செல்லமாய் அவளுடைய பின்புறத்தில் ஒரு தட்டுத் தட்டி அனுப்பி வைத்தான் பிராட்.

ஆண்ட்ரூ சொன்னது போலவே சமையலறையில் ஒரே களேபரம். தரையெங்கும் உருளைக்கிழங்கு வறுவல் கொட்டிக் கிடக்க, கடைசி துண்டுகளை வேகவேகமாக விழுங்கிக் கொண்டிருந்தது லிஸ்ஸி.

"சீ போ! பன்றி! பன்றி!" என்று திட்டி அதை வெளியே விரட்டிவிட்டுத் தரையைச் சுத்தம் செய்தாள் பேஜ்.

பிராட் க்ளீவ்லண்டுக்குப் போகாமல் இன்று இங்கே இருந்திருக்கக் கூடாதா என்ற ஏக்கம் மறுபடி ஏற்பட்டது. அதென்னவோ அவர்களுடைய வாழ்க்கை, அவர்களைத் தவிர மற்ற எல்லோருக்கும் சொந்தமென்று ஆகிவிட்டது.

பிராட் இல்லாமல் வீட்டில் தங்கவே அவளுக்குப் பிடிக்கவில்லை.

ஆண்ட்ருவைப் பார்த்து, "அப்பா க்ளீவ்லண்டுக்குப் போகிறார். ஆலிஸனும் இருக்கமாட்டாள். நாம் இரண்டு பேரும் ஓட்டலுக்குப் போய் பிஸ்ஸா சாப்பிடலாமா? என்ன சொல்கிறாய்?" என்றாள்.

"ஓ ஜோராய்!" என்றான் ஆண்ட்ரூ. மகிழ்ச்சியில் அவன் முகம் மலர்ந்தது.


மணி ஆறரை.

கையில் சூட்கேஸுடன் வெளியே வந்தான் பிராட். கருநீலத்தில் டபிள் ப்ரெஸ்டெட் பிளேசரும், பீஜ்ஸ்லாக்கும் அணிந்திருந்தான். நீல ஷர்ட்டின் காலர் வெளியே துருத்திக்கொண்டிருந்தது. 'எவ்வளவு இளமையாக, எத்தனை அழகாக இருக்கிறார்!" என்று நினைத்தபோது, தான் களைத்துக் கிழவியாகிவிட்ட மாதிரி ஒரு வருத்தம் ஏற்பட்டது.

வெளியுலகத்தில் சுற்றுவதென்ன, வாடிக்கையாளர்களைச் சந்திப்பதென்ன, ஃபிஸினஸ் மீட்டிங்குகளில் பங்கேற்பதென்ன என்று கணவனின் வாழ்க்கையே தனி.

*(தாய் தொடர்வாள்...)*

# இந்திய வாடை




என்னடா பெயரில் இந்திய வாடை அடிக்கிறதே என்று யோசிப்பவர்களுக்கு பதில் பின்னால் சொல்லலாம். ஹாலிவுட்டை கலங்கடிக்கும் இந்த அம்மணியைப் பற்றி முன்னால் சொல்லிவிடுவது நல்லது.

பதினைந்து வயதில் ஆரம்பித்த நடிப்பு ஆர்வம், மாடலாகக் கொண்டு போய் நிறுத்தி இருக்கிறது உமாவை. நியூயார்க்கில் படிப்பைத் தொடர்ந்தார். அதற்காகத் தேவைப்பட்ட பணத்திற்கு மாடலாகவும், பாத்திரம் கழுவும் வேலையையும் செய்யத் தொடங்கினார். 1987இல் தான் முதன் முதலாக ஒரு த்ரில்லர் படத்தில் பேயாகத் தோன்றும் வாய்ப்புக் கிடைத்தது. மிக முக்கியமான அந்த ரோல் பெற்றுத் தந்த பெயரைத் தொடர்ந்து, 'கிஸ் டாடி குட்நைட்' என்ற படத்தில் நடித்தார்.

இதன் பிறகு உமா நடித்து வெளிவந்த படங்கள் மீடியாவை செக்ஸ் வலையில் கட்டி இழுக்க ஆரம்பித்தது. தொடர்ந்து செக்ஸ் சம்பந்தப்பட்ட படங்களைச் செய்து உமாவுக்கும் போரடித்துப்போனது. ஒரு கட்டத்தில் நடிக்க பிரியப்படாமல் இங்கிலாந்தை நோக்கி ஓடினார். வந்த வாய்ப்புகளையும் தட்டிக்கழித்தார். திடீரென ஒரு வாய்ப்புக் கதவு தட்டியது. அதைத் தனக்குக் கிடைத்த அருமையான வாய்ப்பாகக் கருதி நடிக்கத் தொடங்கினார். 'ஹென்றி அண்டு ஜூன்' என்ற அந்தப் படத்தில் ஜூனாக நடித்த உமாவின் பெர்ஃபாமென்ஸ் பேசப்பட்டது.

***சம்பளப்பட்டியல் :***

1. ஃபைனல் அனலிசிஸ் (1992) 200,000 டாலர்கள்.
2. ஜெனிஃபர் 8 (1992) 200,000 டாலர்கள்.
3. மேட்டாக் அண்டு குளோரி (1993) 250,000 டாலர்கள்.
4. ஈவன் சௌ கேர்ள்ஸ் கெட் த ப்ளுஸ் (1993) 250,000 டாலர்கள்.
5. பல்ப்ஃபிக்சன் (1994) 300,000 டாலர்கள்.
6. மன்த் பை த லேக் (1995) 300,000 டாலர்கள்.
7. பியூட்டி ஃபுல் கேர்ள்ஸ் (1996) 300,000 டாலர்கள்.
8. ட்ருத் அபௌட் கேட்ஸ் ரு டாக்ஸ் (1996) 500,000 டாலர்கள்.
9. பேட்மேன் ரு ரோபின் (1997) 5,000,000 டாலர்கள்.
10. த. அவென்ஜர்ஸ் (1998) 8,000,000 டாலர்கள்.
11. வாட்டெல் (2000) 2,000,000 டாலர்கள்.
12. கில்பில் : வால்யூம் 1. (2003) 12, 000,000 டாலர்கள்.
13. பே செக் (2003) 12,500,000 டாலர்கள்.
14. கில்பில் : வால்யூம் 2. (2004) 12,000,000 டாலர்கள்.



'ஜூலி' படத்தின் வெற்றிக்கு அதிர்ஷ்டமும் ஒருவகையில் காரணமா? என்று நேஹா துபியாவிடம் கேட்டுப் பாருங்களேன். அட! கேட்டுத்தான் பாருங்களேன்.... அவ்வளவுதான். அம்மணி பிலு பிலு என்று பிடித்துக்கொள்வார். ஒரு முறை, ஒரே ஒருமுறை மட்டும்தான் அஸ்ட்ராலஜர் ஒருவரைப் போய் பார்த்திருக்கிறார். அவர் சொன்னது சரியாக இல்லாததால் பேயாடிவிட்டு வந்திருக்கிறார். அன்றிலிருந்து அந்த நம்பிக்கையை அடியோடு தூக்கி எறிந்து விட்டாராம். 'த்ரில்' படத்தில் நடித்திருந்தாலும் நேஹாவுக்கு இந்த மாதிரி மூடநம்பிக்கை கிடையாதாம். பாலிவுட்டே நியூமராலஜிபடி, பெயரில் எழுத்துக்களை மாற்றி எழுதியும், வாஸ்து சாஸ்திரப்படி வீட்டை இடித்தும் கட்டிக்கொண்டிருக்க, இவர்களுக்கு மத்தியில் நேஹா அபூர்வமான பார்ட்டிதான்.



ஃபெவிக்கால் போட்ட மாதிரி பின்னித் திரிந்த ஜோடிகளுக்குள்ளேயே பிளவு வருமா? வரும் என்கிறது பிபாஷா - ஜான் ஆப்ரஹாம் இணை. ஜான் ஆப்ரஹாமுக்கு இப்போது லாரா தத்தாவின் மேல் 'அது' கிளம்பியிருக்கிறது. பிபாஷாவோ இந்த விஷயத்தில் உள்ளுக்குள் கொதித்துப் போயிருந்தாலும், மேலோட்டமாகத்தான் பதில் பேசி வருகிறார். ஜானிடம் என்னை முழுமையாக அர்ப்பணித்திருந்தேன். ஆனால் என்ன நடக்கணும்னு இருக்கோ? அதுதானே நடக்கும்? எப்போ ஜான் ஆபிரஹாம், லாராதத்தா கெல்லியின் (லாராவின் காதலர்) உறவை எங்கள் உறவைவிட உயர்வாக மதிப்பதாகப் பேட்டி கொடுத்தாரோ, அப்போதே அவரிடமிருந்து நான் விலகத் தொடங்கிவிட்டேன் என்கிறார் பிபாஷா. சரி! அடுத்து வேற யாரையாவது துணையாக்கிக்கொண்டு வாழ்க்கையில் செட்டிலாகும் எண்ணம் உண்டா என்று கேட்டாலும் மறுக்கிறார். இப்போது எனக்கு 25 வயதுதான் ஆகிறது. இன்னும் 5 வருடங்களுக்கு பிறகு முப்பதாவது வயதில்தான் திருமணம் என்பதிலும் உறுதியாக இருக்கிறேன் என்கிறார். வேறொன்றுமில்லை, இதை ஜான் ஆபிரகாமின் மனமாற்றத்திற்காகக் காத்திருக்கும் காலம் என்று கூடச் சொல்லலாம். ஜான் வந்து பிபாஷாவுக்கு ஒரு முத்தம் கொடுத்தால் எல்லாம் தலைகீழ்! 'நடக்குமா?' எல்லாம் லாராதத்தாவின் பிடியில் இருக்கிறது!



# ஒரு பெண்ணின் வாழும் வரலாறு

33


## ஹிலாரி கிளிண்டன் எழுதுகிறார்

அதேவேளை அந்த நிறுவனம் கறுப்பின மாணவர்களுக்கே உரிய பண்பாடு, பழக்கவழக்கங்கள் அவர்களின் பண்பாட்டு ஒழுக்க நிலைகள் மற்றும் அவர்களின் நலன்களைப் பாதுகாப்பதில் மிகத் தீவிரமாகவும், நிதானமாகவும் செயற்பட்டது. இந்த நிலைமையானது எமது Wellesley பல்கலைக்கழகத்தில் 'இனவாத உணர்வு' சிந்தனையை ஊட்டி வளர்ப்பதற்கு வழிகோலியது. கறுப்பர் - வெள்ளையர் என்ற சிந்தனைப் போக்கை ஊன்றி வளர்த்துவிட்டது.




எமது Wellesley பல்கலைக்கழகத்திற்குள்ளேயே ஒரு பிளவுக்கு இது வழிவகுத்தது. இருந்த போதிலும் எமது பல்கலைக்கழக நிருவாகத்துடன் அவர்களின் பிரச்சினைகள் மற்றும் அவைகளைத்

கென்னடி எமது Wellesley பல்கலைக்கழகத்தின் முன்னேற்றத்திலும் வளர்ச்சியிலும் மிகப் பிரதான பங்காற்றியவர் என்பதை இங்கு குறிப்பிடாமலிருக்க முடியாது. ஜோன் எவ். கென்னடி, றொபட் எவ். கென்னடி ஆகியோர் படுகொலை செய்யப்பட்டதன் பின்பு அமெரிக்க, அரசியலிலும், ஆளும் குடியரசுக் கட்சியின் அரசியல் நடவடிக்கைகளும் பாரிய பின்னடைவை எதிர்கொள்ளுமென பலரும் நினைத்தார்கள். ஆனால் அப்படியானதொரு பின்னடைவு தோன்றாமல் ஆளும் குடியரசுக் கட்சியின்மீது விடுக்கப்பட்ட சவால்கள் அனைத்தும் முறியடிக்கப்பட்டு ஆளும் குடியரசுக் கட்சி ஒரு முன்னேற்றகரமான பாதையை நோக்கியே சென்றுகொண்டிருந்தது.



தீர்ப்பதற்கான வழிமுறைகளைப்பற்றி தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடாத்தி ஒரு சுமுகமான முடிவுக்கு வருவதற்கான முயற்சியில் ஈடுபட்டனர். இது விடயத்தில் எமது Wellesley பல்கலைக்கழக நிருவாகம் பூரண ஒத்துழைப்பு வழங்கியது. எந்தளவிற்கு என்றால் அவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க எமது பல்கலைக்கழக நிருவாகம் ஒரு 'விஷேட ஆலோசனை சபை'யை நியமித்து அவர்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கு காத்திரமான முடிவுகளை எடுத்தது.

இயன்றவரை அவர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான விதப்புரைகளை முன்வைத்ததன் மூலம் விஷேட ஆலோசனை சபை தொடர்ந்தும்



உறுதியாக நின்று செயற்பட்டு வந்தது. பொதுவாக அவர்களின் பிரச்சினைகளை மெல்ல மெல்ல தீர்த்துவைப்பதென அந்த சபையை சேர்ந்த உறுப்பினர்கள் உறுதி பூண்டனர்.

இவ்வாறான தொடர்ந்தேர்ச்சியான முயற்சியின் காரணமாக சிறுபான்மைக் கறுப்பின மாணவர்கள் பொதுவாக Wellesley பல்கலைக்கழகத்திலும் வெளியிலும் தமக்குரிய சரிசமனான உரிமைகளை எல்லாவற்றிலும் பெற்றுக் கொண்டனர். பின்பு 1970ம் ஆண்டிற்குப் பிறகு அவர்களின் பிரச்சினைகளில் அதிகமானவை தீர்க்கப்பட்டு அந்த சிறுபான்மை கறுப்பின மாணவர்களும் எமது பல்கலைக்கழகத்தில் எல்லாவகையிலும் சரிசமமாக கணிக்கப்படக்கூடிய நிலை உருவாகியது.

மேலும், 1968களில் செனட்டராக இருந்த றொபட் எவ். கென்னடியும் படுகொலை செய்யப்பட்டார். இந்த சோகமான நிகழ்வு நடைபெற்று இரண்டு மாதங்களின் பின்பு அதாவது 1968ம் ஆண்டு ஜூன் மாதம் 5ம் திகதி அமெரிக்க அரசியலில் சடுதியான பல மாற்றங்கள் அடுத்தடுத்து நிகழ ஆரம்பித்தன. அதாவது ஜோன் எவ். கென்னடியின் படுகொலையைத் தொடர்ந்து ஓரளவு மந்தகதியிலேயே சென்றுகொண்டிருந்த அரசியல் மாற்றங்கள் றொபட் எவ். கென்னடியின் படுகொலையின் பின்பு வேகமான மாற்றங்களை காண ஆரம்பித்தன.

உண்மையில் றொபட் எவ். கென்னடி படுகொலை செய்யப்பட்ட செய்தியை நாம் கேள்விப்பட்டு மிகவுமே கவலையடைந்தோம். றொபட் எவ்.

இவ்வாறு அப்போதைய அரசியல் நிலைப்பாடுகளில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டிருந்த வேளையில், எனது பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகளை மிகச் சிறப்பான முறையில் கற்றுக் கொண்டிருந்தேன் என்பதனை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மேலும் இன்னுமொரு முக்கிய விடயத்தினையும் நான் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். அதாவது Wellesley பல்கலைக்கழகத்தில் நான் கல்வி கற்றுக்கொண்டிருந்த வேளையில் அப்போதைய அரசாங்கத்தின் போக்குகள், திட்டங்கள் செயற்பாடுகளில் உள்ள குறுங்கால நீண்டகால திட்டங்கள் பற்றியும், அத்துடன் அப்போதைய அரசாங்கத்தைப்பற்றிய முழு அளவிலான சாதக பாதகமான கருத்துக்களை நாம் தொகுத்து ஒரு சிறு கையேடாக வெளியிட்டோம். எப்படி அரசாங்கம் செயற்படுகிறது என்று தலைப்பிடப்பட்டது. அந்த நூலில் எமது Wellesley பல்கலைக்கழகத்தில் சகல துறைகளிலும் கல்வி பயில்கின்ற மாணவர்களினது ஆக்கங்கள் அதில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

அவ்வேளையில் அந்தக்கையேட்டை வெளியிட அதனைப் பார்த்துப் பரிசீலித்து சரி பிழை பார்த்துத் திருத்தித் தந்தவர்தான் எங்களுடைய அரசியல் துறைப்பேராசிரியர் அலெக் செஸ்டர் என்பவராகும். இவர்தான் எங்களுடைய பல்கலைக்கழக ஆய்வுக்கான விஷேட ஆலோசகரும் ஆவார்.

மேலும் இவர்தான் இந்த நிகழ்ச்சித் தொகுப்பின் பணிப்பாளர் பதவியையும் வகித்தார். அத்துடன் அவர் ஒரு சிறந்த அரசியல் துறை பேராசிரியராக விளங்கிய அவர் எங்களது பல்கலைக் கழகத்தில் எல்லோராலும் மதிக்கத்தக்க ஒரு சிரேஷ்டப் பேராசிரியருமாவார்.

இருபதாம் நூற்றாண்டின் வரலாறு நமது கண்முன் உள்ளது. ஆனால் கடந்த பல நூற்றாண்டுகளின் வரலாற்றை நாம் காண முடியாதுள்ளது.

ஆனாலும், நம்மைக் கடந்து சென்ற 19ம் நூற்றாண்டு வரலாறு கண்ணீர் சிந்த வைப்பதும், அழகியதும், அரியதுமான படங்களினூடாக உங்கள் முன் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு படமும் ஒவ்வொரு கதையைக் கூறுவன. 19ம் நூற்றாண்டின் வரலாறானது முன்னெப்போதுமில்லாத வகையில் அதிக மாற்றங்களை சந்தித்தது. எல்லா மாற்றங்களும் இயல்பாக ஏற்பட்டதுமல்ல, அவற்றுள் சில யுத்தங்கள், எதிர்ப்புகளைத்தாண்டி நடந்துள்ளன. பல சாம்ராஜ்யங்கள் சிதைந்து, புதிய நாடுகள் உருவாகி யுள்ளன. விஞ்ஞான, அறிவியல் மாற்றங்கள் ஏற்படுகின்றன. உலகம் மாறிக்கொண்டே வந்திருக்கிறது.

19ம் நூற்றாண்டு தொடக்கத்தில் உலகின் முழு நிலப்பரப்பில் ஐந்தில் ஒரு பகுதி பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் கீழிருந்தது. இப்போது? இப்படியான பல கதைகள்... இவைகளை நமது வாசகர்கள் தரிசிக்க ஒரு வாய்ப்பை தினமுரசு ஏற்படுத்துகிறது.

**1911**




## தென் துருவத்தைக் கண்டுபிடித்த அம்யூனட்சென்

*உலகில் நாடுகாண் பயணங்களில் ஈடுபட்டவர்கள் அதிகமானவர்கள் இருக்கிறார்கள். அந்தவகையில் இந்த நாடுகாண் பயணங்களில் ஈடுபட்ட ஒருவர்தான் நோர்வே நாட்டைச்சேர்ந்த அம்யூனட்சென் என்பவராகும். இவர்தான் தென் துருவத்தைக் கண்டுபிடித்தார்.*

*1872ம் ஆண்டு பிறந்த இவர், 1911ம் ஆண்டு தென்துருவத்தைக் கண்டுபிடித்தார். பிரித்தானியாவில் இருந்து கேப்டன் ஸ்கொட்டின் தலைமையில் ஒரு குழு தென் துருவத்தைக் கண்டுபிடிப்ப தற்காக பயணம் செய்தது. இக்குழுவின் முயற்சி தோல்வியிலேயே முடிந்தது. அதன் பின்பு அம்யூனட்சென் பயணம் செய்தார். அவர் தன்னுடன் ஒரு குழுவினரை அழைத்துச்செல்லவில்லை மாறாக பத்து நாய்களைத்தான் தன்னுடன் அழைத்துச் சென்றார். அந்த நாய்களுக்குக் கொடுக்கக்கூடிய சில உணவுப் பண்டங்களையும் அவர் தன்வசம் எடுத்துச் சென்றார். அதன் மூலம் தென் துருவத்தை அடைந்த அவர் தென்துருவத்தைக் கண்டு பிடித்தார். 1928ல் மரணமானார்.*

## மேற்கின் யுத்தமுனை!



*மேலே உள்ள படத்தில் காணப்படுவது மேற்கின் ஒரு யுத்தமுனையாகும். ஜேர்மனி படையினருக்கும், பிரித்தானியப் படையினருக்கும் கடற்கரை ஓரத்தில் நடைபெற்ற ஒரு யுத்தக் காட்சியையே இங்கு காண்கின்றீர்கள். படையினர் பீரங்கிகள் மூலம் தாக்குதல் நடத்துவதை படத்தில் காணக்கூடியதாக உள்ளது.*

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## தொடரும் அவலங்கள்

-பத்திரிகையாளர் சபாரத்தினத்தின் அனுபவம் தொடர்கிறது.

என் வீட்டின் முன் கதவை உடைத்துக்கொண்டு காடையர் கும்பல் உள்ளே புகுந்தது. நான் நிறைய நூல்கள் சேகரித்து வைத்திருந்தேன். நான் அவற்றைப் பொக்கிஷம் போலப் பாதுகாப்பாக வைத்திருந்தேன். இலங்கை, இந்தியா சம்பந்தப்பட்ட வரலாற்று நூல்கள் நிறையவே இருந்தன. இந்த நூல்களை எடுத்துக் குவித்துவிட்டுக் காடையர் கும்பல் தீவைத்தது. மூன்று நாட்கள் இவை எரிந்துகொண்டிருந்ததாக எனது அயலவர்கள் கூறினர். பம்பலப்பிட்டி, காசல் ஒழுங்கையிலுள்ள எனது உறவினரின் வீட்டிலிருந்து தெஹிவளையிலுள்ள எனது அயலவர்களுடன் தொலைபேசி மூலம் அன்று மத்தியானம் தொடர்புகொண்டேன். எனது வீடு பற்றி எரிந்துகொண்டிருப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, கடற்கரைப் பக்கமிருந்து காசல் ஒழுங்கைக் குள் பொல்லுகள், அலவாங்குகள் சகிதம் கும்பலொன்று பிரவேசித்தது. கடற்கரைக்குச் சமீபமாகவிருந்த கடைசி வீடு காடையர் கும்பலின் தாக்குதலுக்கு இலக்கானது. அந்த வீட்டிலிருந்தவர்கள் ஏற்கெனவே எங்கோ தப்பிச் சென்றுவிட்டனர். வீட்டிலிருந்த தளபாடங்கள் மற்றும் பொருட்களை எடுத்துப் போட்டு தீவைத்து அக் கும்பல் அட்டகாசம் புரிந்துகொண்டிருந்தது. நான் நான்கு அமைச்சர்களோடு தொலைபேசி மூலம் தொடர்புகொள்ள முயன்றேன். அவர்களோடு தொடர்புகொள்ள முடியவில்லை. அவர்கள் ஜனாதிபதி ஜெயவர்த்தனவோடு பேசிக்கொண்டிருப்பதாக எனக்குத் தகவல் தரப்பட்டது. ஜனாதிபதி அதிர்ச்சியுற்றிருந்தார். நிலைமை கட்டுமீறிப் போனதால் அவர் குழம்பிப் போயிருந்தாரென்று பின்னர் வெளிவந்த தகவல்கள் தெரிவித்தன. அமைச்சர்கள் தொண்டமான், ஹமீத் போன்றவர்கள் ஊரடங்குச் சட்டத்தை உடனடியாகவே அமுலுக்குக் கொண்டுவருமாறு ஜெயவர்த்தனவுக்கு அழுத்தம் கொடுத்தனர். அராஜகச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த அரசாங்கம் காத்திரமான நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை. அசமந்தமாக இருந்ததால் நாட்டின் பல பகுதிகளுக்கும் இனவெறித் தீ பரவியது.

**இலங்கையில் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தமிழகத்தில் பெரும் கோப அலையைக் கிளப்பியது. அப்போது இந்திரா காந்தி இந்தியாவின் பிரதமராக இருந்தார். இந்திய மத்திய அரசும் கடும் கண்டனத்தை வெளியிட்டது. ஜூலை 26ஆம் திகதி கூடிய இந்திய லோக் சபைக் கூட்டத்தில் இலங்கை விவகாரம் காரசாரமாக எதிரொலித்தது. இலங்கையில் தமிழர்கள் கொல்லப்படுவதைத் தடுக்க இந்தியா கடும் நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று பலர் வற்புறுத்தினர். இந்தியா இராணுவ ரீதியாகத் தலையிட வேண்டுமென்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது. தமிழ்நாட்டில் பதற்றம் அதிகரித்தது.**

இந்த இன சங்காரத்தில் 350 பேர் கொல்லப்பட்டனரென்றும் சுமார் பதினெட்டாயிரத்துக்கு மேற்பட்ட குடியிருப்புகள், வர்த்தக நிலையங்கள், தொழிற்சாலைகளுக்குத் தீ வைக்கப்பட்டனவென்றும், ஓர் இலட்சம் மக்கள் வீடு, வாசல்களை இழந்து நிர்க்கதியாகினரென்றும் அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. ஆனால் சேத விவரங்கள் இன்னும் அதிகமானவையென்று தமிழர் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

கொழும்பில் 52 ஆயிரம் தமிழ் மக்கள் அகதிகளாக்கப்பட்டனரென்றும் வெளிமாவட்டங்களில் சுமார் 12 ஆயிரம் பேர் அகதிகளானார்களென்றும் அரசாங்கம் அறிவித்தது. றோயல் கல்லூரி, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி உட்பட கொழும்பில் பதினான்கு அகதி முகாம்கள் திறக்கப்பட்டன. அகதி முகாம்களில் பெரும் இடநெருக்கடியும், சுகாதாரச் சீர்கேடுகளும்

*(அரசியல் தொடர்)*

காணப்பட்டன. பெருந்தொகையான மக்கள் அகதி முகாம்களுக்குத் திடீரென வந்து சேரத் தொடங்கியதால் அதிகாரிகளால் போதியளவு நலன்புரி நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க முடியவில்லை. சில அகதி முகாம்களில் இரு நாட்களாக உணவு கூட வழங்கப்படவில்லையெனக் குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்பட்டன.

இதற்கிடையில் இலங்கையில் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தமிழகத்தில் பெரும் கோப அலையைக் கிளப்பியது. அப்போது இந்திரா காந்தி இந்தியாவின் பிரதமராக இருந்தார். இந்திய மத்திய அரசும் கடும் கண்டனத்தை வெளியிட்டது. ஜூலை 26ஆம் திகதி கூடிய இந்திய லோக் சபைக் கூட்டத்தில் இலங்கை விவகாரம் காரசாரமாக எதிரொலித்தது. இலங்கையில் தமிழர்கள் கொல்லப்படுவதைத் தடுக்க இந்தியா கடும் நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று பலர் வற்புறுத்தினர். இந்தியா இராணுவ ரீதியாகத் தலையிட வேண்டுமென்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது. தமிழ்நாட்டில் பதற்றம் அதிகரித்தது. அப்போது தமிழ்நாட்டின் முதலமைச்சராக எம்.ஜி.இராமச்சந்திரன் இருந்தார்.




தமிழக சட்டசபையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரதம கொறடாவாகவிருந்த உலகத் தமிழர் இயக்கத்தின் தலைவரான டாக்டர் எஸ்.ஜனார்த்தனன், இலங்கையில் இடம்பெறும் படுகொலைகளைக் கண்டித்து தனது பிரதம கொறடா பதவியை இராஜினாமாச் செய்தார். தமிழக சட்ட சபையின் எதிர்க்கட்சித் தலைவராகவிருந்த தி.மு.க. தலைவர்

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

கருணாநிதி, தனது பதவியை இராஜினாமாச் செய்தார். தி.மு.க. பல ஆர்ப்பாட்டப் பேரணிகளைத் தமிழகத்தின் பல இடங்களில் நடத்தியது. இந்தியா இராணுவ நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கோரிக்கை தமிழகத்தில் வலுவாக எழுந்தது.

முதலமைச்சர் எம்.ஜி.ஆர். இலங்கை விவகாரம் குறித்துக் காத்திரமான நடவடிக்கை எடுக்கவில்லையென்று தி.மு.க. குற்றஞ்சாட்டியது. எம்.ஜி.ஆர். மலையாளி என்பதால் இலங்கைத் தமிழர் விவகாரத்தில் அக்கறை செலுத்தத் தவறுகிறாரென்றும் கேலிகள் பேசப்பட்டன. இலங்கையில் கண்டியில் பிறந்தவர் எம்.ஜி.ஆர். ஆகவேதான் கண்டிக்கத் தயங்குகிறாரென்றும் சிலர் விமர்சனம் செய்தனர். இந்திரா காங்கிரஸோடு கூட்டுச் சேர்ந்திருந்த எம்.ஜி.ஆர். இந்திரா தலையிட வேண்டுமென்று அழுத்தம் கொடுக்க ஆரம்பித்தார். இந்தியா உடனடியாகவே மருந்துவகைகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை இலங்கைக்கு நிவாரண உதவியாக அனுப்பி வைத்தது. 26 மில்லியன் ரூபா பெறுமதியான பொருட்கள் உடனடியாக அனுப்பிவைக்கப்பட்டன. பிரதமரின் அவசரகால நிதியிலிருந்து ஒன்பது மில்லியன் ரூபாவைப் பிரதமர் இந்திரா காந்தி அனுப்பி வைத்தார். காலிஸ்தான் தனிநாட்டுப் போராட்டத்துக்கு முகங்கொடுத்துக்கொண்டிருந்த பஞ்சாப் மக்கள் ஆறு இலட்சம் ரூபாவை நிவாரண உதவிக்கென வழங்கினர். தமிழக அரசு தினமும் பெருந்தொகையான பாண்களை அனுப்பியது. அகதிகளை வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு அனுப்பி வைப்பதற்காக இந்தியா நான்கு பயணிகள் கப்பல்களைக் கொடுத்துதவியது. எம்.வி.சிதம்பரம் கப்பலில் டாக்டர்களுடன் மருத்துவப் பொருட்களும் ஏற்றி வரப்பட்டன. இந்தியக் கப்பல்கள் மூலம் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட அகதிகள் காங்கேசன் துறைமுகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். காங்கேசன்துறையில் தொண்டரடிப்படையில் சேவை புரிய முன்வந்த இளைஞர்கள், அகதிகளை வரவேற்று உணவளித்து, ஆசுவாசப்படுத்தி வாகனங்களில் இலவசமாக அவரவர் வீடுகளுக்குக் கூட்டிச் சென்றனர்.

கொழும்பில் வாழ்ந்த தமது உறவுகளுக்கு என்ன கதி நேர்ந்ததென கிட்டத்தட்ட பத்துப் பதினைந்து நாட்களாகத் தெரியாமல் தவித்த வடக்கு - கிழக்கு மக்களின் நிலை பெரும் பதற்றமாக இருந்தது. ஆசீர்வாதம் என்பவர் சொன்ன கதை இது :

"அப்போது எனது மகனுக்கு ஐந்து வயதிருக்கும். உடுத்த உடையோடு யாழ்ப்பாணம் சென்ற என்னையும் என் மனைவியையும் கட்டியழுதபடி 'அப்பா இலங்கையின் தேசிய மிருகம் எது?' என்று எனது மகன் மழலை மொழியில் கேட்டான். நான் 'தெரியாது' என்றேன். 'சிங்களவன்' என்று படீரென அவனிடமிருந்து பதில் வந்தது கண்டு நான் திடுக்கிட்டேன். 'இல்லை, சிங்கள மக்களில் நல்லவர்களும் இருக்கிறார்கள். எத்தனையோ தமிழ் மக்களைச் சிங்களச் சகோதரர்கள் காப்பாற்றியிருக்கிறார்கள்' என்றேன் நான்" என்றார் ஆசீர்வாதம்.

(தொடர்ந்து வடியும்....)

## சகோதரப் படுகொலைகளை உடனடியாக நிறுத்துங்கள் -பிரபாகரனுக்கு ஆனந்தசங்கரி பகிரங்கக் கடிதம்

*தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி புலி இயக்கத் தலைவர் வே.பிரபாகரனுக்கு அண்மையில் எழுதிய பகிரங்க மடலொன்றில் கருணா விவகாரத்தை சுமுகமாகத் தீர்க்குமாறும் சகோதரப் படுகொலைகளை உடனடியாக நிறுத்துமாறும் எடுத்துக் கூறியுள்ளார். அத்துடன் புலிகள் முன் வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையின் சாத்தியமற்ற தன்மை பற்றியும் வடக்கிலிருந்து விரட்டப்பட்ட முஸ்லிம் மக்களின் அவல நிலை பற்றியும் எடுத்துக் கூறிப் பரிகாரம் காணுமாறும் கேட்டுள்ளார். அக் கடிதம் பூரணமாக இங்கே பிரசுரிக்கப்படுகிறது.*

வே. பிரபாகரன் அவர்கள் 12-10-2004
தலைவர்,
தமிழ் ஈழ விடுதலைப் புலிகள்,
கிளிநொச்சி.

அன்புள்ள தம்பி!

இக் கடிதம் உமக்கு ஆச்சரியத்தைத் தராது என எண்ணுகிறேன். எனது முன்னைய இரு கடிதங்களுக்கும் உங்களிடமிருந்து பதில் வராது போனாலும் இது நான் அனுப்பும் மூன்றாவது கடிதம். என்னையும் உங்களையும் போல் உலகெங்கும் பரந்து வாழும் ஆயிரக்கணக்கான தமிழ் மக்களில் கூடுதலானவர்கள், எம் மக்கள் அமைதியாக வாழ வேண்டும் என்பதையே விரும்புகின்றார்கள். அதுவே சிங்கள, முஸ்லிம் மக்களின் விருப்பமுமாகும். ஆயிரக்கணக்கான மக்கள் அமைதியின் ஆரம்பத்தைக் காணாமலேயே இறந்துபோனார்கள். எமது காலத்திலேயே எமது மக்கள் சக வாழ்விற்குத் திரும்ப வேண்டும் என்பதே எனது அவா. இதுவே ஒவ்வொருவரின் விருப்பமுமாகும்.

உங்களுக்கும் உங்கள் கிழக்குப் பிராந்தியத் தளபதி கருணாவுக்கும் என்ன நடந்தது என்பது எமக்குத் தெரியாது. ஆனாலும் உங்கள் மத்தியில் ஏற்பட்ட பிளவு பற்றி அறிந்ததும், பல சிரமத்தின் மத்தியில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களால் ஏற்படுத்தப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணங்களின் இணைப்பு எவ்விலை கொடுத்தேனும் காப்பாற்றப்படல் வேண்டும் எனக் கேட்டுக்கொண்டேன். உங்களுக்கிடையே ஏற்பட்ட பிளவு மேலும் விரிவடைந்து தமிழ் மக்களின் நலனைப் பாதிக்கின்றது. நீங்கள் இரு சாராரும் இனி ஒன்று சேர்வீர்கள் என்பது ஐயம்தான். பலரின் பல ஆண்டுகால உழைப்பும் தியாகமும் உங்களிடையே ஏற்பட்டுள்ள பிளவால் நலிவுற்றுள்ளது. பல இலட்சம் தமிழ் இளைஞர்கள் சொந்த நாட்டை விட்டுப் பல்வேறு நாடுகளில் அகதிகளாகத் தஞ்சம் கோரியுள்ளனர். பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் களத்தில் மடிந்துள்ளனர். சிங்கள, இஸ்லாமிய மக்களுக்கு ஏற்பட்ட உயிரிழப்பு குறைந்த எண்ணிக்கை அல்ல. அப்பாவி மக்கள் அறுபதினாயிரத்துக்கு மேல் உயிரிழந்துள்ளனர். தமது வீடுகளுக்குத் திரும்புவோம் என்ற நம்பிக்கை இழந்த நிலையில் கணக்கில் அடங்காத மக்கள் இலங்கை, இந்திய அகதி முகாம்களில் வாடுகின்றனர். இடம்பெயர்ந்த பல்லாயிரக்கணக்கானோர் அரசும் சில பொது ஸ்தாபனங்களும் வழங்கும் சிறு உதவிகளைப் பெற்று நண்பர்கள் வீடுகளிலும் உறவினர்கள் வீடுகளிலும் தஞ்சமடைந்துள்ளனர். எல்லாவற்றிற்கும் மேலாக அழிக்கப்பட்ட பொதுமக்களின் சொத்துக்கள், தனியார் மற்றும் அரசாங்கத்தின் சொத்துக்களின் பெறுமதி பல்லாயிரம் கோடி பெறும். இக் கணிப்புத்தான் உங்களையும் எமது மக்களையும் எதிர்கொள்ள இருக்கும் கடினமான எதிர்காலம் பற்றிச் சிந்திக்குமாறு கோரி இக் கடிதத்தை எழுதத் தூண்டியது. வடக்கிலாக இருந்தாலும் சரி, கிழக்கிலாக இருந்தாலும் சரி அர்த்தமற்ற கொலைகளை உடனடியாக நிறுத்தி எமது பிரச்சினைக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

ஏறத்தாழ அரை நூற்றாண்டு காலமாக அரசியலில் இருக்கும் மூத்த அரசியல்வாதி நான். பெரியார் அமரர் சா.ஜே.வே.செல்வநாயகம் கியூ.சி. உட்படப் பல்வேறு அரசியல் கட்சிகளின் உயர்மட்டத் தலைவர்களுடன் பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகித்துள்ளேன். அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் ஸ்தாபகர் பெரியார் அமரர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் கியூ.சி. அவர்களின் இறுதி நாட்களில் அவர்களுடன் சில நாட்களைக் கழித்த பெருமைக்குரிய கட்சித் தமிழ் அரசியல்வாதி நானே. ஆகவே, குறிப்பாக எமது மக்கள் சம்பந்தமாகவும் பொதுவாக நம் நாடு சம்பந்தமாகவும் உங்களுக்கு ஆலோசனை வழங்கும் உரிமையும் தகுதியும் எனக்கு உண்டு எனக் கருதுகிறேன். சுயநல நோக்கின்றி என்னால் வழங்கப்படும் ஆலோசனையைத் தீவிரமாகப் பரிசீலிப்பீர்களென நம்புகிறேன்.

முதற்கட்டமாக, தயவு செய்து கருணா அவர்களுடன் ஒரு உடன்பாட்டிற்கு வந்து பெறுமதி மிக்க உயிர்கள் இரு பகுதியிலும் அழிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்துங்கள். நீங்கள் இருவரும் பல ஆண்டுகள் ஒன்றாகச் செயற்பட்டவர்கள்தானே? உங்களின் சில ஆதரவாளர்கள் உலகின் பல்வேறு பகுதிகளில் சுயநலத்துடன், சுயலாபம் கருதிச் செயற்பட்டு பல சந்தர்ப்பங்களில் உங்களைக் கைவிட்டுள்ளனர். தமது கடந்த காலத்தை மறைத்து உங்களின் தீவிர ஆதரவாளர் எனக் கூறிச் செயற்படுபவர்களாலேயே உங்களுக்கும் உங்கள் இயக்கத்துக்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதையும் தயவு செய்து உடனடியாக நிறுத்த வழி செய்யவும்.

எது பிழை, எது சரியென எடுத்துக் காட்ட வேண்டியது எனது கடமையாகும். இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையில் விடுதலைப் புலிகளுக்கு பெரும்பான்மைப் பிரதிநிதித்துவத்தை எந்த அரசு கொடுக்கச் சம்மதிக்கும்? நாம் கேட்பதை சம்பந்தப்பட்டவர்கள் கொடுக்கக்கூடிய நிலையில் இருக்கின்றார்களா என்று பார்க்க வேண்டாமா? இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையில் பெரும்பான்மைப் பிரதிநிதித்துவத்தைப் புலிகள் கோருவது, இணைந்த வடக்கையும் கிழக்கையும் பிரிக்க எடுக்கப்படும் முதல் நடவடிக்கையாகும். கிழக்கு மாகாணத்தில் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் ஏறக்குறைய சம எண்ணிக்கையில் வாழும்போது இத்தகையதோர் கோரிக்கை இணைந்த வடக்கையும் கிழக்கையும் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கை வலுப்பெற வழி செய்யும். இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையின் நிர்வாகத்தில் பெரும்பான்மை வேண்டுமெனின் விடுதலைப் புலிகளுக்கு உள்ள ஒரே வழி சிறுபான்மை இனப் பிரதிநிதிகளை வென்றெடுப்பதே. இச் செயல் மூலம் சிறுபான்மையினரின் நல்லெண்ணத்தையும் நம்பிக்கையையும் பெற முடியும்.

இத்தகைய கோரிக்கை அரசு பிரச்சினையிலிருந்து தப்பித்துக் கொள்ள வழிவகுப்பதோடு சர்வதேச சமூகத்தையும் பிரச்சினையிலிருந்து ஒதுங்கத் தூண்டும். இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை நிர்வாகத்தின் தலைவர், வடக்கு கிழக்குப் பிரதம நிர்வாகி, அவரின் உதவியாளர்கள் ஆகியோர் புலிகளைச் சேர்ந்தவர்களாகவே இருப்பர் என்பது அனைவரும் விளங்கக் கூடியதே. இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையின் தலைவருக்கு இத்தகைய நியமனங்களை இரத்துச் செய்யவோ இடைநிறுத்தவோ அதிகாரம் உண்டு. சுருங்கக் கூறின் இடைக்கால நிர்வாகத்தின் மூலம் புலிகள் வடக்கு - கிழக்கினை நிர்வகிக்கும் முழு அதிகாரத்தையும் கோருகின்றனர்.

இத்தகையதோர் நிர்வாகத்தை மக்கள் ஏற்பார்களாவென்று உங்களைக் கேட்க விரும்புகிறேன். முஸ்லிம்களும் சிங்களவர்களும் இந்த உடன்பாட்டுக்குச் சம்மதம் தருவார்களா? இதற்கு உடன்படும் அரசுதான், பின்னர் பதவியில் நிலைக்க முடியுமா? தாம் தேடிய சொத்துக்களைக் கூட எடுத்துச் செல்ல விடாது, பல நூற்றாண்டுகளாகச் சகோதரர்கள் போல் வாழ்ந்த வட பகுதி முஸ்லிம்கள் வடமாகாணத்தை விட்டு விரட்டப்பட்டபோது இடம்பெயர்ந்து, இன்றும் அவர்கள் அநுராதபுரம், புத்தளம் ஆகிய மாவட்டங்களில் பரிதாபத்துக்குரிய நிலையில் ஓலைக் குடிசைகளில் வாழ்கின்றனர்.

உங்களால் அவர்களுக்கு "மீளக் குடியேறுங்கள்" என அழைப்பு விடுக்கப்படாத பட்சத்தில் ஒரு முஸ்லிம் குடிமகனாவது புலிகளால் நிர்வகிக்கப்படும் இடைக்கால நிர்வாகத்தின் கீழ் வாழச் சம்மதிப்பாரா? இந் நிலையில் வடக்கை விட்டு இடம் பெயர்ந்தும் கிழக்கிலங்கையில் மூன்றில் ஒரு பகுதியினராகவும் வாழும் சிங்களவர்களின் நிலை என்ன? இடைக்கால நிர்வாக ஆலோசனை பிரச்சினையைக் கூட்டியுள்ளது மட்டுமின்றி, எமது பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியை முடங்கவும் வைத்துள்ளது.

உங்களது கோரிக்கையில் ஒன்றாக, இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையின் நிர்வாகம் அமைத்து ஐந்து வருடங்கள் ஆட்சி செலுத்தியதன் பின்பும் எமது இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணாத பட்சத்தில் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை ஒரு சுதந்திர தேர்தல் ஆணைக்குழுவை நியமித்து அதன் மூலம் ஒரு சுதந்திரமானதும் நியாயமானதுமான ஒரு தேர்தலை நடத்துமெனக் கூறியுள்ளீர்கள். இது நடக்கக்கூடிய காரியமா?

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை பற்றி இன்னும் பல விடயங்களைக் கூறலாம். சுருக்கமாகக் கூறின் அரசு பரிசீலிக்கக்கூடிய ஒரு தீர்வுத்திட்டத்தைப் புலிகள் முன்வைக்கவில்லை. சில பிரேரணைகள் வடக்கிலும் கிழக்கிலும் வாழும் தமிழர்களாலேயே ஏற்க முடியாதவை. இதனை அரசு எவ்வாறு பரிசீலிக்கும். புலிகள் எத்துறையிலும் குறிப்பாக சட்டம், ஒழுங்கு ஆகிய துறைகளில் தமது பாரபட்சமின்மையை நிரூபிக்கத் தவறிவிட்டனர். உங்களுடைய காவற்துறையிலும் நீதித்துறையிலும் சிங்கள, முஸ்லிம் மற்றும் தமிழ் மக்கள் எவ்வாறு நம்பிக்கை வைத்துச் செயற்படுவர்? இந்த நடவடிக்கை, வடக்கு - கிழக்கு வாழ் மக்களை முற்றுமுழுதாகப் புலிகளின் கட்டுப்பாட்டுக்கும் ஆளுமைக்கும் உட்படுத்த எடுக்கப்படும் முயற்சி என்று உங்களுக்குத் தோன்றவில்லையா?. சிங்கள, முஸ்லிம் ஏன் தமிழ் சமுதாயத்தினர் கூட இந்த ஆலோசனையை ஏற்கமாட்டார்கள். இன்று மக்கள் வேண்டுவதெல்லாம் ஜனநாயக ஆட்சியே.

எமது மக்களின் மத்தியில் விரைவாக அமைதியைக் கொண்டுவர விரும்பினால் தயவுசெய்து எனது ஆலோசனையைப் பரிசீலனை செய்யவும். இவ் ஆலோசனையானது அனைவரின் திருப்திக்கேற்ப விரைவாக நல்ல ஒரு முடிவினைத் தரும்.

தம் நாடுகளின் சிறுபான்மையினர் எதிர்நோக்கிய பல்வேறு பிரச்சினைகளைத் திருப்திகரமாகத் தீர்த்துவைத்த பல நாடுகள் உண்டு. அத்தகைய நாடுகள், பல நிதி உதவித் திட்டங்களோடு, எமது பிரச்சினைக்குத் தீர்வு காணும் ஆர்வத்துடன் காத்திருக்கின்றன. கனடா,ஜேர்மனி,சுவிற்ஸர்லாந்து மற்றும் இந்தியா போன்ற நாடுகள் சமஷ்டி ஆட்சி முறையில் முன்னிலை வகிக்கின்றன. நாம் உதவி கோரும் பட்சத்தில் அத்தகைய நாடுகளின் அரசியல் யாப்பு வல்லுனர்களோடு பிரித்தானியா, பிரான்ஸ், அமெரிக்கா, ஜப்பான் மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாட்டு வல்லுனர்களும் எமது நாட்டு வல்லுனர்களுடன் இணைந்து ஒரு யாப்பை உருவாக்க மகிழ்ச்சியுடன் முன்வருவார்கள் என்பதில் ஐயமில்லை. ஏற்கெனவே தயாரிக்கப்பட்டு முடக்கிவைக்கப்பட்டுள்ள அரசியல் யாப்பையும் பரிசீலனைக்கு எடுக்க முடியும்.

எமது அண்டைய நாடான இந்தியா உருவாக்கிய அரசியல் யாப்பு நீண்ட காலமாக வெற்றிகரமாக இயங்கி வருகின்றது. பல சோதனைகளைத் தாண்டி இன்னும் நடைமுறையிலிருக்கும் இந்திய அரசியல் சாசனத்தின் அதிகாரப் பகிர்வை, அவசியம் ஏற்படின் தேவைக்கேற்ற மாற்றங்களுடன் முன்மாதிரியாகக் கொள்ளலாம். அவ்வாறு தயாரிக்கப்பட்ட ஒரு அரசியல் சாசனத்தை இலகுவாக எவராலும் நிராகரிக்க முடியாது. அது இலங்கையில் வாழும் சகல மக்களுக்கும் ஏற்புடையதாக இருக்குமெனவும் நான் நம்புகிறேன். அத்தகைய திட்டத்துக்கு எதிர்ப்பு இருப்பின் எதிர்ப்பவர்களை ஏற்கவைக்கவோ அல்லது அழுத்தம் கொடுக்கவோ சர்வதேச சமூகத்தின் உதவியையும் நாட முடியும்.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்து எமது இனப் பிரச்சினையை அறிந்து வந்த கனடா-ஒன்ராறியோவின் முன்னைநாள் முதலமைச்சர் கௌரவ பாப் றே அவர்கள், "இலங்கை இனப் பிரச்சினைத் தீர்வுக்கு சமஷ்டி ஆட்சி முறையே தகுந்த தீர்வு" எனக் கூறியுள்ளார். இவ்வாறு கூறிய தகுதி மிக்க பிரமுகர்களில் இவரும் ஒருவராவார்.

இறுதியாக, நாம் பழைய விடயங்களைப் பற்றி மீண்டும் மீண்டும் பேசுவதை நிறுத்த வேண்டும். எமது பிரச்சினை என்ன என்பதனையும் அதற்கு ஏற்புடைய தீர்வு எது என்பதையும் அகில உலகமும் அறிந்து வைத்துள்ளது. ஆகவே, மேலும் காலத்தை வீணாக்காது எமது மக்கள் துன்பத்தை அநுபவிக்க முடியாது, அனுபவிக்க விடவும் கூடாது என்பதைக் கருத்தில் கொண்டு, சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்போடு ஓர் தீர்வுக்கான உடன் நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன். வடக்கு - கிழக்கில் வாழுகின்ற சிறுபான்மை முஸ்லிம், சிங்கள மக்களின் உள்ளத்தை வென்றெடுக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் உங்களுக்கு நிறைய உண்டு.

சுதந்திரத்திற்காகக் கடுமையாகப் போராடிய உங்கள் போராளிகளுக்கு சிங்கள, தமிழ், முஸ்லிம்களுடைய சுதந்திரத்தைப் பறிக்கவோ அவர்களை அடிமைப்படுத்தவோ உரிமை இல்லையென்பதை நம்ப வையுங்கள்.

எனது அண்மைக்கால வெளிநாட்டு விஜயத்தின்போது இது சம்பந்தமாகப் பல தமிழ் மக்களுடன் கருத்துப் பரிமாறிய வேளையில், இந்த விடயத்தை முன்வைத்தபோது ஒருவரேனும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. இவ் ஆலோசனையை இந்த நாட்டு மக்களில் அநேகமானோர் வரவேற்பார்களென நான் உறுதியாக நம்புகிறேன்.

நீங்கள் முன்வரும் பட்சத்தில் இவ் விடயத்தில் எனது முழு ஒத்துழைப்பும் உங்களுக்கு உண்டு. இத் தீர்வு அமுல்படுத்தப்படும் வேளையில் உங்கள் போராளிகளின் எதிர்காலம் சம்பந்தமாகவோ அல்லது வேறு ஏதாவது பிரச்சினைகள் எழும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட அனைவரின் ஒத்துழைப்போடும் புரிந்துணர்வோடும் சர்வதேச சமூகத்தின் ஆதரவோடும் அவற்றைப் பேசித் தீர்த்துவைக்க முடியும். நன்றி.

இப்படிக்கு அன்புள்ள
வீ. ஆனந்தசங்கரி,
தலைவர்,
தமிழர் விடுதலைக் கூட்டணி.

**மன்னவரும் சின்னவரும் அடுத்த வாரம் வருவார்கள்**

# இனி இல்லை இடைவேளை

அந்தக் கணவன் மனைவிக்குத் திருமணமாகி, ஏறத்தாழப் பத்தாண்டுகள் ஓடிவிட்டன. அதன் பின் இரண்டு பேருக்கும் இடையிலே ஏதேதோ பிரச்சினை. "உன்னோடு மனுஷன் குடித்தனம் பண்ண முடியுமா?" என்று கணவன் அடிக்கடி இடித்துச் சொல்லிக்கொண்டிருந்தார். "உன்னோடு ஒருத்தி வாழ முடியுமா? ஏதோ நான்தான் வேறு வழியில்லாமல் குப்பை கொட்டிக் கொண்டிருக்கிறேன்" இது மனைவியின் பதிலடி.

"இனியும் உன்னோடு என்னால் வாழ முடியாது" இது கணவன்.

"போதும். உன்னிடமிருந்து நான் விலகிப் போய்விட்டால் போதும். நிம்மதிதான் எனக்கு" இது மனைவி. இப்படி இரண்டு பேருமே மனத்தளவில் பிரியத் தயாராகி விட்டார்கள்.

ஒரு நண்பர், "நன்றாகத்தானே இருந்தார்கள். ஏன் இவர்களுக்குள் இப்படித் திடீரென்று மோதல்...?" என்று வருத்தப்பட்டு, "நான் ஸ்வாமிஜியிடம் உங்கள் இரண்டு பேரையும் அழைத்துக்கொண்டு போகிறேன். அவரிடம் அரை மணி நேரம் பேசுங்கள். நிச்சயம் ஒரு தெளிவு கிடைக்கும். நீங்கள் இரண்டு பேரும், பிரிந்துவிடுவது என்ற உங்கள் நினைப்பையே மாற்றிக்கொண்டு விடுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது" என்று அவர்களிடம் திரும்பத் திரும்பச் சொல்ல, அவர்களும் என்னைச் சந்திக்க ஒப்புக்கொண்டனர். அவர்களை அழைத்துக்கொண்டு வந்தார் நண்பர்.

அவர்களுடன் பேசினேன். திருமணமாகி, முதல் மூன்று, நான்கு வருடங்கள் மிகவும் அன்னியோன்னியமாகவே அந்தக் கணவனும் மனைவியும் வாழ்ந்திருக்கிறார்கள். அதன் பின் சிறு சிறு பிரச்சினைகள். ஒரு கட்டத்தில், ஏதாவது ஒரு அற்ப விஷயத்தில் ஆரம்பித்து, குப்பைகளை வாரி இறைத்துக் கொள்ளுவார்கள். அடுத்த சில நாட்களுக்கு இரண்டு பேருக்கும் இடையில் பேச்சுவார்த்தையே இருக்காது.

நாளடைவில் இது இன்னமும் சீரியஸாகிப் போனது. இன்று தங்களுக்கிடையிலான உறவையே சட்டபூர்வமாக முறித்துக்கொள்ள இரண்டு பேரும் தயாராகி விட்டார்கள்.

நான் அமைதியாக அவர்கள் கூறியவைகளைக் கேட்டுக்கொண்டிருந்தேன். பின்பு நான் அவர்களை நோக்கி, "திருமணமான புதிதில் கூட இது போல்தான் மனஸ்தாபம் வருமா? நாட்கணக்கில் இரண்டு பேரும் பேசிக்கொள்ளமாட்டீர்களா? இல்லையே! ஆரம்பத்தில், இரண்டு பேரும் மற்ற எந்தத் தம்பதியையும் போல் சுமுகமான உறவுடன், சந்தோஷமாகத்தானே இருந்தீர்கள். அந்தக் காலகட்டத்தில் நீங்கள் எப்படி நடந்துகொண்டீர்கள்? ஒருவருக்காக இன்னொருவர் என்னென்ன செய்தீர்கள்? சண்டை வந்தபோது, அதை வளரவிடாமல் தடுக்க என்ன பண்ணினீர்கள்? என்று இரண்டு பேரும் ஒன்றாக அமர்ந்து யோசித்துப் பாருங்கள்; அந்த நாட்களை இரண்டு பேரும் அசை போடுங்கள்.

"இப்போது ஏன் அது போல் நம்மால் நடந்துகொள்ள முடியவில்லை என்பது பற்றி இரண்டு பேரும் முதலில் தனித்தனியே யோசித்துப் பாருங்கள். உங்கள் மனதில் தோன்றும் எண்ணங்களை இரண்டு பேரும் பகிர்ந்துகொள்ளுங்கள். அதைப் போலவே, ஏன் இப்போது நம்மால் நடந்துகொள்ள முடியாதா? என்று உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள். முடியும். மறுபடியும் அந்தநாள் வாழ்க்கையை வாழ்ந்து காட்ட நம்மால் முடியும் என்று நம்பிக்கையுடன் உங்களுக்குள்ளே சொல்லிக்கொள்ளுங்கள். அதை உங்கள் பார்ட்னரிடம் வாக்குறுதியாய்க் கொடுங்கள். அதன் பின், கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற சின்ஸியராக முயற்சி செய்யுங்கள்" என்றேன்.

நான் பேசி முடித்தவுடன், அதைக் கேட்ட



இரண்டு பேர்களது முகங்களிலும் ஒரு புத்துணர்ச்சியைக் காண முடிந்தது. சமீபத்தில் அந்தத் தம்பதியைப் பார்த்தபோது, அவர்களைத் தக்க சமயத்தில் என்னிடம் அழைத்து வந்து, ஆலோசனை கிடைக்க வழிசெய்து, அவர்களது திருமணத்தை முறிவிலிருந்து காப்பாற்றிய நண்பரை 'தக்க நேரத்தில் கடவுள் அனுப்பி வைத்த உதவிக் கரம்' என்று வர்ணித்தார்கள்.

தாம்பத்திய வாழ்க்கையின் சந்தோஷமான காலகட்டத்தை மீண்டும் உயிர்ப்பித்துக்கொள்ளுவது என்பது மிகவும் பயனுள்ள ஒரு டெக்னிக். மணவாழ்க்கை டல் அடிப்பது போல உணரும் தருணங்களில் எல்லாம், அந்த டெக்னிக்கை செயற்படுத்துங்கள். கைமேல் பலன் கிடைக்கும்.

திருமணமான பெண்களை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். முதல் பிரிவினர் விஷுவல் பிரிவினர். இவர்களுக்கு விஷுவலான விஷயங்கள்தான் சந்தோஷத்தைக் கொடுக்கும். உதாரணமாக கணவன், மனைவி இரண்டு பேரும் வெளியே போவது. அது ஹோட்டல், பார்க், பீச், சினிமா, கோவில், நண்பர்கள் வீடு, வெளியூர், வெளிநாடு இப்படி எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். தவிர, அவ்வப்போது ஏதாவது வாங்கிக் கொடுத்தால் இந்த வகைப் பெண்கள் சந்தோஷமடைவார்கள்.

ஒரு முழம் பூ முதல் பல்லாயிரம் ரூபாய் கொடுத்து வாங்கிய நகைகள் வரை எப்படிப்பட்ட பரிசாகவும் அது இருக்கலாம். வெறும் வார்த்தைகளால், "ஐ லவ் யூ" என்றோ "நீ தான் எனக்கு எல்லாம்" என்றோ சொன்னால், "வெறுமனே வார்த்தைகளில் சொல்லி என்ன பிரயோசனம்? அதைச் செயலில் காட்டினால் தானே" என்று கூறுவார்கள்.

இரண்டாவது வகையினர், வார்த்தையில் எதிர்பார்க்கிற டைப். ஆசையோடு, பட்டுப் புடைவை, நகை என்று ஆயிரக் கணக்கில் கொடுத்து வாங்கி வந்து கொடுங்கள். ஜாலியாய் வெளியில் அழைத்துக்கொண்டு போங்கள். அவர்களுக்குச் சந்தோஷமாய் இருந்தாலும், அடி மனதில் ஏதோ ஒரு குறை இருக்கும். அது என்ன என்று அடி மனதை உற்று நோக்கினால் புரிந்துவிடும்.

எதையும் வார்த்தைகளில் எடுத்துச் சொல்லி, நம் மனதின் உள்ளே இருப்பதை அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். பரிசுகள் கொடுத்தால் கூட, "இதெல்லாம் வேஸ்ட்" என்றோ, "இதெல்லாம் எனக்கு வேண்டாம். ஆசையாய் இரண்டு வார்த்தையில் உங்கள் மனதில் இருப்பதை என்னிடம் எக்ஸ்பிரஸ் பண்ணுங்கள். அதைத்தான் நான் எதிர்பார்க்கிறேன். நீங்கள் அன்போடு, 'ஐ லவ் யூ டார்லிங்' என்று சொல்கிறபோது எனக்குக் கிடைக்கிற சந்தோஷத்துக்கு முன்னால், இந்தப் பரிசுகள் எல்லாம் ஒன்றுமே இல்லை" என்பார்கள்.

மூன்றாவது டைப் பெண்கள் எப்படிப்பட்டவர்கள் தெரியுமா? அவர்களுக்குப் பரிசுகளும் வேண்டாம், வார்த்தைகளும் வேண்டாம். ஸ்பரிசம் போதும், அவர்களை சந்தோஷப்படுத்துவதற்கு. அன்போடு அவர்களை அரவணைத்து, ஆறுதலாய் அவர்கள் தலைமுடியை வருடிக்கொடுத்தால் போதும், ரொம்ப மகிழ்ச்சியடைவார்கள். தன் கணவர், தன்னை எவ்வளவு ஆழமாகக் காதலிக்கிறார் என்று. அவர்களைச் சந்தோஷப்படுத்துவது காதல்தான்; காமம் இல்லை என்பதையும் புரிந்துகொள்ளுங்கள். உங்கள் மனைவி இந்த மூன்று பிரிவுகளில் எந்தப் பிரிவைச் சேர்ந்தவர்? அதன்படி அவரை மகிழ்ச்சியடையச் செய்யுங்கள்.

மூன்று வகை என்பது பெண்களுக்கு மட்டுமில்லை. ஆண்களுக்கும் இது பொருந்தும். உங்கள் கணவர் எந்த டைப்? அவரை நீங்கள் வெளியில் அழைத்துப் போக வேண்டிய அவசியமில்லை. அவர் வெளியே போகும்போது, சுணக்கமில்லாமல் கூடச் செல்லுங்கள். அல்லது வார்த்தைகளால் வருடுங்கள். அல்லது உங்கள் ஸ்பரிசம் உங்களுக்குக் கைகொடுக்கும்.

**நன்றி : சுவாமி சுகபோதானந்தா.**

(தொடர்ந்து வரும்.........)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.91க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

பி. யசோதரன், இல. 52/2, பாலவிநாயகர் கோவில் வீதி, தவசிக்குளம், வவுனியா.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. என்.எம் பாரூக், தெஹிதெனிய மடிகே, ஹதரலியத்தை.
2. கே. இராஜகோபால், கந்தசுவாமி கோயிலடி, வட்டுக்கோட்டை.
3. நா. ஹேமானந்தி,107, பாடசாலை வீதி, சேனைக்குடியிருப்பு -01, கல்முனை.
4. திருமதி. அமுதா ரமேஸ், 91/1, மேபீல்ட் லேன், கொட்டாஞ்சேனை.
5. திருமதி ஜெயமணி ஜேசுதாசன், 91/1, மேபீல்ட் லேன், கொட்டாஞ்சேனை.
6. செல்வன். க. நிரஞ்சன், 22, பிரதிபிம்பராம வீதி, களுபோவில.
7. கமால்தீன் வுல் ஆஷாத், 282, ஓடாவியார் வீதி, ஏறாவூர் -02.
8. செல்வி சலுஜா முருகையா, கலையகம், பெரிய கல்லாறு, கல்லாறு.
9. அ. ஷிரோமி லக்ஷாந்தி, இனிக்கோ, புதுமுகத்துவாரம், கல்லடி, மட்டக்களப்பு.
10. பா. ஜெயபாலராசா, பொலிஸ் அலுவலகம், வவுனியா.

## குறுக்கெழுத்துப் போட்டி 93

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | |
| 10 | | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | | 17 |
| 18 | | 19 | | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 |

**இடமிருந்து வலம்**

1. வரவு செலவுத் திட்டத்தில் இதற்கு அதிக நிதி ஒதுக்கப்படுகிறது.
6. உடன் பிறப்புகளில் ஒன்று.
11. முன்னர் திரவப் பொருட்களுக்காக இதனைப் பயன்படுத்தினார்கள். இப்போது அதன் இடத்தை பிளாஸ்ரிக் பிடித்துள்ளது (குழம்பியுள்ளது).
14. சிறிய குளம். (குழம்பியுள்ளது).
21. காதில் அணியும் ஆபரணம் (குழம்பியுள்ளது).

**மேலிருந்து கீழ்**

1. காடேகிய இராமனிடம் பரதன் விரும்பிக் கேட்ட பொருள்.
2. இதை "ஓர் அரக்கன்" என்று சொல்வர் (தலைகீழாயுள்ளது).
3. இது ஓர் மருந்து. தாம்பூலத்தோடு சேர்த்துச் சுவைப்பர். (குழம்பியுள்ளது)
4. அறு சுவையில் ஒன்று (குழம்பியுள்ளது).
13. ஒரு பறவை (குழம்பியுள்ளது).

## குறுக்கெழுத்துப் போட்டி 91 விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 க | 2 லை | 3 ம | 4 க | 5 ள் |
| 6 தி | 7 கொ | | 8 ளி | |
| 9 ர் | | 10 இ | 11 ரு | 12 தி |
| 13 கா | 14 ம் | 15 த | | 16 ம |
| 17 ம | 18 த | 19 ர | 20 ம் | 21 க |
| 22 ம் | | 23 ம் | | 24 ம் |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 02.11.2004 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-93
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.


# ராதா ரெக்ஸ்ரைல்ஸின்

## வண்ணச் சேலை பரிசுப் போட்டி

எல்லா விதமான, ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என எல்லோருக்கும் பிடித்தமான ஆடை அணிகளின் அட்சய பாத்திரம். எல்லாத் தெரிவுகளும் ஒரே கூரையின் கீழ்.

**RATHAA TEXTILE**
377, 379A, Galle Road, Wellawatta, Colombo-06.
(Opposite of Delmon Hospital) Tel: 2364792

Branch:
No. 33,37th Lane,
Colombo-06.
☎: 2364727

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

67

பெயர்:.........................
முகவரி:.........................
.........................
தொழில்: .........................
கையொப்பம்: ...............

உண்மை நேர்மை வெளிப்படைத் தன்மை



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே வண்ணச் சேலை பரிசு வழங்கப்படும்.
★ மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 02-11-2004

அனுப்ப வேண்டிய முகவரி-
'ராதாவின் வாரம் ஒரு வண்ணச்சேலை'
தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772,
கொழும்பு.

**இந்த வாரம் யாருக்கு சேலை?**
**திருகோணமலை வாசகிக்கு அதிர்ஷ்டம்!** 65

இவ்வாரம் சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

**வி. பானுமதி பார்மிளா.**
அலஸ் தோட்டம் ,இல.75, சாம்பல்தீவு, திருகோணமலை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம். அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?! இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்புகொண்டு பரிசினைப் பெறலாம்.

# இது(வும்) காதல்

"சுதா....நீயா இப்படி மாறிட்டே. என்னால நம்பவே முடியல.... உண்மையிலேயே நீ காதலிக்கிறியா.... உன்னுடைய தகுதி என்ன...... உன் ஆளுடைய லெவல் என்ன...... ஏணி வைத்தாலும் எட்டாது. டேய்...சத்தியமாவே நீ அவளை விரும்புறியா? அவளும் உன்னை நேசிக்கிறாளா?'' ஆகாஷ் அவனை விடுவதாக இல்லை......

"நானும் ஸ்வேதாவும் பழகிறது உண்மை. அவளும் என்னை நேசிக்கிறது நிஜம். சத்தியம், நீ நினைக்கிற மாதிரி அந்தஸ்து பார்க்கிற பொண்ணு அவ இல்லடா.......காதல்ல ஜெயிக்க ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சி நடந்துக்கணும். நல்ல மனசு இருக்கணும்.'' யதார்த்தமாகக் கூறினான் சுதாகர்.

"ஆகாஷ்... உடனே ஆரம்பிச்சுட்டியா உன் தத்துவத்தை. இதே டயலாக்கை எத்தனை தடவைதான்டா திருப்பித் திருப்பி பேசுவீங்க. எனக்கென்னமோ இது...'' என்று தொடர்ந் தவனைப் பேசவிடாமல் தடுத்தான் சுதாகர்.

"வேண்டாம் ஆகாஷ். ப்ளீஸ். எதுவும் பேசிடாதே.'' இதைக் கேட்ட ஆகாஷ் மனமும் இளகிப்போனது.

ஆண்மையின் இலட்சணங்களைத் தன்ன கத்தே கொண்டவன் சுதாகர். வசதியான குடும்பம். கை நிறையச் சம்பளத்துடன் வங்கியில் தொழில். ஆனால் ஸ்வேதாவோ சற்றே வசதி குறைந்தவள். சுமாரான அழகு. சுதாகரை விடவும் நிறத்திலும் சற்று குறைந்தவள். இவ்வருடம் உயர்தரப் படிப்பை முடிக்கவிருப்பவள்.

இவர்களின் வீடுகள் ஒரே தெருவில்தான் இருந்தன. சிறுவயதிலிருந்தே ஸ்வேதா மீது அவனுக்கு நிறைய விருப்பம் இருந்தது. தானே சென்று அவளுடன் பேச்சுக் கொடுத்தாலும் விலகி விலகிப் போகும் அவளை அவன் மேலும் நேசிக்க ஆரம்பித்தான். தன்னை விட அவள் பணத்தாலும் நிறத்தாலும் குறைந்தவள் என்ற எண்ணம் சுதாகரை எதுவும் செய்ய வில்லை. அவளது அடக்கமான, மென்மையான குணம் அவனுக்கு மிகவும் பிடித்துப்போனது. பல வருடங்களாக அவளை ஒருதலையாகக் காதலித்தான். தன் உண்மைக் காதலால் அவள் இதயத்தையும் வென்றான்.

ஸ்வேதாவின் மிக நெருங்கிய தோழிகள் என்று இல்லாவிட்டாலும் பவானியும் கவிதாவும் அவள் காதலைப் பற்றித் தெரிந்தே வைத்திருந்தனர்.

"ஏய் பவானி...நீ சுதாகரைப் பார்த்திருக் கிறியா?''

"ம்...கண்டிருக்கேன்...''என்றபடி பவானியின் முகத்தை நோக்கினாள் கவிதா.

"இவ அழகென்ன அவன் வடிவென்ன... எப்படித்தான் இது ரெண்டுக்கும் காதல் வந்துச்சோ...''தோளைக் குலுக்கிக்கொண்டாள்.

"அது சரி...தான் அழகா இல்லாவிட்டாலும் பிகர் மட்டும் லட்சணமா இருக்கணும்னு நினைக்கிற ஆம்புளங்களுக்கு மத்தியில இந்த சுதாகர் ரொம்ப வித்தியாசம்தான்.''

"அதென்டால் உண்மைதான். ஆனால் இந்தக் காதல் அவன் மனசுல கடைசி வரைக்கும் மாறாம இருக்கணுமே.''

"ஆமா பவானி. ஸ்வேதா பாவம். அவளைச் சுத்திச் சுத்திக் காதலிச்சது அவன்தான். ஆனால், ஸ்வேதா இப்போ அவன் மேல ரொம்பப் பிரியமா இருக்கா. அவங்க ரெண்டு பேரும் கட்டாயம் சேர்ந்து வாழணும்...''

பல மாதங்கள் உருண்டோடின. பள்ளி வாழ்க்கை முடித்து நண்பர்கள் அனைவரும் பிரிந்து சென்றுவிட்டனர். உற்ற தோழிகளுடன் மட்டுமே கடிதத் தொடர்பும் தொலைபேசி உரையாடலும் இடைக்கிடை தொடர்ந்து கொண்டிருந்தது.

பவானிக்குத் திருமணம் நிச்சயமாகி இருந்தது.

-நஸீஹா சம்சபாத், ஏத்தாலை.



இன்னும் ஒரு மாதமே இருந்தது திருமணத்துக்கு. திருமண அழைப்பிதழ்களுக்கு யோசித்து யோசித்து பெயர் எழுதிக்கொண்டிருந்தாள். தனது நண்பர்களின் பெயர்களை எல்லாம் எழுதி முடித்தாள். மிகவும் மகிழ்ச்சியுடன் இருந்தாள்.

நாட்கள் வாரங்களாகின. இச் சந்தர்ப்பத் தில்தான் அந்தத் துயரமான செய்தி அவள் காதுகளுக்கு எட்டியது.

'சுதாகர் ஸ்வேதாவை ஏமாற்றிவிட்டானாம். வேறொரு பெண்ணைக் கல்யாணம் பண்ணி குழந்தையும் இருக்காம்.' இதைக் கேள்விப்பட்ட பவானிக்கு மயக்கம் வருவது போல் இருந்தது. அப்படியென்றால் ஸ்வேதா.....? அவள் கதி....? மனம் பதைபதைத்தது. இப்போதே அவளைப் பார்க்கத் துடித்தாள். தன் தோழி கவிதாவையும் துணைக்கு தன் அப்பாவையும் அழைத்துக் கொண்டு ஸ்வேதா வீட்டுக்கு மறுநாளே புறப்பட்டாள்.

அவர்கள் ஸ்வேதா வீட்டை அடைந்தபோது காலை பதினொரு மணி இருக்கும். வீட்டைப் பார்த்தபோது மூவருக்கும் வியப்பாக இருந்தது. ஏனெனில் அது பெரிய பங்களாவாக இருந்தது.

உள்ளே சென்றபோது அவர்கள் மூவரையும் கண்ணீருடன் வரவேற்றாள் ஸ்வேதா. பின் நிதானமாக "ரொம்ப சந்தோசமா இருக்கு, நீங்க வீடு வந்தது'' என்று கூறியபடியே கன்னங்களில் வழிந்திருந்த ஆனந்தக் கண்ணீரைத் துடைத்தபடியே மிகவும் சிரமப்பட்டு உட்கார்ந் தாள் நிறைமாதக் கர்ப்பிணி ஸ்வேதா.

"ஸாரி எங்க கல்யாணத்துக்கு உங்களைக் கூப்பிடல....''இவள் இவ்வாறு பேசுவது நண்பிகள் இருவருக்கும் மேலும் மேலும் வியப்பைக் கொடுத்தது. மனதின் சந்தேகத்தை எப்படிக் கேட் பது என்று யோசித்தாள் பவானி.

"ஆமா...ஸ்வேதா.....உன்னுடைய கணவர் எங்கே?'' என்று கேட்கவும் சுதாகர் அவ்விடம் வரவும் சரியாக இருந்தது.

"ஸ்வேதா....இவங்க.....என்னுடைய காலேஜ்மேட்ஸ் '' என்று உற்சாகமாகப் பதிலளித்த ஸ்வேதாவைப் பார்த்து மனநிறைவு கொண்டனர் நண்பிகள்.

# எரிவு......

"இந்த மனுசி வெற்றிலையைத் துப்பித் துப்பி வீடெல்லாம் அசிங்கம் பண்ணிக்கிட்டு.....''

மாமியின் காதில் விழாதபடி மனைவியிடம் சொல்வேன்.

எனக்கும் தாய் மாதிரி. மாமி நல்லவ.

இன்று வரைக்கும் மனம் புண்படும்படி நான் எதுவும் பேசியது கிடையாது.

இந்த வெற்றிலையைச் சப்பிச் சப்பித் துப்புகிற அழகுதான் சகிக்க முடியவில்லை.

மாமியை அன்பாக நடத்தினால்.

தாயை மருமக்கள் அன்பாக நடத்துவார்கள்.

என் தாயும் என் மனைவி மீது மிகவும் அன்பாக இருக்கிறாங்க.

இரவு முழுவதும்...."நெஞ்செரிவு நெஞ்செரிவு...,''என்று சத்தமாக அழுதார் மாமியார்.

"இன்னும் வெற்றிலை போடுங்க...''என நெஞ்சைத் தடவி விட்டாள் மனைவி.

பாவம் மாமி. சுருண்டு சுருண்டு அழுதா.

எனக்குப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

உயிரைப் பிழிகிற ஓலம் அது.

"புற்றுநோய் வரும்...''என்று பயங்காட்டியும் எதுவும் பலன் காட்டவில்லை.

மாமி வெற்றிலை போடுவதை நிறுத்தவே இல்லை.

மனைவியும் எவ்வளவோ சத்தம் போட்டாள்.

நான் ஒரு வார்த்தை கூட இதைப் பற்றிப் பேசுவதே கிடையாது.

நான் சிகரெட் பிடிப்பதை நிறுத்தி ஆறு வருடமாகிறது.

ஆரம்பத்தில் மனைவிக்குத் தெரியாமல் 'களவில்' புகைப்பதுண்டு. இப்பொழுது அதுவும் இல்லை. மாமி நெஞ்செரிவால் வைத்த ஒப்பாரி இன்னும் என் காதில் ஒலித்துக்கொண்டேயிருக்கிறது...

பழக்கடை நண்பன் சமன் வெற்றிலை போடுவான். ஆசையாக இருந்தது. கேட்டேன். மடித்துத் தந்தான். போட்டேன். பழக்கமில்லாததனால் குமட்டிக்கொண்டு வந்தது. அந்த மணம் பிடிக்கவில்லை. வாந்தி எடுத்தேன். இரண்டு மூன்று நாள் கழித்து....இன்றைக்குப் போட்டே தீருவதென்று தொடங்கி....இன்று ஆறு மாசமாகிறது.

பழக்கமாகிவிட்டது.

பல்லெல்லாம் காவி நிறமாகிவிட்டன. புகையிலையையும் போட்டு வெற்றிலையை மெல்லுகிறபோது இருக்கிற சுகமே தனி! எனது இரவுகள் 'வெற்றிலை'யில் கழிகின்றன....நேற்றிரவு... "பானு... உம்மா... பானு... அல்லாஹ்... ரியாட்... நஸ்லியா... பானு....

பானு.....தாங்க முடியல்ல....

ஆ....ஊ.....ஆ...நெஞ்செரிவு....நெஞ்செரிவு...அல்லாஹ்'' எரிவு. என் நெஞ்செரிவு. மரண பயத்தை ஊட்டிய எரிவு. கட்டாயம் மாமி கூட என்னைத் திட்டுவா.

இப்போதெல்லாம் எங்கள் வீட்டுத் திண்ணை சுத்தமாக இருக்கிறது. ஏன் பல்லும்தான்.

கிண்ணியா அமீர்அலி, தெஹிவளை.



# மலர்ந்தது புன்னகைப் பூ

காலைக் கதிரவன் தன் பொற்கதிர்களைப் பூமித்தாய் மீது பரப்பிக்கொண்டிருக்கிறான். சேகர் வீட்டு சேவலோ விடிந்துவிட்டது என்பதைப் பறைசாற்றும் முகமாகக் கூவியது. திடுக்கிட்டு எழுந்த திவ்யா திண்ணையில் இருந்த கடிகாரத்தை அவதானித்தவளாக தோட்டத்தை நோக்கிச் சென்று காய் பறிப்பதில் ஆரம்பித்து தன் காலைக் கடமைகளை நிறை வேறியவளாக தனது மகன் தினேஷை எழுப்புகிறார்.

"தினேஷ்.....தினேஷ்....எழும்பு....ஸ்கூலுக்கு போகணும் இல்ல.''

"குட் மோணிங் மம்மி'' என்று கூறிக் கொண்டு தன் காலைக் கடமைகளை நிறைவேற்றி அம்மாவின் ஆசி பெற்று தினேஷ் பாடசாலை நோக்கி சென்றுகொண்டிருந்தான். ஆனால் திவ்யாவின் எண்ண அலைகளோ பின்னோக்கிச் சென்றுகொண்டிருந்தன.

பெற்றோருக்கு ஒரே ஒரு மகளாகப் பிறந்த திவ்யா மிகவும் அன்பாகவும் ஆதரவுடனும் வளர்ந்துகொண்டிருந்த காலம் அது. அன்றுதான் திவ்யாவின் ஆதரவே அநாதரவானது. திவ்யா பாலர் வகுப்பில் பயிலும் காலம் அது. திவ்யா பொம்மைகளை வைத்து விளையாடிக்கொண்டிருந்த வேளை தொலைபேசி மணி அலறியது. திவ்யாவின் அம்மா "ஹலோ! யார் பேசுறீங்க'' இவ்வாறு கேட்டு சில வினாடிகளில் மயங்கி வீழ்ந்தாளோ, மடிந்தாளோ, அதை அறியாத திவ்யா "மம்மி.....மம்மி...''என்று அழுதாள். ஆனால் திவ்யாவின் அம்மா எழும்ப வில்லை. அயல்வீட்டு அர்ச்சனா அக்கா வந்து எழுப்பியபோதுதான் இறந்துவிட்டார் என்பது புரிந்தது. சற்று நேரத்தில் திவ்யாவின் அப்பாவின் சடலம் பெருந்திரள் மக்களோடு வீட்டை நோக்கி வந்துகொண்டிருந்தது. உயிருக்குயிராய் அன்பு வைத்திருந்த கணவன் இறந்ததைக் கேட்ட அம்மா அதிர்ச்சியடைந்து இறந்துவிட்டார். சிறகிழந்த பறவையாக திவ்யாவின் மழலை மொழி "மம்மி....மம்மி...டடி....டடி....''என்றே அழுது கொண்டிருந்தது. பெற்றோர் ஒரே நாளில் விண்ணுலகம் சென்றதால் மண்ணுலகில் திவ்யா அநாதையாக அப்பாவின் தங்கையிடம் வளர்ந்தாள். குடிபோதைக்கு அடிமையான அவளது அத்தானை மணமுடித்தாள் திவ்யா.

அன்று திவ்யாவின் பிறந்த தினம். மிகவும் மகிழ்ச்சியுடன் திவ்யா தோட்டத்துக் காய்கறி களைச் சமைத்துவிட்டு அலுவலகத்தில் இருந்து கணவன் வருவார் என்று வழியோரம் விழி வைத்துக் காத்திருந்தாள். ஆனால், மாலை 6.00 மணியாகியும் கணவன் வரவில்லை. கணவனின் நண்பர் ராஜுவிற்கு தொலைபேசி எடுத்தாள். ஆனால் அங்கிருந்து வந்த பதில், அலுவலகத்தில் இருக்கும்போது நெஞ்சுவலி வந்ததால் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனார்களாம் என்று கூறவே, அடியற்ற மரம் போல் சாய்ந்தாள் திவ்யா. நிறைமாதக் கர்ப்பிணியாகிய திவ்யா மிகவும் வேதனையுடன் வைத்தியசாலையை அடைந்தாள். அங்கு கணவன் எதுவும் அறியாதவராய் கட்டிலில் உறங்கி இருந்தார். திவ்யா வைத்தியரிடம் சென்று விசாரித்தபோது அவர் இன்னும் இரண்டு நாளைக்கு இருப்பதே சந்தேகம். உயிர் வாழணும்னு சொன்னா நாளைக்கு ஒபரேசன் பண்ணிறதிற்கு இரண்டு லட்சம் ரூபா பணம் வேணும்'' என்று கூறினார். இதனைக் கேட்ட திவ்யா உடனடியாக வீட்டை நோக்கிச் சென்று தனது ஆபரணங்களை விற்று மறுநாள் அறுவைச் சிகிச்சைக்குப் பணம் சேர்த்தாள். ஆனால், அன்று திவ்யாவிற்கும் சுகவீனம் வந்ததன் காரணமாக அவளும் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டாள். திவ்யாவின் கணவன் குடிபோதைக்கு அடிமையானவர் ஆகையால் உயிர் வாழ முடியாமல் அவரின் கண் மூடியது. திவ்யாவிற்கு அன்று குழந்தை பிறந்தது.

இவ்வாறாக பல மாதங்கள், வருடங்கள் என கழிந்தன. திவ்யா தினமும் தோட்டத்தில் காய்கறி பறித்து விற்று தனது மகன் தினேஷை படிக்க வைத்தார். ஆனால் அவளது வாழ்க்கை கல்லில் நார் உரிப்பது போலத்தான் இருந்தது.

சுய நினைவை இழந்து தனது கடந்த கால வாழ்வை அசைபோட்டுக்கொண்டிருந்த சமயம் "மம்மி.....மம்மி...''என்று அழைக்கும் சத்தம் கேட்டது. சுயநினைவுக்கு வந்த திவ்யா "தினேஷ் ஸ்கூல் முடிந்து வந்திட்டியா?.......''என்று கேட்கவே, அதற்கு தினேஷ் "ஆம் அம்மா. எல்லா நண்பர்களும் எனக்கு அப்பா இல்ல என்று சொல்லி கேலி பண்ணுறாங்க'' என்று அழுதுகொண்டு கூறினான் தினேஷ்.

"இல்லடா கண்ணு. நான் அம்மா இருக்கிறன் இல்ல. நீ படிச்சு டொக்டரா வரணும்'' என்று அன்புடன் தலையைத் தடவினாள் திவ்யா. ஆனால், அப்பா இல்லை என்ற சொல்லை நாளுக்கு நாள் தினேஷ் உச்சரிப்பதைக் கேட்கின்ற திவ்யாவிற்கு தாங்க முடியாத வேதனையாக இருந்தது.

வாரங்கள் மாதங்களாகி மாதங்கள் வருடங்களாகி உருண்டோடின. தினேஷ் மருத்துவப் பட்டதாரி இறுதிப் பரீட்சை முடிவு வெளியாகும் நாள். திவ்யா கடவுளை வணங்கிக்கொண்டிருந்த சமயம், அயல்வீட்டு அர்ச்சனா அக்கா "தினேஷ் டொக்டர் பட்டம் பெற்றுவிட்டானாம்'' என்று சொன்னதைச் செவியுற்ற திவ்யா தினேஷை தேடினார். தினேஷ் பேரின்பத்துடன் "அம்மா நான் பாஸ் பண்ணிட்டேன்'' என்று கூறி முத்தமிட்டான். அன்றுதான் திவ்யாவின் முகத்தில் மட்டுமல்ல வாழ்க்கையில் புன்னகைப்பூ மலர்ந்தது.

(யாவும் கற்பனை)

காத்தநகர் றிப்கா.



*படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.*

# சிந்தித்துப் பார்க்க...

## இறைவனிடம் சரணடையும் போது மனிதன் தூயவனாகிறான்

* வாழ்க்கை என்பது நேரம். நேரத்தை வீணாக்குவது வாழ்க்கையையே வீணாக்கு வதாகும்.

* இன்னொருவரின் கண்டனத்தை உங்கள் சுட்டுவிரல் சுட்டிக்காட்ட முன் உங்கள் விரல் நகத்தில் எவ்வளவு அழுக்குப் படிந்துள்ளதெனப் பாருங்கள்.

* இப்போது பேராசையை வெற்றி கொள்ள முயற்சியுங்கள். ஏனெனில் 'மனிதன் முழுமை அடைய, அவனுடைய பேராசை இன்மைஅடைகிறது.

* மனிதன் இறைவனிடம் சரணடையும் போது தனது மனதை இறைவன்பால் திருப்பி, அவருடைய அறிவுரைகளுக்கமைய செயல் புரிகின்றான்

* விண்மீன்களையும், கடலின் ஆழத்தையும் நன்றாக ஆராய்கின்றோம். நாங்கள் யார்? இங்கிருக்கும் காரணம் யாது? என்பது பற்றி எவ்வளவு அறிந்துள்ளோம்?

* சிலவேளைகளில் நாங்கள், பிறர் எப்படி இருக்க வேண்டும் என்று விரும்புகின் றோமோ, அப்படியே அவர்கள் இருப்ப தற்காக, அவர்களை மாறும்படி வற்புறுத்து கின்றோம்.

* சிலவற்றை விளங்கிக் கொள்வதற்கு உங்களுக்கு ஞானம் தேவை. ஆனால் உணர்வதற்கு உங்களுக்கு அநுபமே தேவை.

* எதையுமே செய்யாமல் இருந்து பழகி விட்டால், சுறுசுறுப்பாய் இருப்பதற்கு நேரம் இராது.

* உயர்ந்த முன்னேற்றமான மனிதனை விலங்கினின்றும் வேறுபடுத்துவது யாது? அவனுடைய எண்ணங்களே.

**"இன்றைய நாளுக்கான நல்ல எண்ணங்கள்" என்ற நூலிலிருந்து....**

---



# "மெல்லத் திறந்தன விழிகள் - அதைச் சொல்லத் துடித்தன இதழ்கள்"

**தருவது முழடில்யன்**

அருகில் சுருண்டு கிடந்த கனிகாவைப் பார்த்தான் மாதுலன். கல்யாண வீட்டுச் சந்தடிகளில் நிறையக் களைத்துப் போயிருக்கிறாள் என்று தெரிந்தது.

அவள் தலைக் குழல்களும் சேலையும் வெகுவாகக் கலைந்திருந்தன. அந்தக் கோடிப் புடைவை அவள் சுதந்திரத்தை வெகுவாகக் கட்டுப்படுத்தி, மடமடப்புடன் அவளைச் சுற்றியிருந்தது.

திரும்பிக் கால்களை மடக்கி, கைகளை முழங்கால்களுக்குள் மறைத்துக் குடுகிப் படுத்திருந்தாள் கனிகா. வியர்வைத் துளிகள் பூத்த நெற்றியுடனும் கலைந்து அலையும் முன் கேசத்துடனும் மிக அழகாகத் தெரிந்தாள்.

அந்த வியர்வைத் துளிகளை உதடுகளால் ஒற்றி எடுத்துவிடும் ஆவலில் குனிந்தான். பின்னர் அவளைக் கலைத்துவிட வேண்டாம் என்று நினைத்தவனாக விசிறியை எடுத்து அவள் முகத்திற்கெதிரே மெல்ல விசிறினான்.

பச்சை நிறப் பட்டுச் சேலைக்குள் யானைத் தந்தம் போல் தெரிந்த வெண்கழுத்தில் பார்வை சென்றது.

தயங்கித் தயங்கி அலைந்த பார்வை, அவளுடைய கழுத்தினுடையவும், தோள்களினு டையவும், ஆடைகளின் அடக்குமுறையை எதிர்த்து நின்ற அழகுகளினதும் துடிப்பான மனோகரத்தைக் கவனிக்காமல் இருக்க முடியவில்லை. அவை எல்லாம் அவன் முகத்துக்கு வெகு சமீபத்தில் இருந்தன. அவளுடைய உடம்பின் வெதுவெதுப்பு, அவள் பூசியிருந்த வாசனைத் திரவியத்தின் நறுமணம்

அவள் சற்றே அசைந்தபோது ஏற்பட்ட உள் ஆடைகளின் கலகலப்பு இவற்றை யெல்லாம் அவன் உணர்ந்தான். அவளுடைய சலவைக்கல் அழகு ஒன்று திரண்டு ஆடைகளோடு இருப்பது போலவும், ஆனால் அவளுடைய உடம்பின் கவர்ச்சிகளையெல்லாம் மறைத்துவிடுவதில் ஆடைகள் தோல்வியுற்று வெட்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன என்றும் அவனுக்குத் தோன்றியது. ஒரு தடவை பார்த்த பிறகு கண்களை அவற்றிலிருந்து மீட்க முடியும் என்று தோன்றவில்லை.

கை, இயந்திரம் போல விசிறியை ஆட்டிக்கொண்டிருக்க அவன் பதுமை போல நிலைத்த பார்வையுடன் இருந்தான்.

புடைவை மேலேறிக் கிடந்த வழவழப்பான அவள் கீழ்க்கால் பகுதியில் அவன் கால் சென்று பட்டது. மிக மிக மிருதுவான பஞ்சணையில்தான் அவன் கால் கிடந்தது. ஆனால் அதை விட மிருதுவாயிருந்தது அவன் காலுடன் உராய்ந்த அவள் மலர்க்கால்.

கனிகா திடீர் விழிப்புக்கொண்டு கண்மடல் களைத் திறந்தாள். தான் எங்கிருக்கிறோம் என்பது புரிந்த கணத்தில் சடாரென்று எழுந்து உட்கார்ந்தாள். மாதுலன் இதமாக அவளைப் பார்த்துச் சிரித்தான். அவள் இமைகளைத் தாழ்த்திக்கொண்டு ஏதையோ எதிர்பார்த்திருப் பவள் போல பேசாது அமர்ந்திருந்தாள்.

அவன் மனம் படபடக்கும் சமீபத்தில் அவள் இருந்தாள்.

அவள் எழுந்தபோது கீழ் விழுந்த சேலை முந்தானையை வேகமாக மேலெடுத்துச் சுற்றுவதற்கு ஒரு விநாடி முன்பு தன்னை நோக்கி முறைத்த இரட்டை அழகுகளின் அளவையும் திண்மையையும் காண நேர்ந்தது, மாதுலனைச் சித்திரவதை செய்தது.

"கனி" என்று மெல்ல அழைத்தான்.

இமையைச் சற்றே உயர்த்தி கண்களின் ஓரத்தினால் 'என்ன?' என்று வினவினாள்.

அவன் பார்வை, அவள் கழுத்தைத் தடவிக் கிடந்த சிறு சங்கிலி சென்று ஒளித்த இடம் நோக்கிச் சென்றது. அந்த இடம் அவனைப் பெருமூச்சு விட வைத்தது. மேலே பேச



அவனுக்கு எதுவும் இருக்கவில்லை. அவள் செவ்விய இதழ்களைப் பார்த்தான். அதைத் திறந்து அவள் ஏதேனும் சொற்களை உதிர்ப்பாள் என்று தோன்றவில்லை. ஆனாலும் அவற்றின் ஈரமும் துடிப்பும் தனக்கு மௌனமாக அழைப்பை விடுப்பதை உணர்ந்தான்.

மீண்டும் "கனி" என்று அழைத்தாள்.

அவள் தலையை நிமிர்த்தாமல் 'உம்?' என்று கேட்டாள்.

அந்த 'உம்' மில் மகிழ்ச்சி, வெட்கம், அச்சம் மூன்றுமே இணைந்தொலித்தன.

உணர்ச்சி மிகுதியால் அவள் உடல் இலேசாகத் துடிக்கத் தொடங்கியதையும் பார்த்தான். ஆவேசம் கொண்டவனாய் அவளை இழுத்தணைத்தான். சேலையற்ற அவள் இடைப் பகுதியை அவன் கை சுற்றியது. வழவழத்த அந்தப் பகுதி அவன் எண்ணங்களை உலுக்க, உடல் கட்டுப்பாடிழந்து துடித்தான். தலை அவள் நெஞ்சில் சென்று மோதியது. உணர்ச்சிப் பெருக்கால் அவள் "ஹூம்!" என்று தடை விதித்தாள். ஆனால் அது தடையாகத் தெரியவில்லை மாதுலனுக்கு.

அவள் மலர் உடலின் பல பகுதி களும் திடீரென்று இறுகிவிட்டதை உணர்ந்தான். தலையை நிமிர்த்தி அவளைப் பார்த்தான்.

கனிகா முகத்தைக் கைகளால் பொத்தியிருந்தாள். இவன் தாபத்தோடு அவள் தோள்களைப் பற்றினான். முகத்தை மூடியிருந்த அவள் கரங்களை மெல்லப் பிரித்தான். மூடியிருந்த கண் இமைகளில் உதடுகளைப் பதித்தான்.

அவள் உடற் பகுதிகள் எழுந்து தாழ பெருமூச்சு விட்டாள். அகற்றிய அவள் கரங்களைப் பற்றியபடியே இமைகளில் இலேசாகப் பட்டிருந்த உதடுகள் அசைய, "ஏதாவது பேசேன்" என்று உச்சரித்தான்.

அந்தக் குறுகுறுப்பில் கனிகா சிலிர்த்தாள். குளிர்ந்த விழிகளை மெல்லத் திறந் தாள்.

அவள் இதயம் படபட டென அடித்துக்கொண்டது. அதனுள்ளும் மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டது. உடல் இலேசாக நடுங்க, புன்முறுவல் செய்ய முயன் றாள்.

"என்னைப் பற்றி உன் உள்ளத்திலே இருப்பதென்ன? ஒளியாமற் சொல்!" என்று இரகசியக் குரலில் அவளிடம் இறைஞ்சினான் மாதுலன்.

அவள் இமைகள் படபடத் தன. நீர் படர்ந்த விழிகள் ஆயிரம் கவிதைகளைச் சொன்னபோதும் உதடுகள் திறக்க மறுத்தன.

அழுகை வெடித்துவிடும் என்று பயந்த கணத்தில் முகத்தை அவன் மார்பில் ஒளித்தாள் கனிகா.

அதன் பின் மாதுலனும் பேசவில்லை. ஓசையற்ற இன்பத்தை உடல்களால் பகிர்ந்தனர் இருவரும். சகல சத்தங்களுக்கும் அப்பாற்பட்ட இன்ப மந்திரம் இருவர் இதயங்களிலும் ஒலித்துக்கொண்டிருந்ததால், சூழலின் எந்த ஓசையும் அவர்களுக்குக் கேட்கவில்லை.

***கொடும்புறம் வளை இக் கோடிக்***
***கலிங்கத்து ஒடுங்கினள் கிடந்த ஓர்புறம்***
***தழீஇ. முயங்கல் விருப்பொடு முகம்புதை***
***திறப்ப, அஞ்சினள் உயிர்த்த காலை***
***யாழ நின் நெஞ்சம் படர்ந்தது***
***எஞ்சாது உரை என.....***

(அகம் -86:21-25)

---

# சிந்தியா பதில்கள்

**முதல் டெஸ்டில் இலங்கை அணியின் வெற்றி எப்படி?**

எம். றிஸ்வான், கொழும்பு -12.

வென்றதை விடுங்கள். ஜெயசூர்யா ஒரு ஓவரில் தொடர்ந்து நான்கு நான்காக விளாசிக் கொண்டிருந்தபோது வர்ணனையாளர் சொன்னார்: ...ற லைட்ஸ் பார்த்துக் கொண்டிருப்பதாக ரசிகர்கள் ...த்துவிட வேண்டாம். நேரடி ஒளிபரப்பைத் தான் ...த்துக் கொண்டிருக்கிறீர்கள்!"

**முதலில் தமிழ் மக்களுக்கு ஜனநாயக உரிமைகளை வழங்கும்படி ரெண்டெழுத்தாரைக் கேட்டுக்கொள்வதில் இப்போது ஆனந்தசங்கரி அவர்களே அதிகம் பேசி வருவதற்குக் காரணம் என்ன?**

எம்.எஸ் அஹமட் இப்ராஹீம். ஏறாவூர்.

சென்ற தேர்தலுக்குப் பிறகு சங்கரி அவர்கள் பேசிவருகிறார். அதற்கு முன்னர் வேறுசிலர் பேசி னார்கள். இனிவரும் காலத்தில் அதைவிட வேறு ...ர் பேசுவார்கள். ஜனநாயக உரிமைகள் ...போதும்தான் தேவையாக இருந்து கொண்டிருக் ...றன. இப்போதுள்ள நிலைமை, அதை ...ருபவர்கள் வாய் திறந்து கேட்க ...டுமென்றால்... உயிருக்குத் துணிய வேண்டும். ...வுதான்.

**சிந்தியா! ஏன் சரித்திரம் படிக்க வேண்டும் ...வதானா?**

க. கமலதாசன், வந்தாறுமூலை.

ஜோர்ஜ் சாந்தாயனா என்னும் புகழ்பெற்ற ...வஞானி சொன்னார்: "கடந்த காலத்தை ...கொள்ள முடியாதவர்கள், அதை மறுபடி வாழச் ...பட்டிருக்கிறார்கள்!"

**கவலையை மறப்பது எப்படி?**

கலைப்பிரியன் வேணு, பெரிய நீலாவணை - 01.

வெகு சுலபம். அதைப் பற்றி நினைக்காமலிருக்க ...டும்.

**'லஞ்சம்' என்பது தமிழ்ச் சொல்லா?**

ஆர். மயூரா, கொழும்பு -13.

இல்லை. அது தெலுங்குச் சொல். தமிழ்ச்சொல் ...யூட்டு' தெலுங்கில் 'லஞ்சலம்' என்றால் ...லமகள் என்று அர்த்தமாம். ஆதித் தொழிலுடன் ...வும் கூடவே இருந்திருக்கிறது போலும்!

**கடவுள் உங்கள்முன் தோன்றினால் என்ன ...பீர்கள்?**

கே. வசந்தன், அக்கரைப்பற்று - 07.

எத்தனை தரம்தான் இக்கேள்விக்குப் பதில் ...ல்வது...

மாறுதலுக்கு சிரித்திரன் சுந்தர் அவர்களின் ...ர்ட்டூன் ஒன்றில் தமிழ்த்தாய் கடவுளிடம் ...ண்டுவதைத் தருகிறேன்: "கடவுளே, என்னைக் ...பாற்றவிருக்கும் கட்சிகளிலிருந்து என்னைக் ...பாற்று!"

**யாழ்ப்பாணத்தில் தினமுரசு விற்கப்படுவதை ரெண்டெழுத்தார் தடை செய்திருக்கிறார்களே?**

ந. தயாளினி, யாழ்ப்பாணம்.

என் பதில் கிடக்கட்டும். பத்திரிகைச் சுதந்திரம் பற்றிப் பெறுமதியான கருத்துக்களை வைத்திருக்கும் தமிழ்க் கட்டுரையாளர்களும், சக பத்திரிகைகளும் சாதிக்கப்போகும் 'மௌனம்', அவர்களது கள்ளத்தனத்தை மட்டுமல்ல, நம் சமூகத்தின் நபும்சகத்தனத்தையும் உங்களுக்குத் தெளிவுபடுத்தும். இவர்கள் தங்களை முதுகெலும்புள்ள தமிழர்களாக வேறு எண்ணிக்கொள்கிறார்கள் என்கிற விசித்திரம், உங்களை மேலும் கலவரப்படுத்தும்.

(தங்களுக்குப் பிடிக்காத கருத்துக்களை வெளியிடும் பத்திரிகையை எரிப்பதையும் அதை விற்பனை செய்வதைத் தடுப்பதையும் உள்ளுக்குள் அங்கீகரித்து இரசிக்கும் பத்திரிகையாளர்களையும், பேரறிஞர்களையும் கொண்ட சமூகத்தில் நீங்கள் வாழ்ந்து(?) கொண்டிருக்கிறீர்கள்!)


**அதிகம் பேசினால் களைப்படைவது நாக்கா, தொண்டையா, மூளையா?**

முஹமட் மைசான், மீராவேடை -04.

கேட்டுக்கொண்டிருப்பவர்.

**புதிய பாடகர் மதுபாலகிருஷ்ணன் எப்படி?**

மனோ கோபாலன் ஹப்புத்தளை.



அஸின்

'கனாக் கண்டேனடி' யில் யார் இது புதிய ஜேசுதாஸ்? என்று வியக்க வைத்தார். இப்போது 'சதுரங்கம்' படப் பாடலிலும் 'இதழும் இதழும் இணையும் பொழுது இமையில் நிலவு நுழையும் பொழுது' என்று கிறங்க வைக்கிறார். அவர் பெயரில் இருப்பதைக் குரலிலும் தருகிறார்.

**எம்.ஜி.ஆரைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

ஆர். எல். ராதிகா, தெல்தொட்ட.

இருக்கும் போது எத்தனையோ நல்ல காரியங்களைச் செய்த மனுஷன், சில தப்புக் காரியங்களையும் செய்திருக்கிறார். தப்புகளிலெல்லாம் பெரிய தப்பு, தமிழில் நடிக்க வருகிறவர்களுக்கெல்லாம் 'முதலமைச்சர்' ஆசையை ஊட்டிவிட்டுப் போனதுதான்.

**மனிதன் தன் இயலாமையை எப்போது உணர்கிறான்?**

ம. ருத்ரா, சின்ன செல்வகந்த.

மற்றவர்கள் அதைச் சுட்டிக் காட்டுகையில், மறுத்துப் பேசமுடியாமலிருக்கும் போது!

**எல்லோருக்கும் தெரிந்த பொய் ஒன்று சொல்லுங்கள்?**

எஸ். எம். எம். நாசீர், பண்டாரவளை.

நான் பொய் சொல்வதில்லை.

**காதலித்துக் கல்யாணம் செய்துகொள்வது நல்லதா? கல்யாணம் செய்து கொண்டபின் காதலிப்பதது நல்லதா?**

கே. யோகேஸ்வரன், நற்பிட்டிமுனை.

இந்த மாதிரி யோசித்துக்கொண்டே இருந்து விட்டால் மிகவும் நல்லது.

சிந்தியா பதில்கள்

**நம் சமூகம் எப்போது திருந்தும்?**

இரா. பரந்தாமன், குயின்ஸ் டவுன்.

தன்னைப் பார்த்து வெட்கப்படத் தெரிந்து கொள்ளும் போது.

**புதுமுக நடிகைகளில் உங்களைக் கவர்ந்த முகம் எது?**

ஏ.ஜே. சித்திக், பொத்துவில் -03.

மகாலட்சுமியின் மகனுக்குக் காதலியாக வந்த அந்தப் பளீர் முகம்!

**சிந்தியா, காதல் எப்படி உண்டாகிறது?**

நா.பிரியா, மொறகொல்ல.

இரா. சரவணன் என்ற இளங்கவிஞர் சொல்கிறார் பாருங்கள்:

கூப்பிடு தொலைவில் நீ
என்ன சொல்லிக்
கூப்பிடுவது என்ற
தயக்கத்தில் நான்.
தெரிந்து கொள்ளும் ஆசை
காதலகிப் போனது!


**இறுதி வெற்றி இலக்கை காட்டி மக்கள் மீத எல்லாக் கஷ்டங்களையும் சுமத்திக் கொண்டிருப்பது நியாயமாகுமா?**

வி. முரளிதரன், கொழும்பு -05.

வெற்றியை மட்டுமே வாழ்வின் அர்த்தமகக் கொள்ளும் இந்த மனோபாவம் அமெரிக்கர்களிட மிருந்தே விநியோகிக்கப்பட்டு உலகம் முழுவதையும் ஆட்டிப்படைக்கிறது என்கிறார் போலந்து திரைப்பட இயக்குனர் ஒருவர் இயக்குனர் ஜனுஷித் அமெரிக்க, தயாரிப்பாளருடன் இணைந்து ஒரு படம் எடுக்க ஒப்பந்தம் செய்து கொண்டார். இஸ்ரேலைக் களமாகக் கொண்ட கதை. மையப் பபாத்திரம் அமெரிக்கன் இஸ்ரேலில் வந்திறங்கியிருக்கும் அவனுக்கும் அமெரிக்காவிலிருக்கும் அவனுடைய மனைவிக்கு மிடையே பிணக்கு. ஒரு குறிப்பிட்ட காட்சியில் ஜெரூசலேமில் ஒரு உணவு விடுதியில் நண்பனோடு சாப்பிட வந்தமர்ந்திருக்கிறான். ஏதோ கதையில் மனைவியோட பேச வேண்டும் என்ற ஆர்வம் வர, எழுந்து வாசலிலிருக்கும் தொலைபேசிக்குச் சென்று கதைக்கிறான். பேசும்போதே மனைவியோடு வாக்குவாதமுண்டாகி சண்டை வலுக்கிறது. அதேநேரம், உணவு விடுதியினுள் ஒரு குண்டு வெடிக்கிறது. அவன் உறைந்து போய்ப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அவனுடன் வந்த நண்பன் குண்டு வெடிப்பில் இறந்து விடுகிறான்.

இதன் பிறது காட்சிகளை அமைக்க முடியாதவாறு இயக்குனர் ஜனுஷி, மனதின் கேள்விகளால் குழம்பிப் போகிறார். அவன் ஏன் நண்பனைச் சாப்பிட அங்கு அழைத்து வந்தான்? அவனுக்கு ஏன் மனைவியுடன் பேசத் தோன்றியது? அவன் உயிர் தப்ப, நண்பன் ஏன் செத்துப் போனான்? இதற்கெல்லாம் தர்க்க நியாயம் இருக்கிறதா? இல்லை தற்செயலா? வாழ்வதையும் சாவதையும் யார் தீர்மானிக்கிறார்கள்? பல்வேறு சிந்தனைகளுக்கும் அலைக்கழிப்புகளுக்கும் ஆளாகிறார்.

ஆனால், அமெரிக்கத் தயாரிப்பாளர் தீர்மானமாகச் சொல்கிறார்: இதில் அலட்டிக் கொள்ள ஒன்றுமில்லை. வெடிகுண்டு வைத்தவனை எப்படிக் கண்டுபிடிப்பது, அவனை எப்படிக் கொல்வது என்பது பற்றித் தான் யோசிக்க வேண்டும். இதன் மூலம் எதிரி தீர்த்துக் கட்டப்படுகிறான். நமது பாதுகாப்பு உறுதியாகிறது என்கிறார் இந்த ஒற்றைக் கோட்டில் பயணம் செய்யும்படியே உலகெங்கும் உள்ள மக்களுக்குச் சொல்லித் தரப்படுகிறது.



# வீரப்பன் வேட்டையாடப்பட்டது எப்படி?

## ஆபரேசன் குக்கூன் - முழு பின்னணித் தகவல்கள்

வீரப்பனைப் பிடிக்கும் 'ஆபரேசன் குக்கூன்' இரகசியத் திட்டத்தை நிறைவேற்ற அதிரடிப்படையின் உளவுப் பிரிவு வீரர்கள் உயிரையும் பணயம் வைத்து மிக ஆபத்தான ரிஸ்க்குகளை எடுத்திருந்தனர்.

இந்த ஆபரேசன் குறித்து அதிரடிப் படைத் தலைவர் விஜயகுமார் சொன்ன தகவல்களின் பின்னணி விவரங்கள் 'லப் டப்'பை பல மடங்காக்குகின்றன.

## கைதிகளாய் உள்ளே போன உளவாளிகள்

வீரப்பனின் தொடர்புகள், விவரங்களைத் திரட்டுவதற்காகப் பல அதிரடிப்படை வீரர்கள் கைதிகளாக மாறி சிறைகளுக்குச் சென்றனர்.

வீரப்பனுக்கு உதவி செய்து, அதிரடிப்படையினரிடம் மாட்டி, மைசூர், கொள்ளேகால் சிறைகளில் அடைக்கப்பட்டவர்களிடம் நெருங்கி விவரம் திரட்டவும் மற்றும் வீரப்பனுக்கு நெருக்கமான தமிழ் தேசிய இயக்கத் தீவிரவாதிகள் அடைக்கப்பட்டுள்ள சிறைகளுக்கும் இவர்கள் கைதிகளாக அனுப்பப்பட்டனர்.

இது பரம இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. உயர் மட்டத்தில் முதல்வர், உள்துறைச் செயலாளர், காவல்துறை டி.ஜி.பி, சிறைத்துறை டி.ஐ.ஜி. அதிரடிப்படையின் தலைவர் விஜயகுமார், உளவுப் பிரிவுத் தலைவர் எஸ்.பி. செந்தாமரைக் கண்ணன், கர்நாடக முதல்வர், கர்நாடக டி.ஜி.பி., அம் மாநில சிறைத்துறை டி.ஜி.பி., அதிரடிப் படைத் தலைவர் ஆகியோர் மட்டத்தில் இந்த விவரங்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

சிறைகளுக்குச் சென்ற அதிரடிப்படை வீரர்கள் அதைத் தங்கள் வீடுகளுக்குக் கூடத் தெரிவிக்கவில்லை. காட்டில் தேடுதல் வேட்டையில் அவர்கள் ஈடுபட்டிருப்பதாகவே வீட்டினர் நினைத்திருந்தனர்.



கனகராஜ்



சரவணன்

## பஸ் கண்டக்டர்களாய்

உள்ளே அனுப்பப்பட்ட வீரர்கள், வீரப்பனுக்கு நெருக்கமானவர்கள் அடைபட்ட செல்களிலேயே அடைக்கப்பட்டனர். அவர்களிடம் கொஞ்சம் கொஞ்சமாக நெருங்கி, பல விவரங்களைத் திரட்டி, விஜயகுமாருக்கு அனுப்பியது இந்த உளவுப் பிரிவு ரீம்.

மேலும், கைதிகளுக்கும் அவர்களது உறவினர்களுக்கும் இடையே நடந்த கடிதப் போக்குவரத்தும் உளவு பார்க்கப்பட்டது. இந்தக் கடிதங்கள் அதிரடிப்படையால் ஸ்கேன் செய்யப்பட்டன. இதில் தபால்துறையின் உதவியும் பெறப்பட்டது. இதிலும் பல விவரங்கள் கிடைத்தன.

இதை வைத்து வீரப்பனுக்கு உதவும் முக்கிய நபர்களை அடையாளம் கண்டு கொண்டது அதிரடிப்படை. இதையடுத்து அந்த நபர்களுடன் பழக அடுத்த 'ரிங்' உருவாக்கப் பட்டது. அவர்கள் வீரப்பன் நடமாடும் கிராமங்களில் மேஸ்திரிகளாக, தோட்ட வேலை பார்க்கும் ஆட்களாக, லாரி டிரைவர்களாக, லோடுமேன்களாக, மரம் வெட்டுபவர்களாக, ரோட்டோரக் கடைகளில் புரேட்டா - டீ மாஸ்டர்களாக மெல்ல மெல்ல உள்ளே நுழைந்தனர்.

இவர்களிடம் இருந்து தகவல்களைத் திரட்டிக்கொண்டு வரும் வேலையைச் செய்தது பஸ் கண்டக்டர்கள். இந்த பஸ் கண்டக்டர்களும் அதிரடிப்படையின் உளவுப் பிரிவினர்தான். தமிழக அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் கண்டக்டர் லைசென்ஸுடன் காட்டுப் பகுதிகளில் இயங்கிய அரசு பஸ்களில்




அம்பியூலன்ஸ் வண்டி

இவர்கள் கண்டக்டர்களாக நியமிக்கப்பட்டனர்.

இவர்கள் உளவாளிகள் என்பது பஸ்ஸை ஓட்டிய டிரைவர்களுக்கே தெரியாது என்பதுதான் விசேடம்.

## வீரப்பனின் கும்பலில் கலந்து....

மிகவும் திட்டமிட்டு, பொறுமையாக - மிக இரகசியமாக சுமார் ஓராண்டுக்கும் மேலாக நடந்த ஆபரேசன் இது.

இந்த நெட்வேர்க் மிகக் கச்சிதமாக வேலை செய்தது. வீரப்பனுக்கு உணவு, மருந்து சப்ளை செய்யும் ஆட்களுக்குள்ளும் ஊடுருவினர் இந்த நெட்வேர்கின் ஓரிரு உளவாளிகள். குறிப்பாக அதிரடிப்படை வீரர் முருகேசன். இவர் வீரப்பன் கும்பலில் கிட்டத்தட்ட ஊடுருவியேவிட்டார்.

## உதவிய கனகராஜ்

வீரப்பன் கும்பலில் முருகேசன் ஐக்கியமாக உதவியது வீரப்பனுக்கு மிக நெருக்கமான கனகராஜ் என்ற நபராம்.

இவர் மீது தான் இப்போது வீரப்பன் ஆதரவாளர்களின் சந்தேகப் பார்வை விழுந்துள்ளது.

கனகராஜின் உதவியுடன் வீரப்பனை ஆம்புலன்ஸில் ஏற்றி வெளியுலகுக்கு வரும் அளவுக்கு அவனை வளைத்தவர் முருகேசன்தான். வீரப்பனின் கண் பார்வைக் குறைவைக் காரணமாக வைத்து, சிகிச்சை பெறலாம் என்று சொல்லி அவனைக் காட்டுக்கு வெளியே கொண்டு வந்துள்ளார்.

இந்த வாரத்தில் திங்கள், புதன் அல்லது வெள்ளிக் கிழமையில் தர்மபுரி அருகே உள்ள மருத்துவமனைக்குச் செல்வது என்று வீரப்பன் திட்டமிட, அடுத்தடுத்த 'ரிங்' உளவாளிகள் மூலமாக விஜயகுமாருக்குத் தகவல் வந்து சேர்ந்தது.

> குருசாமி வீரப்பன் சந்தனக்கட்டை கடத்தலில் பிரபலமாகி சந்தனக் கட்டை வீரப்பன் என்று பெயர் எடுத்தவன். பின்னர் கொலை, கொள்ளை, கடத்தல் எனப் பல குற்றங்களில் தொடர்புபட்டதால் தமிழக, கர்நாடக, கேரள மாநில அரசுகளால் இருபது ஆண்டுகளுக்கும் மேலாகத் தேடப்பட்டான் சூலமங்களம் காட்டுப்பகுதிக்குள் ஒரு சில சகாக்களுடன் வாழ்ந்து வந்தான். அக்காலக்கட்டத்தில் மலைவாழ் கிராம மக்கள் சிலருக்கு உதவியும், சிலரை வதைத்தும் வந்திருக்கிறான். காட்டுக்குள் சிற்றரசனாக வாழ்ந்துகொண்டு ஏக போகமாக இருந்தவன். தெருவில் வைத்துச்சுடப்பட்டிருக்கிறான்.: எத்தனை ஆண்டுகள் ஆனால் என்ன, அநியாயம் நியாமென்றாகிவிடுமா? இது வீரப்பனுக்கு மட்டுமல்ல மக்களை அடக்க நினைக்கும் எல்லோருக்கும் பொது?

## ஆம்புலன்ஸான வேன்....

ஒரு ஆம்புலன்ஸில் சென்றால் யாருக்கும் சந்தேகம் வராது என வீரப்பன் நினைக்க, அந்தத் தகவலும் விஜயகுமாருக்கு வந்து சேர்ந்தது. உடனே தங்களது டெம்போ டிராவலர் வேனை ஆம்புலன்ஸ் ஆக்கியது அதிரடிப்படை.

ஸ்டிக்கர்களை வாங்கி வந்து எஸ்.கே.எஸ். மருத்துவமனை, சேலம் என ஒட்டியதோடு ஆம்புலன்ஸின் செட்-அப்பை அந்த வேனுக்குள் உருவாக்கினர். ஆம்புலன்ஸ் கண்ணாடிகளை மறைத்து திரை இருக்க வேண்டும் என வீரப்பன் சொல்ல, முகாமில் ஆம்புலன்ஸ் கண்ணாடிகளுக்கு திரை தைக்கப்பட்டு மாட்டப்பட்டது.

## சரவணனின் தைரியம்

இதையடுத்த கிளைமாக்ஸ், எப்போது கிளம்புவான் வீரப்பன் என்பதுதான். திங்கள், புதன், வெள்ளி என்று மூன்று நாட்களில் அவன் எப்போது வருவான் என்பது தெரியாத சூழல்.

இந் நிலையில் திங்கள்கிழமை இரவே அவன் ஆம்புலன்ஸ் கேட்க, உடனே கிளம்பியது அதிரடிப்படையின் ஆம்புலன்ஸ் வேன். அதை ஓட்டிச் செல்ல தேர்ந்தெடுக்கப்பட்ட சரவணன், டேக்டில் டிரெயினிங் முடித்த ஒரு கமாண்டோ வீரர்.

ஆயுதத்துடன் வரும் எதிரிகளை ஆயுதமின்றி நிலை குலைய வைக்கும் பயிற்சி பெற்றவர்.

இவரைத் தேர்வு செய்தது விஜயகுமாரேதான். தீவிர மனத் தைரியமும் தெளிவான திட்டமிடலும் கொண்ட சரவணனுக்கு வெள்ளை யூனிபார்ம் மாட்டப்பட ஆம்புலன்சில் கிளம்பினார்.

## லாரிகளில் கிளம்பிய அதிரடிப்படை:

கிளம்பிப் போன பிறகு அதிரடிப்படையை அவர் மீண்டும் தொடர்புகொள்ள முடியாத சூழல். வீரப்பனையும் அவன் ஆட்களையும் அழைத்துக்கொண்டு வரும்போது அவர் எந்தச் சந்தேகமும் வராதபடி நடந்துகொள்ள வேண்டிய கட்டாயம்.

அவர் கிளம்பிய மறு நொடியே அதிரடிப்படையின் டாப் 50 கமாண்டோக்கள் 3 பிரிவாகப் பிரிந்து லாரிகளில் கிளம்பினர். பொலிஸ் வண்டிகள் என்றால் சந்தேகம் வரலாம் என்பதால் லாரிகள்.

யாருக்கும் யூனிபார்ம் இல்லை. லுங்கி, சாதாரண சட்டைகள், டிரவுசர், பனியன்களுடன் லாரிகளில் ஏறிய இந்த ரீம், வேன் வரும் பாடி வனப் பகுதியில் 3 பிரிவாகப் பிரிந்து டிபென்ஸ் பொசிசன் எடுத்துக் காத்திருந்தது.

சந்தேகம் வராதபடி சாலையோரத்தில் லாரிகளை நிறுத்தி அதில் மணல் மூடைகளை அடுக்கி, அவற்றின் பின்னால் துப்பாக்கிகளுடன் தயாராகப் பதுங்கியிருந்தனர் அதிரடிப்படையினர்.




## சிக்னல் கிடைத்தது -

வீரப்பனையும் ஆட்களையும் ஏற்றிக்கொண்டு திட்டமிட்டபடி வந்தார் சரவணன். பாடி வனப் பகுதி அருகே வந்ததும், வேனின் ஹெட் லைட்டை டிம்-பிரைட் செய்து, உள்ளே வீரப்பன் இருப்பதை தனது ஆட்களுக்கு சிக்னல் தந்தார்.

இதையடுத்து தயார் நிலைக்கு வந்தனர் அதிரடிப்படையினர். லாரி அருகே வந்ததும் வேனை சடன் பிரேக் போட்டு நிறுத்திவிட்டு வெளியே குதித்தார் சரவணன்.

அடுத்த நொடியே வேனைச் சுற்றி வளைத்தனர் அதிரடிப்படையினர்.

## குண்டுகளை பம்ப் செய்து.....

முதலில் வீரப்பன் ஆட்கள் சுட, கையெறி குண்டுகளை வேனில் முன் கண்ணாடி வழியாக வீசி வேனுக்குள்ளேயே வீரப்பனை நிலைகுலைய வைத்துவிட்டு, ரெமிங்டன் பம்ப் கன் எனப்படும் சரமாரியாக புல்லட்டுகளை துப்பும் துப்பாக்கிகளால் வெறி தீரும் மட்டும் சுட்டுத் தீர்த்தது அதிரடிப்படை.

அடுத்த சில நிமிடங்களிலேயே வேனில் இருந்து துப்பாக்கியால் சுடுவது நின்று போய்விட, வீரப்பனையும் அவனது ஆட்களையும் வெளியே இழுத்துப் போட்டுப் பார்த்தனர் அதிரடிப்படையினர்.

வீரப்பன் உடலில் மட்டும் 13 புல்லட்டுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு குண்டு நெற்றியில் பெரிய ஓட்டை போட்டுக்கொண்டு, வீரப்பனின் மூளையைச் சிதறடித்தவாறே, பின் மண்டை வழியாக வெளியேறியிருக்கிறது.

சேத்துக்குளி கோவிந்தன் கண்களை மூடக்கூட அவகாசம் கிடைக்காமல் செத்துப் போயிருந்தான்.

## கொண்டாட்டத்தில் வீரப்பனின் கிராமம்

இத்தனை ஆண்டுகளாய் வீரப்பனுக்கும் அதிரடிப்படையினருக்கும் இடையில் சிக்கி, சின்னாபின்னமாகி வந்த வீரப்பனின் சொந்த ஊரான கோபிநத்தம் கிராம மக்கள் பட்டாசு வெடித்துக் கொண்டாடி வருகின்றனர்.

வீரப்பனின் சொந்த ஊர் கர்நாடக மாநிலம் சாம்ராஜ்நகர் மாவட்டத்திலுள்ள கொள்ளேகாலை அடுத்த கோபிநத்தமாகும். இங்கு தமிழர்களும் கன்னடர்களும் சமமான அளவில் வசிக்கின்றனர்.

இக் கிராமத்தில் வீரப்பனுக்குச் சொந்தமாக 19 ஏக்கர் நிலம் உள்ளது. வீரப்பன் குறித்து தகவல் தெரிவிக்குமாறு அதிரடிப்படையினர் கோபிநத்தத்துக்கு வந்து விசாரணை என்ற



சடலமாக வீரப்பன்

பெயரில் கிராம மக்களை அடிக்கடி பயங்கரமாகத் துன்புறுத்தி வந்தனர்.

வீரப்பனுக்கு உதவியதாகப் பல குடும்பங்களைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். பலர் பொலிஸாரால் அடித்தே கொல்லப்பட்டுள்ளனர். அதே போல பொலிஸிடம் தன் ஆட்களைக் காட்டிக்கொடுத்ததாக சந்தேகப்பட்ட வீரப்பனும் தனது ஆட்களை வைத்து இந்த ஊரைச் சேர்ந்த பலரைக் கொன்றிருக்கிறான்.

இப்படி இரு பக்கமும் அடி வாங்கி வதைபட்ட இந்தக் கிராமத்தினர் வீரப்பன் கொல்லப்பட்ட செய்தி வந்தது முதல் மகிழ்ச்சிக் கடலில் திளைத்து வருகின்றனர். பட்டாசு வெடித்தும் இனிப்பு வழங்கியும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இந்த ஊரைச் சேர்ந்த, வீரப்பனின் சித்தி மாரக்காள் நிருபர்களிடம் பேசுகையில்,

"வீரப்பனால் இந்தக் கிராமத்திற்கு எந்தப் பலனுமில்லை. அதிரடிப்படையினரால் தொல்லை ஏற்பட்டதுதான் மிச்சம். எனவே வீரப்பனைச் சுட்டுக் கொன்றதில் எங்களுக்கு வருத்தம் இல்லை. இனிமேல் நாங்கள் எந்தத் தொல்லையுமின்றி, நிம்மதியாக இருப்போம்" என்றார்.

## வீரப்பனின் முன்னாள் கூட்டாளி கோவிந்தராஜ் பேசுகையில்

"வீரப்பனைக் காட்டிலும் அதிரடிப் படையினரால்தான் நாங்கள் பல தொல்லைகளை அநுபவித்தோம். எங்களது குழந்தைகளின் படிப்பும் பாழானது. 40 ஆண்டுகளுக்கு மேலாகக் குடியிருந்தும், எங்களால் பட்டா பெற



விஜயகுமார் மற்றும் சரவணன்

முடியவில்லை.

வீரப்பன் கொல்லப்பட்டதும் வருத்தமளிக்கிறது. இருப்பினும் அதை வெளிப்படையாகத் தெரிவித்தால் அதிரடிப்படையினரால் மீண்டும் தொல்லை ஏற்படும் என்ற பயம் இருக்கிறது. எனவே, வீரப்பன் இறந்தது மகிழ்ச்சி என்று கூற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இனியாவது கிராம மக்கள் பிரச்சினையின்றி, நிம்மதியாக வாழ்வார்கள் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது" என்றார் வெளிப்படையாக.

வீரப்பன் இங்கு பிறந்திருந்தாலும் இக் கிராமத்துக்குள் அவன் நுழைந்து பல ஆண்டுகளாகின்றன. கிராமத்தில் தொடர்ந்து இரகசிய பொலிஸ் கண்காணிப்பு இருந்ததால் உள்ளே வருவதைத் தவிர்த்தே வந்தான். பிரச்சினைகளை ஆட்களை அனுப்பிப் பேசுவதே அவன் வழக்கம். பொலிஸுக்கு உளவு சொல்பவர்களையும் ஆள் வைத்தே கதையை முடித்து வந்தான் வீரப்பன்.

"வீரப்பனை 15 வயதில் பார்த்திருக்கிறோம்" என்று இக் கிராமத்தைச் சேர்ந்த ஐயன்துரை, படையாச்சி ஆகியோர் கூறுகின்றனர். அதற்குப் பின் உள்ளே வந்ததே இல்லையாம்.

கிரிக்கெட் வரலாறு மற்றும் எண் ஜோதிடம் என்பன அடுத்த வாரம் பிரசுரமாகும்

"மாஜிக் தந்திரங்கள்" குறித்த பயிற்சியும் அதனோடு ஒட்டிய சுவைமிகு தகவல்களும் தொடர்ந்து வெளிவரும். மாஜிக் பிரியமுடைய நீங்களும் மாஜிக் நிபுணராகத் திகழ எமது வாழ்த்துக்கள்.




# மாஜிக் தந்திரங்கள்

**குறிப்பு :-** இதில் கூறப்பட்டுள்ள வழிமுறைகளை சூட்சுமமாக அறிந்து, தன் யூகத்தையும் பயன்படுத்தி இக்காட்சியை நல்ல முறையிலே நடத்த வேண்டும். பலகையைத் தாங்கும் கம்பியைச் சொருகும்போதும், எடுக்கும் போதும் அதை சபையோர் தெரிந்துகொள்ள முடியாதபடி செய்ய வேண்டும். கம்பி வளையத்தை மேலே வைத்து வலது பக்கம் கொண்டுபோகும் பொழுதும் மறுபடி கால் பக்கமிருந்து இடது பக்கமாகக் கொண்டு வரும்பொழுதும், இடையில் தடங்கலாக இருக்கும் இரண்டு கம்பிகளையும் கடக்க வளையத்தை விரிக்கும் பொழுதும் வெகு கவனமாகச் செய்ய வேண்டும். சபையோர் 'பலகையை உயரே கட்டி ஆளைப் படுக்க வைத்திருக்கிறான்' என்று சந்தேகப்படாமலிருக்கவே, இந்த வளையப் பரிசோதனை செய்துகாட்ட வேண்டி இருக்கிறது.

மேடையிலே இதை நல்ல முறையிலேயே செய்து காண்பித்தால் சபையோர் ரொம்ப ஆச்சரியப்படு வார்கள்.

## ஐந்து பேர் பார்த்த சீட்டை ஒரு தொப்பியில் காண்பித்தல்

இந்தக் காட்சியை நடத்த ஒரே பக்கத்தில் கிளாவர் ஐந்து ஒட்டப்பட்ட சீட்டுக் கட்டையே பயன்படுத்த வேண்டும். இந்தக் காட்சியை ஆரம்பிக்கும் முன் மேசை மேல், கிளாவர் 5 ஒட்டப்பட்ட சீட்டுக் கட்டையும் வைத்துவிட வேண்டும்.

காட்சியாளர் மேடைக்கு வரும் பொழுது ஒரு தொப்பியை அணிந்து வரவேண்டும். மேசை மேல் உள்ள நல்ல சீட்டுக் கட்டை கையில் எடுத்து வந்து சீட்டை விரித்துச் சபையோருக்குக் காண்பித்து சபையில் ஒரு சிலரிடம் காண்பித்து, அது புதிய சீட்டுக் கட்டுத்தானா என்று பரிசோதிக்கச் செய்து சீட்டுக்கட்டை வாங்கி நன்றாகக் குலுக்கி, அதை விரித்து சபையோரிடம் காண்பித்துவிட்டு, மறுபடியும் சபையோரிடம் சென்று, இந்தக் கட்டை தந்திரமாக விரித்து, கிளாவர் ஒட்டப்பட்ட சீட்டுகளில் ஒரு சீட்டை மட்டும் வெளியே நீட்டி, ஒருவரிடம் காண்பித்து "இதைப் பார்த்து மனதில் வைத்துக்கொள் ளுங்கள். ஒருவரிடமும் சொல்ல வேண்டாம்" என்று சொல்லிவிட்டு, சபையோர் முன்னே சீட்டுக் கட்டைக் கலக்கிவிட்டு, மறுபடி கிளாவர் ஒட்டிய ஒரு கார்டை மட்டும் வெளியே நீட்டி மேலே சொன்னது போல சொல்லிவிட்டு, மறுபடி சீட்டைக் குலுக்கி, மற்றொருவரிடம் கிளாவர் 5 சீட்டைக் காண்பித்துவிட்டு, மேலே சொன்னது போல சொல்ல வேண்டும். இந்த விதமாக ஐந்து நபரிடம் மட்டும் காண்பித்து, "சீட்டின் நம்பரை மறந்துவிடாதீர்கள்" என்று சொல்லி விட்டு சீட்டுக் கட்டை கையில் எடுத்துக்கொண்டுபோய் மேசை மேல் வைத்துவிட்டு ஒரு கறுப்புக் கைக்குட் டையைக் கொண்டுவந்து, தொப்பியை நிமிர்த்தி குழிபோன்ற பகுதியை மேல் புறமாக வைத்து, அதன் மேல் கைக்குட்டையைப் போட்டுவிட்டு, மேசை அருகே சென்று புதிய சீட்டுக் கட்டைக் கையில் எடுத்து வந்து அதை நன்றாகக் குலுக்கி விரித்து சபையோரிடம் காண்பித்துவிட்டு சீட்டுகளை ஒன்றாகச் சேர்த்து, சீட்டின் முனையைக் காதில் வைத்து, ஏதோ கேட்பது போல் தலையை அசைத்து சீட்டைப் பிரித்துத் தேடுவது போல நடித்து, கிளாவர் 5ஆம் சீட்டை மேஜை மேல் வைத்துவிட்டு, கறுப்புக் கைக்குட்டையால் மூடி மந்திரம் போடுவது போல பாவனை செய்து, முதலில் சீட்டைக் காண்பித்தவரிடம் சென்று தயவு செய்து சற்று மேடைக்கு வாருங்கள்" என்று சொல்லி அழைத்து வந்து கறுப்புக் கைக்குட்டைய மெதுவாகத் திறந்து, உள்ளே உள்ள சீட்டைக் காண்பித்து, "நீங்கள் பார்த்த சீட்டு இதுதானா?" என்று கேட்டால், 'ஆம்' என்று கூறுவார். உடனே கைக்குட்டையால் தொப்பியை மூடி, மந்திரக் கோலைக் கொண்டு, மந்திரம் போடுவதுபோல பாவனை செய்துவிட்டு, சீட்டைக் காண்பித்த இரண்டாவது நபரைக் கூட்டிவந்து முன்போல் சீட்டைக் காண்பிக்க, அவர் பார்த்தது அதுதான் என்று கூறுவார்.

இந்த விதமாகச் சீட்டைக் காட்டிய ஐந்து பேரையும் மேடைக்கு அழைத்து தொப்பியிலுள்ள சீட்டைப் பார்க்கச் சொன்னால் ஐந்து பேரும் தான் பார்த்த சீட்டுதான் என்று கூறுவார்கள். இதைக் கண்ட சபையோர் ஆச்சரியப்படு வார்கள்.

குறிப்பு :- கிளாவர் ஐந்து ஒட்டிய சீட்டுக் கட்டை சபையோரிடம் கொண்டுபோய் ஒரு சீட்டை மட்டும் வெளியே நீட்ட வேண்டும். அதாவது கட்டைக் குலுக்கிவிட்டு நினைத்த இடத்தில் கட்டை விலக்கி, ஒரு சீட்டு மட்டும் ஒட்டிய அளவு வரை மேல் சீட்டை ஒதுக்கிக் காண்பிக்க வேண்டும். சீட்டுக்கட்டின் பின்புறம் மேல் பக்கமாக இருக்கும்படி சீட்டுக்கட்டை கையில் பிடித்து, அடிப்பக்கமுள்ள நம்பரைக் காண்பிக்க வேண்டும். அடிப்பக்கமாக கிளாவர் ஐந்து வர எப்படிப் பிடிக்க வேண்டும் என்பதைக் கவனம் வைத்துக்கொள்ள வேண்டும். கவனமில்லாமல் பல சீட்டுக்கலந்த பகுதியைக் காண்பித்துவிடக் கூடாது. இந்தச் சீட்டை மேசை மேல் வைத்துவிட்டு, புதிய சீட்டுக் கட்டை எடுக்க, சபையோருக்கு ஒரு போக்கு காண்பிக்க வேண்டும். அதாவது, சீட்டை மேசை மேல் வைத்து விட்டு ஒரு ஸ்ரூலை எடுப்பது போல எடுத்து அந்த ஸ்ரூலை சபையோருக்கு எதிரே போடுவது போல போட்டுவிட்டு மேசையில் வைத்த சீட்டுக் கட்டை எடுப்பது போல, புதிய சீட்டுக் கட்டை கையில் எடுத்து வந்து அதைக் குலுக்கி, விரித்து சபையோருக்குக் காண்பிக்க வேண்டும். சீட்டுக் கட்டை மேசை மேல் வைப்பதிலும், எடுப்பதிலும் நல்ல கவனம் வேண்டும்.

ஒவ்வொருவரும் மேடைக்கு வந்தவுடன் கறுப்புக் கைக்குட்டையை மெதுவாகத் தூக்கி சீட்டு நன்றாகத் தெரியும்படி பிடித்துக்கொள்ள வேண்டும். ஒருவர் பார்த்துவிட்டுத் திரும்பியபின் கறுப்புக் கைக்குட்டை மேல் மந்திரக் கோலை ஆட்டி உள்ளே உள்ள சீட்டு மாறி சரியான சீட்டை உள்ளே வரவழைப்பது போல பாவனை செய்ய வேண்டும்.

## ஒரு படத்தை ஃபோட்டோ படமாக மாற்றுதல்

காட்சியாளர் தன் உருவத்தை பெரிய அளவில் ஃபோட்டோ பிடித்து அதை ஏ15 செ.மீ. அகலம், 30 செ.மீ. நீளம் (அதாவது 12x10 அங்குலம்) கண்ணாடி வைத்து அழகான பிரேம் போட்டு வைத்துக்கொள்ள வேண்டும். இதே அளவில் மனத்திற்குத் தோன்றிய ஒரு சுவாமி படத்தை பிரேம் போட்ட படத்திலுள்ள அதே போன்ற மற்றொரு படத்தை எடுத்து பிரேம் போட்ட படத்தின் முன் பக்கம் வைத்து, அது கண்ணாடியின் மேல் பிரேமுக்கு உள்ளடங்க இருக்கும்படி வைத்து வெட்டிக்கொள்ள வேண்டும்.

(தொடர்ந்து வரும்..........)

# காதிலை பூ கந்தசாமி

### நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை.
*-காதில பூ கந்தசாமி-*

"வீரப்பனை விடுதலை செய்யுங்கோ
வீரப்பனை விடுதலை செய்யுங்கோ!!

என்னடா செத்துப்போனவனை விடுதலை செய்யச் சொல்லிக் கத்துறன் எண்டு நினைச்சுப்போடாதேங்கோ. இப்பிடி ஒரு அறிக்கையை வாய் கூசாம விட்டிருக்கிறார் வேந்தனார். அதுதான் அவரை ஒருக்காப் பாத்து என்ன விசயமெண்டு தெரிஞ்சுகொண்டு வருவமெண்டு அவற்ர வீட்டுக்கே வந்தனான். கேற்றைத் தாண்டினதில இருந்து இந்தக் கோஷந்தான் கேக்குது.

**கா.பூ :-** வந்தனங்கள் வேந்தனாரே.

**ஈ.வே :-** வந்தனம் வந்தனம்......யார் நீங்கள் இதற்கு முதல் பாக்கயில்லையே.

**கா.பூ :-** பாத்திருக்கமாட்டியள், கேட்டிருப்பியள். என்னை காதில பூ எண்டுவினம்....எனக்கு இன்னொரு பேரும் இருக்கு கந்தசாமி எண்டு....

**ஈ.வே :-** அட இப்ப ஞாபகம் வருகுது.....நல்ல தமிழ்ப் பேராத்தான் வச்சிருக்கிறியள். (மனதுக்குள் வில்லங்கம் பிடிச்ச பேர் வழியாயிட்டுதே...இண்டைக்கு யார் முகத்தில முழிச்சனோ.....)

**கா.பூ :-** என்ன கனக்க யோசிக்குமாப் போல கிடக்கு.... அதொண்டுமில்ல...வீரப்பனை விடுதலை செய்ய வேணுமெண்டு தடாலடியா ஒரு அறிக்கை விட்டிருக்கிறியளே! என்ன விஷயம்?

**ஈ.வே :-** அட அதுவா......நானும் என்னமோ ஏதோவெண்டு பயந்து போனன். அது வந்து....வீரப்பன் ஆர்? அவனை விடுதலை செய்ய வேணுமெண்டு சொன்னதில என்ன தப்பு?

**கா.பூ :-** வீரப்பன் எங்களில ஒருதருக்கும் உறவில்லை. ஓ.கே. இப்ப உயிரோடயே இல்லையே! பின்ன எப்பிடி விடுவிக்கிறது.

**ஈ.வே :-** என்ன வீரப்பன் செத்திட்டாரோ.....அதப்பற்றி ஒருத்தரும் ஒண்டும் சொல்லயில்லையே! விடுவிக்கச் சொல்லி அறிக்கை விடுங்கோ எண்ணிடிச்சினம், விட்டன். இப்ப செத்திட்டான் என்டிறியள்.....

**கா.பூ :-** அடப் பாவமே....விஷயமே தெரியாமல் அறிக்கை விடுங்கோ எண்டால் விடுறதா....? என்ன அரசியல் வளர்ப்பப்பா...அது சரி இத்தனை வருஷமா டிமிக்கி குடுத்தவனை தமிழக அரசு சுட்டுப்போட்டுது. அதைக் கண்டிச்சு அறிக்கை விட்டால் இனி இந்தியா போற ஐடியாவே இல்லையா?

**ஈ.வே :-** இனி எங்கை இந்தியா போறது....அங்க போய் அவமானப்பட்டு வந்ததை இன்னும் கூட்டமைப்பு எம்.பி.மார் சொல்லிச் சிரிக்கிறாங்கள். அதுபோக முதலுக்கே மோசம் வந்திடுமெண்ட நிலையில இருக்கிறன்.

**கா.பூ :-** முதலீடு எண்டது பதவியைத்தானே! அதுக்காக எப்ப முதலீடு செய்தியள்? தானா வந்ததுதானே.

**ஈ.வே :-** கள்ள வாக்கோ. நல்ல வாக்கோ. வயசுபோன நேரத்தில ஒரு கௌரவத்துக்கு தன்னும் இருந்திட்டுப் போறனே...சே...கடந்த இருபது வருஷமா. தமிழ் மக்களுக்காக் எவ்வளவு உழைச்சிருப்பன்.

**கா.பூ :-** அதெல்லாம் கிடக்கட்டும்! சமகாலத்தில வாயைத் திறக்கிறவைக்கெல்லாம் பதில் சொல்லிக்கொண்டு வாறீரே....அதுக்கு என்ன காரணம்.....?

**ஈ.வே :-** நல்ல கேள்வி! எங்க கேட்க மாட்டியளோ எண்டு நினைச்சன். பெரிசா ஒண்டுமில்ல. பதவி தந்தவையளுக்கு பதிலுக்கு ஒண்டும் செய்ய வேண்டாமோ. அதுதான் அவையளுக்குப் பிடிக்காதவையள் வாயைத் திறந்தாலே பட்டெண்டு பதில் சொல்லிறன். இப்பிடியெண்டாலும் இருப்பைத் தக்க வச்சுக்கொள்ளலாம். எண்டு ஒரு சின்ன நப்பாசைதான்.

**கா.பூ :-** இது நப்பாசையில்லை..... தப்பாசை....சரி. வீரப்பனைப் பற்றி என்ன நினைக்கிறீர்.

**ஈ.வே :-** இஞ்ச பாரும்....எனக்கு வீரப்பனைப் பற்றி தனியா ஒரு நல்ல அபிப்பிராயமுமில்லை. அவன் எப்பவெண்டாலும் கொல்லப்பட வேண்டியவன் தான் என்ன செய்ய? நக்குண்டார் நாவிழந்தார் எண்டுவினம் என்ர நிலையும் அதுதான். அதுக்காக வீரப்பனிட்ட ஏதையும் வேண்டிப்போட்டன் எண்டு இடக்குமுடக்கா எண்ணிப்போடாதேயும்.

எங்கட வன்னிக் காட்டுக்குள்ள இருக்கிறவற்ர சிபாரிசில எம்.பி.பதவியை வாங்கிப்போட்டன். அதில வருஷக்கணக்கா காட்டுக்குள்ள அதுவும் துவக்கோட இருந்துகொண்டு அரசுக்கு விளையாட்டுக் காட்டுறதை சனம் வீரமெண்டுது. இப்ப வீரப்பனுக்கு நடந்ததைச் சரி எண்டால் நாளைக்கு எங்கட நாட்டிலையும் அது மாதிரி சம்பவம் நடக்கேக்க அதையும் சரியெண்டுதானே சொல்ல வேண்டி வரும். ஏன் வில்லங்கத்தை விலைக்கு வாங்க வேணும்....விளையாட்டைச் சொல்லிறன் எண்டு வெளியில உளறி விட்டிடாதியும்....

**கா.பூ :-** இவ்வளவு தெளிவாப் பேசிற நீர் சில நேரத்தில ஏன் கண்டபடி கதைக்கிறீர்?

**ஈ.வே::-** இயமனைக் கண்டால் எருமை மாடு சிரிக்கிறதில்லையே! அப்பிடித்தான் காணக் கூடாதவையளைக் கண்டால் கண்டபடி கதைக்க வேண்டி வருகுது. அதையெல்லாம் நீர் ஏன் கண்டுகொள்ளிறீர்.

**கா.பூ :-** அதிருக்கட்டும் லேட்டாஸ்ட்டா ஒரு தகவல் கிடைச்சுது. பார்லிமெண்டில நடந்த நவராத்திரி விழாவில முன் வரிசையில இருந்து தமிழிலையும் பேசுங்கோ எண்டு குரல் கொடுத்தீராமே.....

**ஈ.வே :-** ......ஓ அதுவே! அதிலென்ன தப்பு? தமிழற்ர விழாவில தமிழிலயும் பேசுங்கோ எண்டது சரிதானே....! அதை விட நான் முன் வரிசையில இருந்ததுக்கும் ஒரு காரணமிருக்கு. ராஜதந்திரிகளைச் சந்திக்கிற எங்கட கமிட்டியில இல்லாத சம்பந்தரே பிரதமருக்குப் பக்கத்தில இருக்கலாமெண்டால் என்னாலை ஏன் இருக்க முடியாது. என்னை விட சம்பந்தருக்கு என்ன அர்ப்பணிப்பு இருக்குது. அமைச்சர் டக்ளஸ் நடத்திறதா இருக்கலாம் அதுக்காக நான் முன்வரிசையில இருக்கக் கூடாதெண்டு என்ன சட்டம். இந்தக் கேள்வியை சந்தர்ப்பங் கிடைச்சால் ஐ.நா. சபையிலையும் கேட்பன்.

**கா.பூ :-** ம்...எதை எதை ஐ.நா. சபையில கேக்கிறதெண்ட விவஸ்தையே இல்லாமப் போச்சு. விழா முடியமுன்னமே வெளிக்கிட்டுப் போயிட்டுத் திரும்பி வந்து கன்னத்தில கையை வச்சு நிண்ட நிலையில இரசிச்சுக்கொண்டும் இருந்தீராமே.

**ஈ.வே :-** என்னதான் இருந்தாலும இந்தியாவின்ர விஷயம் எண்டால் கொஞ்சம் அப்பிடித்தான். தஞ்சாவூரில இருந்து வரவழைக்கப்பட்ட நடனக் கலைஞர்கள் ஆடின ஆட்டம் ரொப்......இன்னும் கண்ணுக்குள்ளயே இருக்கு. ம்......என்ன செய்ய? அவையள் இங்க வந்து போகலாம். ஆனால் நான்தான் அங்க வரக் கூடாதெண்டு சொல்லிப்போட்டினம். பொடா சட்டத்தை நீக்கினதப் போல என் மேல போட்ட தடைச் சட்டத்தையும் நீக்கச் சொல்லிக் கேட்கப்போறன்.

**கா.பூ :-** அதுதான் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கச் சொல்லி கேட்டீரே.

**ஈ.வே :-** இதென்ன வம்பா இருக்கு? அதையும் நீக்கினாத்தான் போவனெண்டால் நான் என்ன பயங்கரவாதியா? சும்மா வம்பில மாட்டாதையும்...எனக்கு துவக்கும் தெரியாது. ஒரு மண்ணும் தெரியாது...அது இந்தியாவாச்சு. வன்னியாச்சு ஆளை விடுங்கோ சாமி.....

**கா.பூ :-** நல்லாப் பயந்திட்டியள் போல....அவையளுக்குத் தாஜா பண்ணிறதெண்டால் நல்ல வாங்கிப் போட்டுக் குத்துவியள். பிரச்சினை வருகுதெண்டால் படலையைப் பிச்சுக்கொண்டு ஓடுவியள். சரி நான் வாறன்.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(28.10.2004 தொடங்கி 03.11.2004 வரை)

**சோதிட மாமணி தில்லை**

### இந்த வாரக் கிரக நிலை

துலாம்- சூரியன், கேது, செவ்வாய், வெள்ளி, விருச்சிகம் - புதன், மேடம் - இராகு, கர்க்கடகம் - சனி, கன்னி - வியாழன். சந்திரன் இடபம், மிதுனம், கர்க்கடகம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம் :**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் நிலை மாற்றம், காரியானுகூலம், பெரியோர் உதவி, உறவினர் கலகம், வெளியிட வாழ்க்கை, உத்தியோகக் கலக்கம், வீண் பிரயாசம், மாணவர் கல்வி பேறு, பரீட்சைகளில் வெற்றி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**மிதுனம் :**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.)
தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை, பணவரவு, அன்னியர் உதவி, உத்தியோக நாட்டம், தேகசுகம் கவலை, மாணவர் கல்வி சிறப்பு, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**சிங்கம் :**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்.)
தொழில் கலக்கம், அன்னியரால் தொல்லை, புதிய முயற்சி, மறைமுக எதிர்ப்பு, பெரியோர் உதவி, உத்தியோக மாற்றம், மனக் கலக்கம், மாணவர் கல்வி மந்தம், முயற்சியின்மை, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07**

**துலாம் :**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.)
தொழில் முயற்சி, மன மகிழ்ச்சி, பணவரவு, பிரயாண மிகுதி, வெளியிட வாழ்க்கை, தேகசுகக் கவலை, உத்தியோகக் கஷ்டம், பெரியோர் உதவி, மாணவர் கல்வி மாற்றம், மனக் கலக்கம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**தனு :**
(மூலம், பூராடம், உத்தரா டத்து முதற்கால்.)
தொழில் நன்மை, அலைச்சல், பண விரயம், மனக் கவலை, வீண் பிரயாசம், அன்னியர் சகவாசம், உத்தியோகக் கலக்கம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி குழப்பம், புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**கும்பம் :**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.)
தொழில் பலிதம், குடும்ப வெளியிட நட்பு, பணச் செலவு, உத்தியோகப் பிரச்சினை, மனச் கிலேசம், மாணவர் கல்வி மந்தம், வெளியிடக் கல்வி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06.**

**இடபம் :**
(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.)
தொழில் நன்மை, பலவித பேறு, சுபகாரிய மகிழ்ச்சி, அன்னியர் நட்பு, உத்தியோக மேன்மை, புதிய பதவி மாற்றம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02.**

**கர்க்கடகம் :**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.)
தொழில் சிக்கல், பணியாளர் கலகம், பண விரயம், குடும்ப சுகம், சுபாகாரிய நன்மை, உத்தியோக மேன்மை, மாணவர் கல்வி குழப்பம், சோம்பல் மிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01**


**கன்னி :**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.)
தொழில் நன்மை, காரியனுகூலம், பலவித பேறு, தேகசுக நன்மை, உறவினரால் தொல்லை, உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, வியாபாரிகள், விவசாயிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02.**

**விருச்சிகம் :**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை.)
தொழில் பேறு, பணக் கஷ்டம், பிரயாச மிகுதி, இனசன நன்மை, உயர்ந்த வாழ்க்கை, உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்வு, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 05.**

**மகரம் :**
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)
தொழில் பேறு, பண முடங்கல், மனக் கிலேசம், அன்னியர் உதவி, உத்தியோகக் கஷ்டம், வீண் பிரயாசம், மாணவர் கல்வி உயர்ச்சி, வியாபாரிகள், விவசாயிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02.**


**மீனம் :**
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி.)
தொழில் மந்தம், மனக் கலக்கம், உறவினரால் கஷ்டம், பணச் செலவு, குடும்ப சுகம், சுபகாரியத் தடை, உத்தியோகக் கலக்கம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**


Regd. as a News Paper at the G.P.O.(QD/81/NEWS/2004)





# முரளி இல்லாமலா?

பாகிஸ்தானில் கிரிக்கெட் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருக்கும் இலங்கை அணி தற்போதைய நிலையில் ஒருநாள் போட்டிகளில் வெற்றியீட்டியுள்ளது. தவிரவும் டெஸ்ட் போட்டிகளிலும் சிறப்பாக ஆட முடியுமென்ற நம்பிக்கையையும் தெரிவித்துள்ளது. அண்மைக்காலமாக இலங்கை அணியில் நட்சத்திர சுழல் பந்துவீச்சாளரும், சாதனை வீரருமாகிய முத்தையா முரளிதரனின் பிரசன்னம் இல்லை என்பது இரசிகர்களுக்கு வேதனை. இலங்கையுடன் தமக்கிருக்கும் டெஸ்ட் போட்டிகளில் வெற்றி பெறும் வாய்ப்பு அதிகம் என்கிறார் இன்ஸமாம் உல் ஹக். அதற்குக் காரணமாக அவர் கூறுவது, தங்கள் அணி வீரர்களுக்குச் சவாலாக இருக்கக்கூடிய முத்தையா முரளிதரன் இலங்கை அணியில் இடம்பெறாததே என்கிறார். முரளிதரன் பங்குகொள்ளவில்லை என்பது பாகிஸ்தானுக்கு மட்டுமல்ல, எந்த எதிரணிக்கும் வாய்ப்பான விஷயம். ஆனால், சமகாலத்தில் இலங்கை அணி ஓரிரு ஆட்டங்களில் தோல்வியைத் தழுவினாலும் வெற்றி முகத்தோடு வலம் வருகிறது. இலங்கை வீரர்கள் தங்களால் முடியுமான முயற்சிகளை வெளிப்படுத்தி முரளிதரன் இல்லாத குறையைச் சரிசெய்துகொள்கிறார்கள். தற்போது கூட முதலாவது டெஸ்ட் ஆட்டத்தை ஜெயசூரியாவின் நிதானமான துடுப்பாட்டம் உற்சாகமூட்டியுள்ளது. இலங்கை அணி வீரர்களின் திறமை, இன்ஸமாமின் மனக் கணக்கைத் தப்புக் கணக்காக்குமா? பொறுத்திருந்து பார்ப்போம்.











## 1 ஆவது பிறந்தநாள் வாழ்த்து /24.10.2004



ரக்சிகா - ரக்சிகன்

அரசடித்தீவு கொக்கட்டிச்சோலையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட வன்னியசிங்கம் - கலாநிதி தம்பதிகளின் செல்வப் புதல்வர்களான ரக்சிகன் - ரக்சிகா இருவரும் தமது முதலாவது பிறந்ததினத்தை பிரான்ஸிலுள்ள தமது இல்லத்தில் 24.10.2004 அன்று வெகு விமரிசையாகக் கொண்டாடினார்கள். இவர்கள் இருவரையும் அன்பு அப்பா - அம்மா, இலங்கையிலுள்ள அம்மப்பா - அம்மம்மா, அப்பப்பா - அப்பம்மா, மாமாமார் - மாமிமார், சித்தப்பாமார் - சித்திமார், பெரியப்பாமார் - பெரியம்மாமார், மச்சான்மார் - மச்சாள்மார், பிரான்ஸில் வசிக்கும் சுதா மாமா, ரவி மாமா, வரதன் சித்தப்பா மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் கொக்கட்டிச்சோலை ஸ்ரீதான்தோன்றீஸ்வரன் அருள் பெற்று செந்தமிழ் உணர்வுடன் பல கலையும் கற்று நிறைவோடும் மகிழ்வோடும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: திரு - திருமதி வேலாப்போடி - தேவகியம்மா
(அம்மப்பா - அம்மம்மா)


# அமிர்தாஞ்சன்




அமிர்தாஞ்சன் பெயின் பாம் 100 ஆண்டுகளுக்கும் மேலாக அளைவரது நம்பிக்கையைப் பெற்றுள்ள பெயர். பலவிதமான வலிகளிலிருந்தும், நோவுகளிலிருந்தும் நிவாரணம் அளிக்கின்றன. ஜலதோஷத்துக்கு, கோல்ட் ரப் இப்பொழுது இலங்கையில் எல்லா இடங்களிலும் கிடைக்கின்றன. Imp. ரெலி: 2739899.




## நவராத்திரி 2004

கடந்த 20ஆம் திகதி பாராளுமன்றக் கட்டடத்தில் நடாத்தப்பட்ட நவராத்திரி விழா இலங்கை வரலாற்றில் முக்கிய சம்பவமாகப் பதியப்படுகிறது. இந்து சமய கலாசாரங்கள் தொடர்பான நிகழ்ச்சிகளோடு நவராத்திரி விழாவையும், சரஸ்வதி பூஜையையும் இந்துசமய விவகார அமைச்சோடு இணைந்து பாராளுமன்றக் குழுக்களின் தலைவர் சச்சிதானந்தம் ஏற்பாடு செய்திருந்தார். அந் நிகழ்வில் உள்ளூர் கலைஞர்கள் உட்பட இந்தியக் கலைஞர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தமை அந் நிகழ்வுக்கு மேலும் சிறப்புச் சேர்ப்பதாக அமைந்தது. பிரதம அதிதிகளாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, சபாநாயகர் லொக்கு பண்டார, அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, விஜித்த ஹேரத், பெர்ணான்டோ புள்ளே, பௌசி ஆகியோரும் மற்றும் தமிழ்க் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள், இ.தொ.கா. பாராளுமன்ற உறுப்பினர்கள், ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர்கள், ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கட்சி பேதங்கள் இல்லாமல் கலந்துகொண்டமை வரவேற்கத் தக்கது. பலரது கவனத்தையும் ஈர்த்த இந்தியக் கலைஞர்களின் ஒரு சில நாட்டியத் துளிகளே இவை.